வெளியீடு 22-3-99

Issued 22-3-99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 25, 1998 - தொகுதி 56 - எண் 2

Monday the 25th May, 1998—Volume 56 - No. 2

பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs: 3.00

427/99

## 25-05-1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 261-294 |
| 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-- | |
| (அ) சென்னை மாநகரக் காவற்படை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 295 |
| (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 295-296 |
| 3. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 2 - மாநில ஆயத் தீர்வைத் துறை--தொடர்ச்சி<br>(ஆ) கோரிக்கை எண் 15-காவல் துறை --தொடர்ச்சி<br>(இ) கோரிக்கை எண் 16-தீயணைப்புப் பணிகள்--தொடர்ச்சி | 296-367 |
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி | 297-304 |
| திரு. ம அப்துல் லத்தீப் | 304-313 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 313-322 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 323-358,359 |
| 4. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்--** | 368 |


53/96—1

218464

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வைகாசி 11, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 மே 25, திங்கட்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

*"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை*
*இகல்வெல்லல் யார்க்கும் அரிது."*

*சொல்லாற்றல் படைத்தவனாகவும், சோர்வு அறியாதவனாகவும், அஞ்சா நெஞ்சங்கொண்டவனாகவும் இருப்பவனை எதிர்த்து எவராலும் வெல்ல முடியாது.*

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *வினா எண் 581, திரு. ரா. சேதுநாதன் மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**581--**

**உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

***4012**--**திரு. ரா. சேதுநாதன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

[1998 மே 25

(அ) திண்டிவனம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் தரம் உயர்த்தப்படும்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக்கோரி கருத்துருக்கள் பெறப்பட்டால், பள்ளிகளின் நிலை உயர்த்த வகுக்கப்பட்ட நெறிமுறைகள் அடிப்படையிலும், உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும் உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன், இருக்கையில் இல்லை. வினா எண் 582, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**582--**

### கலைக் கல்லூரி அமைத்தல்

***13520--திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பெரம்பலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டமானது மிக மிகப் பிற்படுத்தப்பட்ட



1998 மே 25]

பகுதியாக இருக்கிற காரணத்தினாலே, அங்கு ஒரு கலைக் கல்லூரியோ அல்லது ஒரு தொழில்நுட்பக் கல்லூரியோ அமைக்க வேண்டியது மிக மிக இன்றியமையாத தேவையாக இருக்கிற காரணத்தினாலே, வருங்காலத்திலாவது இதுகுறித்து அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட பகுதியினுடைய முன்னேற்றத்திற்குக் கல்லூரிதான் ஏற்ற சாதனம் என்பதை நான் முழு அளவில் ஏற்றுக்கொள்ள இயலாது. எந்த இடத்திலேயும் கல்லூரியோ, தொழில்நுட்பப் பயிலகமோ ஏற்படுத்துவது என்பதைத் தற்காலிகமாக அரசு நிறுத்தி வைத்திருக்கிற காரணத்தால் இப்போது அதைப் பரிசீலிக்க வாய்ப்பு இல்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே ஏராளமான தொழிற்சாலைகள் உருவாகி வருகின்றன. வருங்காலத்திலே ஜெயங்கொண்டம் நிலக்கரிச் சுரங்கமும் அமைய இருக்கிறது. எனவே, அதைக் கருத்திற்கொண்டு ஒரு அரசு தொழில்நுட்பக் கல்லூரியையாவது உருவாக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்காலிகமாகத்தான் நான் விடை அளிக்க முடியும். நிரந்தரமான விடை அளிக்க எனக்கு வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என். பெரியசாமி.

**திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் தனியார் கலைக் கல்லூரிகள் நிறைய இருக்கின்றன. ஆனால், அரசு கலைக் கல்லூரி ஒன்றுமே இல்லை. அதை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் அடிக்கடி கொள்கையை மாற்றிக் கொள்வது இல்லை.

[1998 மே 25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 583, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**583--**

**சுயமுதலீட்டுத் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு**

*8399--**திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு மின்கோட்டத்தில் விவசாயிகள் அதற்குரிய கட்டணம் கட்டியும் சுயமுதலீட்டுத் திட்டத்தின்கீழ் மின் இணைப்புப் பெறுவதில் காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையை இங்கே தங்களுடைய அனுமதியோடு படிக்கிறேன். சுயமுதலீட்டுத் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு வழங்க, தேவையான மின் கம்பி இல்லாததால் சிறிது காலதாமதம் ஏற்பட்டது. பின்னர் 13-5-1997-ல் மின் கம்பி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டு விட்டது.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டுகூட சுயமுதலீட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. இந்த ஆண்டு மீண்டும் ஒதுக்கீடு தரப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டும் சுயநிதித் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.



1998 மே 25]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் single pole மின் இணைப்பு என்பது இப்போது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதை நடைமுறைப்படுத்துவதற்கு நம்முடைய அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "single pole" மின் இணைப்பு என்பது ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட சீனியாரிட்டி அடிப்படையிலேதான் தரப்படுகிறது. இது தொடர்ந்து மின்சார வாரியத்தால் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில், அதுவும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதிகளில் இரண்டு மின் கம்பிகள் எடுக்கப்பட்டு தெருவிளக்குகளுக்கு மட்டுமே மின் இணைப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதிலும் ஒருசிலர் தங்கள் வீடுகளுக்கு மின் இணைப்புப் பெறுவதற்கான வாய்ப்பு இருந்தும், இரண்டு கம்பிகள் மட்டும் செல்வதால், இயலாத நிலை இருக்கிறது. அனேகமாக ஆயிரக்கணக்கான கிராமங்கள் அப்படி இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே, அவற்றைப் போக்கக்கூடிய வகையிலே ஒரே திட்டத்தின் அடிப்படையில், தமிழகம் முழுவதிலும் அப்படி இருக்கிற பகுதிகளுக்கு மூன்றாவது மின் கம்பியை வழங்கி, வீடுகளுக்கு மின் இணைப்புகள் வழங்குவதற்கான வகையில் அரசிடம் திட்டம் இருக்கிறதா, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செயல்படுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்று ஏற்கெனவே தி.மு.கழகம் ஆட்சியில் இருந்தபோது, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஆணை பிறப்பித்தார்கள். அப்போது, காலனிப் பகுதிகளுக்கு மின் விளக்கு கொடுக்கப்படாமல்

விடுபட்டுவிட்டது. பிறகு, மின் விளக்கு அனைத்துக் கிராமங்களுக்கும் கொடுப்பது என்றால், காலனிப் பகுதிகளுக்கும் சேர்த்துக் கொடுத்தால்தான் இந்தத் திட்டம் நிறைவேறியதாகக் கருதப்படும் என்று அறிவித்து, அப்போது தெருவிளக்குகள் அனைத்துக் கிராமங்களுக்கும் அனுமதிக்கப்பட்டன. இப்போது எல்லாக் கிராமங்களுக்கும், எல்லா வீடுகளுக்கும், எல்லா குடிசைப் பகுதிகளுக்கும் மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதிலேயும் குறிப்பாக, புறம்போக்கு நிலங்களாக இருந்தாலும்கூட, அங்கே குடியிருப்பவர்களுக்கு, ஒன்று அவர்கள் வரி கட்டியிருந்தாலோ அல்லது குறைந்தபட்சம் ரேஷன் அட்டை வைத்திருந்தாலோ, அவர்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதன்படி மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 584, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**584--**

சித்த மருத்துவமனை தொடங்குதல்

***8417*-டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டில் புதிய சித்த மருத்துவமனை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தாலுகா மருத்துவமனை உட்பட 46 தாலுகா மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவு துவக்க அரசாணை நிலை எண் 558, மக்கள் நல்வாழ்வுத் துறை, நாள் 13-11-1997-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய காங்கேயம் தொகுதி, காங்கேயம் அரசு மருத்துவமனையில் 26-3-1998 அன்று சித்த மருத்துவப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தப் பிரிவுக்கு தற்போது தனிக் கட்டட வசதி இல்லாததால், சித்த முறையில் சிகிச்சைப் பெறுவதற்கு அதிக அளவில் வரத்தொடங்கியுள்ள நோயாளிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, காங்கேயம் மருத்துவ மனையில் சித்த பிரிவுக்கு என தனிக் கட்டட வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசிடம் கருத்துரு உள்ளதா? ஆம் எனில், அது இந்த நிதி ஆண்டிலேயே நிறைவேற்றிக் கொடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தினுடைய நோக்கம், முதலில் எல்லா மாவட்ட தாலுகா மருத்துவமனைகளிலேயும் சித்த மருத்துவப் பிரிவு தொடங்க வேண்டும் என்பது. அந்த அடிப்படையிலேதான் ஆண்டு ஒன்றுக்கு 10 தாலுகா மருத்துவமனைகளுக்கு சித்த மருத்துவப் பிரிவு ஒதுக்கப்பட்டதற்கு மாறாக, கடந்த ஆண்டு 46 தாலுகா மருத்துவமனைகளிலேயும் சித்த மருத்துவப் பிரிவு தொடங்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல, சித்த மருத்துவப் பிரிவு தொடங்கப்பட்டாலும், அங்கே கட்டட வசதிகள் இல்லை. அந்தக் கட்டட வசதிகளை இந்த ஆண்டு செய்து தருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. பாண்டுரங்கன்.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது போலி டாக்டர்களைக் கைது செய்கிறோம் என்று அறிவிப்பு வந்தவுடன், தற்போது சித்த மருத்துவர்கள் எல்லாம் தங்களுடைய தொழிலை விட்டுவிட்டு எங்கேயோ ஒளிந்துகொண்டிருக்கிற ஒரு துர்பாக்கியமான சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக, எனது பெரணமல்லூரில் 4 சித்த மருத்துவ டாக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அனைவருமே தங்களுடைய

[1998 மே 25

மருத்துவமனையை மூடிவிட்டுச் சென்றுவிட்ட காரணத்தால், அங்கே அவசரத்திற்கு ஒரு மருத்துவமனைகூட இயங்க முடியாத அளவிற்கு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அரசு இதை முறைப்படுத்தி, அவர்கள் பயந்து இருக்கிற சூழ்நிலையை மாற்றி, தொடர்ந்து அந்தத் தொழிலை அவர்கள் செய்வதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போலி டாக்டர்கள் கைது செய்யப்படும்போது சித்த மருத்துவர்கள் பயந்து ஓடவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் சட்டப்படி அந்தத் துறையிலே தேர்ச்சி பெற்று, சித்த மருத்துவப்பிரிவிலே பதிவு செய்து இருப்பார்களானால், தொடர்ந்து அந்தத் தொழிலைச் செய்யலாம். ஆனால், எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்கள் அலோபதி மருந்துகளைப் பயன்படுத்தக்கூடாது. இதைத் தவிர, வேறு எந்தக் கடுமையான விதிமுறைகளும் இந்த அரசாங்கத்தால் பிறப்பிக்கப்படவில்லை. எனவே, சித்த மருத்துவர்கள் போலி டாக்டர்களோடு தங்களை ஒப்பிட்டுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவர்கள் பயப்படவும் தேவையில்லை.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 585, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**585--**

### புதிய பயிர்களை அறிமுகம் செய்தல்

***9166-திரு. ஜி. நிஜாமுதீன்:***

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

போதிய நீர் ஆதாரம் இன்மையால் நெல் சாகுபடி பொய்க்கும் நாகப்பட்டினம் மாவட்டம் போன்ற பகுதிகளில் நிலத்தன்மைக்கேற்ப மாற்று, புதிய பயிர்களை அறிமுகம் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



1998 மே 25]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் பகுதியில் நிலத்தன்மைக்கேற்ப தற்போது நெற்பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. நெல் சாகுபடிக்குப் பின் தாளடியில் பயறு வகைகள் மற்றும் பருத்தி போன்ற பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக நாகப்பட்டினம் மாவட்டம், திருவாரூர் மாவட்டம், தஞ்சை மாவட்டம் போன்ற காவிரி டெல்டா பகுதிகள் நீர் வளம் இன்றியும் சமயங்களில் கடுமையான வறட்சியாலும் பாதிக்கப்படுகின்றன. பொதுவாக, மாறி மாறி இந்த நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இதைக் கவனத்தில்கொண்டு, மாற்றுப் பயறு வகைகளை அந்தப் பகுதிகளில் அறிமுகம் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன். குறிப்பாக, பருப்பு வகைகள் உலக அளவிலே இந்தியாவில் பெருமளவில் உற்பத்தி செய்தாலும்கூட, மிகவும் பெரிய அளவிலே இறக்குமதி செய்யும் நாடாகவும் இருந்துகொண்டிருக்கிறது. இதுபோன்ற பயறு வகைகள் அந்தப் பகுதிக்கு ஏற்றவையாக இருக்குமா என்பதையும், எண்ணெய் வித்துக்கள் போன்ற பயிர்களை பயிர் செய்ய முடியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பகுதியான நாகப்பட்டினம் மாவட்டத்தில் நெற்பயிர்தான் பெரும்பாலும் சாகுபடி செய்யப்படுகின்றது. சம்பா நெல் அறுவடைக்குப்பின், தாளடி முடிந்தபின் எண்ணெய் வித்துக்கள் பயிர் செய்ய அரசாங்கத்தால் பல்வேறு ஆலோசனைகள் வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. அந்த அடிப்படையிலே அந்த மாவட்டத்தில் எண்ணெய் வித்து, பயறு வகைகள் உற்பத்தி செய்வதற்கு முன்வரக்கூடிய விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகளையும் நாம் வழங்குகின்றோம். அதைப்போலவே, பாமாயில் எடுப்பதற்காக அந்த விதையை கன்செஷனில் கொடுத்து அதையும் நாம் ஊக்கப்படுத்துகிறோம். ஆக, விவசாயிகளை அந்த அடிப்படையிலே ஈர்த்து இந்த எண்ணெய்வித்துப் பொருளை உற்பத்தி செய்வதற்கு அதிகமான முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

[1998 மே 25

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று பருப்பு வகைகளுக்கு இந்த நாட்டிலே ஏகப்பட்ட கிராக்கி இருக்கின்ற காரணத்தினாலே, பருப்பு வகைகளை அந்தப் பகுதிகளில் சாகுபடி செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உளுந்து, பயறு வகைகளை உற்பத்தி செய்ய விவசாயிகளை நாம் ஊக்கப்படுத்துகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 586, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**586--**

## வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் தொடங்குதல்

***13273--திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியத்தில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தைத் தொடங்கி, தரமான பழங்கள் மற்றும் மலர்கள் உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரசிடம் தற்சமயம் திட்டம் ஏதும் இல்லை.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இந்தப் பகுதியிலே மல்லிகை மலர்கள் அதிகமாக உற்பத்தியாகின்ற காரணத்தினால் வாசனைத் திரவிய தொழிற்சாலை ஒன்றும், அதைப் போல, தக்காளிப் பழங்கள் அதிகமாக விளைகின்ற காரணத்தினால் பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும், இவைகளை எல்லாம் பாதுகாக்க ஒரு குளிர்சாதனக்கிடங்கு ஒன்றும் கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் உற்பத்தி குறைவாக இருக்கின்ற காரணத்தினால் இதெல்லாம் சாத்தியமில்லை என்று



1998 மே 25]

ஏற்கெனவே பதில் கூறி இருந்தார்கள். ஆகவே, இந்தப் பகுதியிலே ஒரு ஆராய்ச்சி மையத்தைத் துவக்கி, அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கி, அந்தக் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள், இந்தக் கேள்வியையொட்டி மல்லிகைப்பூவிலிருந்து வாசனை திரவியத்தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படுமா என்றெல்லாம் கேட்டு, நான் பதில் அளித்து இருக்கின்றேன். இப்போது அவர்கள் அங்கே ஒரு ஆராய்ச்சி மையம் அமைக்கப்படுமா என்று கேட்கின்றார்கள். இந்த ஆண்டுதான் சேலம் மாவட்டம் காரியாபட்டியிலிருந்து ஆத்தூருக்குப் போகக்கூடிய வழியில், ஏத்தாபூரில் மரவள்ளிக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்று தொடங்கி இருக்கிறோம். அதைப்போலவே, காடையாம்பட்டியிலிருந்து 35 கிலோமீட்டர் தூரத்தில் ஏற்காட்டிலே--டேனிஷ்பேட்டை வழியாகப் போனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும், பழங்கள் மற்றும் மலர்கள் ஆராய்ச்சிக்கான, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் ஒரு தோட்டக் கலை ஆராய்ச்சி நிறுவனம் இருக்கிறது. இதற்கிடையிலே இன்னொரு ஆராய்ச்சி நிலையம் காடையாம்பட்டி ஒன்றியத்திலே அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் தற்சமயம் இல்லை.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பாப்பாரப்பட்டியிலே வேளாண் பயிற்சி மையம் ஒன்று நீண்டகாலமாக இயங்கி வந்தது. அது சமீபகாலத்திலே மூடப்பட்டு, இயங்காதநிலையிலே கட்டடங்கள் எல்லாம் சீரழிந்து கொண்டிருக்கின்றன. அந்த வட்டாரம் முழுவதும் தரமான பருத்தி, கரும்பு, பழ வகைகள், பூக்கள் எல்லாம் அதிக அளவிலே பயிரிடப்படுகின்ற காரணத்தினாலே, அந்தப் பயிற்சி மையம் மீண்டும் துவங்கப்பட ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1998 மே 25

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்.** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. தனியாக அவர் கேள்வி எழுப்பினால் தகுந்த தகவல்களைப் பெற்றுத்தர உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இருப்பினும், அவர் எழுப்பிய அந்தக் கேள்வியைப் பயன்படுத்தி துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஏற்காட்டிலே பழங்கள் குறித்த ஒரு ஆராய்ச்சி நிலையம் ஏற்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். டேனிஷ்பேட்டையிலிருந்து ஏற்காடு செல்லும் சாலையானது, வனத் துறையின் நிர்பந்தத்தினால், பொதுமக்களுடைய போக்குவரத்தைப் பாதித்து இருக்கிறது. ஆகையால், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், இந்தப் போக்குவரத்தை வனத் துறை மூலமாகச் சீர்செய்து தருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய இந்தக் கேள்வியை நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திலே எடுத்துக்கொண்டு--ஏற்கெனவே போடப்பட்டு பொது மக்கள் பயன்படுத்திக்கொண்டு இருக்கக்கூடிய அந்தப்பாதையை போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் வைத்துக்கொள்ள, வனத் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்திலே எடுத்துக்கொள்வார் எனக் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண். 587, திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**587--**

**மழை நீரைத் தேக்கி விவசாயத்திற்குப் பயன்படுத்துதல்**

***7334--திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--



1998 மே 25]

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதி, நட்டாத்தி, கட்டாலங்குளம் கிராமங்களில் மழைக்காலத்தில் வீணாகக் கடலில் கலக்கும் தண்ணீரைத் தேக்கி விவசாயத்திற்குப் பயன்படுத்தப் புதிய குளங்கள் (சர்வே எண் 9-16, 18 வரை) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம். சிதம்பரனார் மாவட்டம், திருவைகுண்டம் வட்டம், கட்டாலங்குளம் கிராமத்தில் சர்வே எண் 417 மற்றும் 418-ல் குளம் அமைக்க, ரூ. 14 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால், வினாவில் கேட்கப்பட்டுள்ள சர்வே எண் 9-16, 18-ல் இல்லை. மற்றும், நட்டாத்தி கிராமத்திலே புதிய பாசனத் திட்டம் ஏதும் இல்லை.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டாலங்குளம் கிராமத்தில் புதிய குளம் அமைப்பதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல, நட்டாத்தி கிராமமும் மிகவும் வறண்ட பூமியாகும். அங்கே உப்புத் தண்ணீர்தான் நிலத்தடி நீராக இருக்கிறது. எனவே, அங்கே ஒரு புதிய குளம் அமைப்பதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களேயானால், அந்தப் பகுதியிலே நல்ல நிலத்தடிநீர் உருவாவதற்கும், உப்புநீர் நன்னீராவதற்கும் வாய்ப்பாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நட்டாத்தி கிராமத்திலே புதிய குளம் அமைக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டாலங்குளம் கிராமத்திலேதான் ஏற்கெனவே பழுதடைந்து போய் இருந்த ஆலங்குளம் என்கிற ஒரு குளத்தை தூர் வாரி செப்பனிட்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், நட்டாத்தி, கட்டாலங்குளம் பகுதியிலே பெய்கிற காட்டு மழையெல்லாம் தாமிரபரணியினுடைய கடைசிக் குளமான பெருங்குளத்திற்குதான் போகிறது. மொத்தம் 18 மில்லியன் கன அடி தண்ணீர் போகும் என்று கணக்கிட்டிருக்கிறோம். அதிலிருந்து 7 மில்லியன் கன அடி

[1998 மே 25

தண்ணீரையாவது தேக்கி ஒரு புதிய குளத்தை அமைத்து பாசனப் பகுதியாகச் செய்யலாம் என அரசு முடிவு எடுத்திருக்கிறது. அது ஆய்வில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்மாய் அமைக்கக்கூடிய சூழ்நிலையிலே மழையில்லாமல் வறண்ட பகுதியாக இருக்கின்றதே, அந்த வறண்ட பகுதிகளில் எல்லாம் இப்பேர்ப்பட்ட செக்டாம்களை அமைப்பதற்கு ஏதாவது வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி இல்லாவிட்டால் இனிமேலாகிலும் மாநிலம் முழுவதிலும், எங்கெங்கே வறண்ட பகுதிகளாக இருக்கின்றதோ, அந்தந்தப் பகுதிகளிலேயெல்லாம் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறண்ட பகுதிகளிலே மழைக்காலத்திலே வருகிற தண்ணீரைத் தேக்கி நிறுத்தி, பாசனத்திற்கும், குடிநீருக்கும் வழிவகை செய்வதற்காகத்தான் இப்படிப்பட்ட சிறு, சிறு அணைகளைக் கட்டுகிறோம். அதைத்தான் என்னுடைய மானியக் கோரிக்கையில் பார்த்தால்--பார்ட் 2 ஸ்கீம் என்று சொல்லுவார்கள். புது திட்டங்கள்-- ஆண்டுக்கு 20 திட்டங்கள், 30 திட்டங்கள் என்று எடுத்துக்கொண்டு இருக்கிறோம். இந்த ஆண்டும் அப்படி எடுத்து இருக்கிறோம்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்குப் பயன்படுகின்ற வகையில் மாநிலத்தில் சிறிய ஆறுகளில் எந்த எந்தப் பகுதிகளில் இப்படி செக்டாம் கட்டினால் விவசாயிகளுக்குப் பயன்படும், நிலத்தடி நீரை நல்ல நீராகத் தர முடியும் என்ற அந்த வகையில் ஒரு கொள்கை முடிவு எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆறுகள் உள்ள பகுதிகளில் கேச்மெண்டு



1998 மே 25]

ஏரியா என்று சொல்லுவார்கள். அங்கே பொழிகின்ற மழையின் அளவு பல ஆண்டுகளாகத் தொடர்ந்து மழை பொழிந்தால் எவ்வளவு மழை பொழுகிறது என்ற கணக்கு, பிறகு அவற்றைத்தேக்கிய நேரத்தில் அதனால் யார் யார் பயனடைகிறார்கள் என்ற கணக்கு, அது குடிநீராக எவ்வளவு பயன்படும், நிலத்தடி நீராக எவ்வளவு பயன்படும் என்ற கணக்கு இவற்றை எல்லாம் பொதுப் பணித் துறை ஆய்வு நடத்துகின்றது. அதற்கென்று தனியாக ஒரு விங்கே பொதுப் பணித் துறையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 588, திரு. த. நடராஜன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**588--**

## ஆற்றில் செக் டாம் அமைத்தல்

***9382--திரு. த. நடராஜன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) செஞ்சியில் ஓடுகின்ற சங்கராபரணி ஆற்றின் குறுக்கே ஆங்காங்கே செம் டாம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

**திரு. த. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செஞ்சி ஒரு வறட்சி மிகுந்த பகுதி. வானம் பார்த்த பூமி. இங்கு விவசாயிகள் பெரும்பாலும் கிணற்றுப் பாசனத்தைத்தான் நம்பியிருக்கிறார்கள். ஏறக்குறைய 75 சதவீதம் கிணற்றுப் பாசனத்தை நம்பியிருக்கிற இந்த விவசாயிகளின் நன்மை கருதி இந்த ஆற்றின் குறுக்கே இப்படிப்பட்ட செக் டாம் அமைத்தால், இந்த ஆற்று நீர் அந்தக் கிணறுகளுக்கு ஊற்றாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதனால் விவசாயிகளுக்கு மிகவும் நன்மையாக அமையும்.

[1998 மே 25

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதியை நன்கு அறிந்தவர்கள். இந்த ஆற்றைப் பற்றியும் நன்கு தெரிந்தவர்கள். அதனால், எங்களுடைய விவசாயிகளுடைய கண்ணீரைப் போக்குகின்ற வகையில் இந்த ஆற்றின் குறுக்கே செக் டாம் அமைக்க மறு ஆய்வு செய்வார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல, செஞ்சி பகுதி கொஞ்சம் வறண்ட பகுதிதான். அங்கே ஓடுகிற ஆற்றுக்கு சங்கராபரணி ஆறு என்று பெயர். அந்த ஆறு அதற்கு முன்னாலே வராகநதி என்று பெயர் பெற்று இருந்தது. மலையனூர் ஏரியிலிருந்து புறப்படுகின்ற ஆறு, வராக நதியாக வந்து, முடையூர் அணைக்கட்டு வரையில் வந்து, பிறகு சங்கராபரணி என்ற பெயரோடு ஓடுகிறது. இன்னொரு ஆறு மேல் ஒலக்கூர் பகுதியிலிருந்து வருகிறது. திண்டிவனம் பகுதியில் அதற்கு தொண்டி ஆறு என்று பெயர். இந்த இரண்டு ஆறுகளும் ஓரிடத்தில் இணைகின்றன. வீடூருக்கு மேலே ½ கிலோ மீட்டர் தூரத்தில் இணைகின்றன. எனவே, இன்றைக்கு இந்த சங்கராபரணி ஆற்றில் வருகிற தண்ணீரும், தொண்டி ஆற்றில் வருகிற தண்ணீரும் தான் வீடூர் டாமுக்கு வருகிறது. அந்த வீடூர் டாமுக்கு சாதாரண காலங்களில் போதிய அளவுக்கு தண்ணீர் வருவது இல்லை. 604 மில்லியன் கன அடி தண்ணீர், அதன் கொள்ளளவு. நம்முடைய மாநிலத்தில் 2200 ஏக்கர் பாசனம், பாண்டிச்சேரியில் ஆயிரம் ஏக்கர் பாசனம்.

மூன்றாவதாக, இன்னும் ஒன்றையும் நான் சொல்லுகிறேன். செக் டாம் கட்டக்கூடாது என்பது அல்ல. நான் முன்பு சொன்னேன், வராக நதியும் சங்கராபரணியும் ஒரு ஆறு, தொண்டி ஆறு இரண்டாவது ஆறு. இந்த வராக நதியில் ஏற்கெனவே பார்த்தால் சத்தியமங்கலம் அணை, தென்பாளை அணை, அதேபோல் சியாம்பூண்டி அணை, மேல் புதுப்பட்டு அணை, கூறப்பட்டு அணை, செம்பலகன்று அணை, அதற்குப் பிறகு இன்னும் கீழே வந்தால் கன்னல அணை, கடலை அணை, சேனை அணை அதற்குப் பிறகு ஜம்போதி அணை, பொன்பத்தி அணை, மொடையூர் அணை, அதற்குக் கீழே இருக்கின்ற நெடிமொடியானூர் ஏரியில் பேரணை வரையில் 14 அணைகள் ஏற்கெனவே வராக நதி சங்கராபரணி ஆற்றில் கட்டப்பட்டுவிட்டன. அந்தப் பகுதியில் தொண்டூரிலே



1998 மே 25]

பார்த்தால் தொண்டூர் அணை, அதற்குக் கீழே மேல் ஒலக்கூர் அணை, அரியூர் அணை, நங்கியானந்தல் அணை, மேலத்தூர் அணை, இரட்டை அணை, செண்டூர் அணை, பாதிரியார் புதூர் அணை இப்படி 8 அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆக மொத்தம், இந்த சங்கராபரணி ஆற்றிலும், தொண்டி ஆற்றிலும் ஏற்கனவே 22 அணைகள் கட்டப்பட்டு விட்டன. அதிலே வராக நதி-சங்கராபரணி ஆற்றுப் பகுதியில் 6500 ஏக்கருக்கும், 45 ஏரிகளுக்கும், தொண்டி ஆற்றின் மூலம் 2200 ஏக்கருக்கும் பாசன வசதி அளிக்கிறோம். இதற்கு மேலே ஒரு செக் டாம் அதிலே கட்டுவது என்பது முடியாத காரியம். ஆகவேதான், நான் சொன்னேன். ஏற்கனவே இருக்கிற 22 செக் டாம்களின் மூலம் அந்தத் தண்ணீர் கொடுப்பதற்கும், பாசனம் கொடுப்பதற்கும், வீடூர் டாமுக்கும் போதிய நீர் இல்லாத காரணத்தால் மேலும் செக்டாம் கட்டுவதற்கு சாத்தியக்கூறு இல்லை என்பதுதான் எங்களுடைய அரசினுடைய முடிவு.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 589, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**589--**

**நகரப் பேருந்து இயக்குதல்**

***3570--திரு. ஜி. கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்திலிருந்து பாலக்கோட்டிற்கு நகரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோரிக்கைத் தடத்தின் நீளம் 30 கிலோ மீட்டருக்கும் அதிகமாக உள்ளதால் நகரப் பேருந்து இயக்க இயலாது.

[1998 மே 25

அதனால், புறநகர்ப் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நகரப் பேருந்து இல்லையென்று சொன்னாலும் கூட, புறநகர்ப் பேருந்து இயக்குவதற்காக அமைச்சரவர்கள் அறிவித்தமைக்கு மிக்க நன்றி சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 590, திரு. கோ. தளபதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**590--**

**அகல இரயில் பாதைகள் அமைத்தல்**

***6287--திரு. கோ. தளபதி:***

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாட்டில் அகல இரயில் பாதைகள் அமைத்திட அண்டை மாநிலங்களுக்கு இணையாக நிதி ஒதுக்கீடும், திட்ட விரிவாக்கத்திற்கு அனுமதியும் பெற மத்திய அரசை வலியுறுத்த மாநில அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம். நமது மாநிலத்திற்கு அண்டை மாநிலங்களுக்கு இணையாக நிதி ஒதுக்கீடும், திட்ட விரிவாக்கத்திற்கு அனுமதியும் கேட்டு தொடர்ந்து மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வருகின்றது.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நமது பக்கத்து மாநிலமான கர்நாடகத்திலே அகல இரயில் பாதைத் திட்டததை முழுவதும் நிறைவேற்றி விட்டார்கள். கேரளாவிலே இருவழிப்பாதை இருக்கிறது. வட மாநிலங்கள் முழுவதும் இருவழிப் பாதை இருக்கிறது. ஆனால், தமிழகத்திலே மூன்றாண்டுக் காலமாகியும், சென்னைக்கும் மதுரைக்கும் இடையே உள்ள பாதையை அகல இரயில் பாதையாக இன்றுவரை மாற்றவில்லை. அதைப்போல, நாகூர்-திருச்சி அகல இரயில் பாதைப்பணி 3 வருடமாக ஆமை வேகத்திலே நடைபெறுகிறது.



1998 மே 25]

இதற்கெல்லாம் மத்திய அரசுக்கு ஒரு பாடம் புகட்டக்கூடிய வகையிலே, நமது மாநிலத்திலேயுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களையெல்லாம் ஒன்று திரட்டி, இந்த நிதியைப் பெற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது உண்மையான கூற்றுதான். தென் மாநிலங்களிலே நம்முடைய மாநிலம், அகல இரயில் பாதைகளைப் பொறுத்தவரையில், மிகவும் குறைந்த அளவே பெற்றிருக்கிறது. கேரளாவிலே இப்பொழுது 11 சதவீதம் மட்டும்தான் குறுகிய இரயில்பாதை-மீட்டர் கேஜ்-இருக்கிறது. கர்நாடகத்திலே ஏறக்குறைய முடிவு பெற்றிருக்கிறது. ஆனால், தமிழகத்திலே இன்னும் 60 சதவிகிதத்திற்கும் மேலே மீட்டர் கேஜ் இரயில் பாதைகள்தான் இருக்கின்றன. ஆகவே, இதை வலியுறுத்தி மாண்புமிகு முதல்வரவர்கள் முழுமையான முயற்சியை மேற்கொண்டு, முன்னாள் மாண்புமிகு இரயில்வே அமைச்சரவர்களுடன்-அவர் சென்னைக்கு வருகை தந்திருந்தபொழுது அவரோடு கலந்தாலோசித்து, அமைச்சரவைக் கூட்டத்திலேயே- 6-7-1996-இல் தமிழகத்திற்கு வேண்டிய திட்டங்களைப் பற்றியெல்லாம் ஆய்வு செய்திருக்கிறார்கள். மேலும், முதலமைச்சரவர்களே 20-1-1997-இல் ஒரு நினைவூட்டுக் கடிதத்தை எழுதினார்கள். 26-4-1997-இல் மீண்டும் ஒரு நினைவூட்டுக் கடிதத்தை எழுதியிருக்கிறார்கள். அதற்குப்பிறகு, போக்குவரத்துத் துறையின் மூலமாக நானும், 23-11-1997-இல் ஒரு நினைவூட்டுக் கடிதம் எழுதியிருந்தேன். மாண்புமிகு முன்னாள் இரயில்வே அமைச்சரவர்களைப் பலமுறை நேரிலே சந்தித்தும் இதைப் பற்றி வலியுறுத்தியிருக்கிறோம். புதிய அரசு வந்ததற்குப் பிறகு முதல்வரவர்கள் 9-4-1998-இல் இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். 5-5-1998-லே மறுபடியும் ஒரு நினைவூட்டுக் கடிதத்தை எழுதி வலியுறுத்தியிருக்கிறார்கள். 14-5-1998 அன்று நானே மத்திய இரயில்வே துறை அமைச்சரவர்களை நேரில் சந்தித்து இத்திட்டங்களையெல்லாம் வலியுறுத்தியிருக்கிறேன்; வற்புறுத்தியும் இருக்கிறேன். மற்ற மாநிலங்களைவிட இந்த ஆண்டு நம் மாநிலத்திற்கு அகல இரயில் பாதை அமைப்பதற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி இருக்கிறோம். அவரும் நிச்சயமாக அதைக் கவனிப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு நிச்சயமாக அதிக நிதி கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம்.

[1998 மே 25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அகல இரயில் பாதை விரிவாக்கத் திட்டத்திற்காக மத்திய அரசை வலியுறுத்துகின்ற அந்த நிலைகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுத்துரைத்தார்கள். இப்பொழுது சென்னையிலிருந்து விழுப்புரம் வரையிலே அகல இரயில் பாதைத் திட்டப் பணிகள் நடக்கின்றன. அதைத் தொடர்ந்து விழுப்புரத்திலிருந்து கடலூர் நகருக்கு அகல இரயில் பாதை அமைப்பதற்கும், அங்கே அமையக்கூடிய துறைமுகம், இன்னமும் மற்றுமுள்ள பல்வேறு நிலைகளின் காரணமாக முன்னுரிமை கொடுத்து அந்தப் பணியை எடுப்பதற்கும் நமது அரசு மத்திய அரசை வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியிருப்பதைப் போல, இப்பொழுது சென்னையிலேயிருந்து திருச்சி வரையான பணிகள் வரும் ஜூன் அல்லது ஜூலை மாதத்திற்குள் முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு எடுக்கப்படுகிற அகல இரயில் பாதைகளில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியது-முதல் பிரையாரிட்டி என்று அரசின் மூலமாக வலியுறுத்தப்பட்டிருப்பது--விழுப்புரத்திலிருந்து தஞ்சை வரை செல்கிற அந்த மெயின் லயனைக்குறித்து வலியுறுத்தியிருக்கிறோம். அதேபோல, திருச்சியிலேயிருந்து நாகூர் வரை திட்டமிடப்பட்டிருந்தாலும் அது தஞ்சாவூரோடு நின்றுவிட்டிருக்கிற சூழ்நிலையில் தஞ்சாவூர்-நாகூர் வரையுள்ள அந்தப் பணியையும் விரைவுபடுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தியிருக்கிறோம். ஆகவே, இந்த ஆண்டு இவைகளெல்லாம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 591, திரு. கோ. மோகனதாசன். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**591--**

### உப்பனாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

***4112--திரு. கோ. மோகனதாசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--



1998 மே 25]

கிழக்குக் கடற்கரைச் சாலையில் பூம்புகார் தொகுதி தரங்கம்பாடியில் உப்பனாற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம் பழுதடைந்துள்ளதால், புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்கம்பாடி-காரைக்கால் சாலையில் கிலோமீட்டர் 0/4ல் உப்பனாற்றின் குறுக்கே அமைந்துள்ள பழுதடைந்த பாலத்தினைத் திரும்பக் கட்டும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதலளிக்கப்பட்டு, ஒப்பந்தக்காரரின் ஒப்பந்த உடன்படிக்கை 24-7-1997ல் ஏற்கப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. ஒப்பந்த உடன்படிக்கையின்படி இப்பாலப்பணி 18 மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.

முற்பகல் 10-00

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி நான் முன்பே எழுப்பிய கேள்வி. ஆனால் வேலை இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 592, திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**592--**

### வெட்டாறு பாலத்தைப் புதுப்பித்தல்

***7220--திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை தொகுதி ஆத்துக்குடி ஊராட்சியின் எல்லையிலுள்ள வெட்டாறு பாலம் உடைந்துள்ளதால் மயிலாடுதுறை-சென்னை போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

[1998 மே 25

(ஆ) ஆம் எனில், அந்தப் பாலத்தைப் புதுப்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிட்டுள்ள பாலம் திரும்பக் கட்டும் பணியை நிரந்தர வெள்ள நிவாரணப் பணியின் கீழ் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை தாலுகா, வெட்டாறு பாலம் உடைந்து பழுதடைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்தப் பாலத்தை உடனடியாகச் செப்பனிட்டுத் தருவதாக முன்னால் இருந்த மந்திரி சபையில் ஒத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், இதுவரை அந்த வேலை நடக்கவில்லை. சென்னைக்கும் மற்றும் பல இடங்களுக்குச் செல்ல வேண்டியவர்கள் அந்தப் பாலத்தின் வழியாகச் செல்ல வேண்டியிருப்பதால் மழைக் காலங்களில் போக்குவரத்து தடைபட்டுவிடுகிறது. ஆகையினால், அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, அந்தப் பாலத்தை உடனடியாக, காவிரியிலே தண்ணீர் வருவதற்கு முன்பே கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறை தொகுதி, ஆத்துக்குடி ஊராட்சியின் எல்லையில் உள்ள வெட்டாறு பாலம் உடைந்து போய்விட்ட காரணத்தினால் மீண்டும் கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு 6-5-1997 அன்று அதற்கான அரசாணையும் பிறப்பிக்கப்பட்டது. Technical Sanction 66 இலட்சம் ரூபாய்க்கு, அனுமதி வழங்கப்பட்டது. முதலில் 31-12-1997 அன்று ஒரு டெண்டர் கேட்கப்பட்டது. அதற்கு யாரும் முன்வரவில்லை. மீண்டும் இரண்டாவதாக 29-1-1998 அன்று டெண்டர் கேட்கப்பட்டது. அதற்கும் யாரும் முன்வரவில்லை. மூன்றாவதாக 25-2-1998 அன்று டெண்டர் கேட்கப்பட்டது. அதிலே டெண்டர் போட்டிருக்கிறார்கள். 55 சதவீதம் அதிகமாக, மதிப்பீட்டுக்கு அதிகமாக, டெண்டர் கேட்கப்பட்டிருக்கிறது. எனவே, இதுகுறித்து டெண்டர் கமிட்டி முடிவு செய்ய வேண்டும். பொதுவாக,



1998 மே 25]

நம்முடைய கழக அரசில் குறைந்தது 5 சதவீதம் மதிப்பீட்டைவிட குறைந்த டெண்டர் வந்தால் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். அதனால், அரசுக்கு ஏராளமான நிதியாதாரம் கிடைக்கின்றது. பலன் கிடைக்கின்றது. எனவே, அதிகமான அளவு டெண்டரிலே குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தினால் 66 இலட்சம் ரூபாய் அரசு மதிப்பீடு, ஆனால், ரூ. 92.84 இலட்சத்திற்கு அவர்கள் டெண்டர் quote செய்திருக்கிறார்கள். ஆகவே, இதுகுறித்து டெண்டர் கமிட்டி முடிவு செய்து, அதற்குப்பிறகு அரசு முடிவு செய்ய வேண்டும். எனவே, இந்தக் காரணத்தினாலே இந்தத் திட்டம் காலதாமதம் ஆகிறது. மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய ஒப்பந்தக்காரர்களிடத்திலே கலந்துபேசி இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு அவர் ஒத்துழைப்புத் தந்தால் இந்தப் பாலம் விரைவிலே கட்டி முடிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 593, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

## 593--

### உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் குறைபாடுகளை நீக்குதல்

*4729--**திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெள்ளி விழாவினைக் கொண்டாடவிருக்கும் இவ்வேளையில், அங்கு பணிபுரிபவர்களுக்கு ஓய்வூதியம் வழங்காத, பிறமொழி மாற்றம் செய்வதற்காகவுள்ள ஆய்வகம் செயலற்று இருப்பது போன்ற குறைபாடுகள் அனைத்தும் நீக்கப்படுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரசின் ஆய்வில் உள்ளது.

[1998 மே 25

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலே பணியாற்றக்கூடியவர்களுக்கு நீண்டகாலமாக ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்று தெரியவந்தது. அது ஆய்வில் உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். எப்போது ஆய்வு முடிந்து அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்? இரண்டாவதாக அங்கே இயங்குகின்ற மொழிக் கூடம், வெளிநாட்டவர்களுக்கும் பிறமொழி பேசுகின்றவர்களுக்கும் உதவியாக இல்லாமல் செயலற்று இருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே, அங்கே சீர்திருத்தம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா? அதிலே முன்னேற்றம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓவிய நுண்கலைக் குழு போன்ற தனி அமைப்புகளுக்கு ஏற்கெனவே ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அந்த அடிப்படையில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் இருப்பவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுமென்று அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அதனுடைய முடிவு தெரிந்தபிறகு முறைப்படி அது செயற்படுத்தப்படும். குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள், இந்த நிறுவனத்தில் தங்கித் தமிழைப் பயிலுவதற்கான வாய்ப்பாகத்தான் இந்த மொழி ஆய்வுக்கூடம் --Language Laboratory-- என்பது அமைக்கப்பட்டது. இது UNESCO-வினுடைய உதவியோடு 1974 வது ஆண்டில் அமைக்கப்பட்டு, இப்போது 24 ஆண்டுகள் ஆகிவிட்ட காரணத்தாலே சில அலகுகள் பயனற்று, பழுதுற்றுப் போயிருக்கின்றன. எனவே, அவற்றைப் பழுதுபார்ப்பதற்கான நிறுவனமும் இப்போது இந்தியாவில் இல்லை. ஏற்கெனவே இருந்த அந்த நிறுவனம் இப்போது செயலற்றுப் போய்விட்ட காரணத்தாலே, இதைப் பழுது பார்க்கக்கூடிய பணி தேங்கி நிற்கிறது. என்றாலும்கூட, இதனுடைய பேணுதலுக்காக 75,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு, இப்போது பழுது பார்க்கும் பணிகள் நடைபெறுகின்றன. ஏற்கெனவே இயங்குகின்ற அலகுகளைக் கொண்டு வெளிநாடுகளிலிருந்து வந்து, தங்கித் தமிழ் பயிலுபவர்களுக்கு முறையாக மொழிப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 594, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.



1998 மே 25]

**594--**

### பெருமாள் கோவிலைப் புதுப்பித்தல்

***8048--திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாங்குநேரி தொகுதி, செண்பகராமநல்லூரிலுள்ள பழுதடைந்த பெருமாள் கோவிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நாங்குநேரி தொகுதி, செண்பகராமநல்லூரில் உள்ள பழுதடைந்துள்ள பெருமாள் கோவிலைப் புதுப்பிக்க ரூ.12,55,000/- மதிப்பீட்டில் 8 திருப்பணி வேலைகள் செய்யப்பட வேண்டியுள்ளன. மேற்படி தொகை அதிகமாக உள்ளதால் உபயதாரரைக் கொண்டோ, நன்கொடை வசூல் செய்தோ இத்திருப்பணியைச் செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே, திருப்பணிக் குழு அமைத்து நிதி ஆதாரம் குறித்து ஆய்வு செய்து நிதிநிலையைப் பொறுத்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 595, திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**595--**

### சமூக, கல்வி மற்றும் பொருளாதார ஆய்வு

***14921--திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[1998 மே 25

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் தமிழ்நாட்டில் முழு அளவிலான சமூக, கல்வி மற்றும் பொருளாதார ஆய்வு நடத்த அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலை குறித்து கணக்கெடுப்பு நடத்துவதற்கான செயற்குறிப்பு, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திடமிருந்து அரசுக்கு வரப்பெற்றுள்ளது. இதே கோரிக்கை பல சமூகச் சங்கங்களிலிருந்தும் அரசுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. விரிவான கணக்கெடுப்பிற்குப்பிறகு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வாழும் இடங்கள், தொழில், சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலை ஆகியவற்றை விளக்கும் தொகுப்புக் குறிப்பு தயாரிக்கப்பட வேண்டும் என்று மாநில திட்டக் குழுவும் வலியுறுத்தியுள்ளது. மேலும் மைய அரசின் இதர பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சில வகுப்புகளைச் சேர்ப்பது குறித்து பரிசீலனை செய்ய ஏதுவாக அவ்வகுப்புகளின் மக்கள் இனப்பிரிவு தொடர்பான இலக்கியங்கள் மற்றும் அவ்வகுப்புகளின் சமூக மற்றும் கல்வி நிலைகளை நிலைநாட்டும் விவரங்கள் ஆகியவற்றை அனுப்பிவைக்குமாறு தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

(ஆ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பிலே முழு அளவிலே சமூக, கல்வி மற்றும் பொருளாதார ஆய்வு நடத்த புள்ளிவிவர இலாகா மூலமாக, ஏதேனும் மதிப்பீட்டுத் தொகை கோரப்பட்டுள்ளதா? ஆம் எனில், அது எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசின் பரிசீலனையில் இருப்பதால், பரிசீலனை முடிந்த பின்னரே இதற்குப் பதில் அளிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1998 மே 25]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 596, திரு. ஏ. ராசேந்திரன், மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**596--**

### சேதமடைந்த பாலத்தைச் செப்பனிடுதல்

***15890--திரு ஏ. ராசேந்திரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வேலூர் மாவட்டம், போளூர் தொகுதி, அமிர்தி அருகில் நாக நதியின் குறுக்கே வனத் துறையால் கட்டப்பட்டுள்ள பாலம் மழையின் காரணமாக சேதமடைந்தும், போக்குவரத்து பாதிக்கப்பட்டும் உள்ளதால் அதனைச் செப்பனிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள கிண்ணிகுளம்-அமிர்தி சாலையில் நாகநதியின் குறுக்கே அமைந்துள்ள பாலம் 1994-95-ஆம் ஆண்டில் வனத் துறையால் கட்டப்பட்டது. 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் அக்டோபர் வரை பெய்த பெருமழையின் காரணமாக, வெள்ளம் ஏற்பட்டு சாலை மற்றும் பாலம் இணைப்புப் பகுதி வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது. திருச்சி வனப் பொறியியல் கோட்டம் மூலமாக பாலத்தைச் சீரமைக்கும் பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போதுள்ள தகவல்படி 15-5-1998-ல் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன் இருக்கையில் இல்லை, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கு இருக்கக்கூடிய அமிர்தி சுற்றுலா மையத்திற்குப்

[1998 மே 25

போக வேண்டும் என்று சொன்னால், இந்தப் பாலம் அமைந்ததற்குப் பின்னால்தானே போக முடியும். இல்லையென்று சொன்னால், அங்கு போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது. பல காலமாக அதை எடுத்த காண்ட்ராக்டர்கள் எல்லாம் அதைக் கட்டாமல் ஏமாற்றிக் கொண்டேயிருந்தார்கள். அவர்கள் எல்லாம் அதைக் கட்டிமுடிக்க மாட்டேன் என்கிறார்கள். ஆகவே, நிச்சயமாக, மாண்புமிகு அமைச்சர் சொல்கிற அந்தத் தேதிக்குள் அதைக் கட்டி முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அங்கு இருக்கக்கூடிய அமிர்தி Tourist Bungalow இருக்கக்கூடிய இடம் வரைக்கும் நல்ல பாதை அமைப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள தகவலின்படி 15-5-1998 ஆம் நாளன்றே பாலத்தின் அனைத்துப் பணிகளும் முடிவடைந்துவிட்டன. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன சாலையைப் பழுதுபார்ப்பதற்கானப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 597, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

**597--**

**ஹட்கோ நிதியுதவி மூலம் வீடுகள் கட்டுதல்**

***8656-திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பவானி நகரத்தில் "ஹட்கோ" நிதியுதவி மூலம் ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?



1998 மே 25]

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்திலுள்ள பவானி நகரம் வளர்ந்து வரக்கூடிய சூழ்நிலையில், பல்வேறு துறைகளிலுள்ள அதிகாரிகள் குடியிருக்க ஏற்ற வகையிலும், நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்ற அந்த நகரத்தில் அவர்களுக்கென்று நிரந்தரமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்ற வகையிலும் வருகின்ற ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுகொண்டு, அவ்வாறு செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறிய மற்றும் நடுத்தர வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்க பவானி நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டு, வீட்டுவசதித் தேவைக்கான ஆய்வு நடத்தப்பட்டபொழுது, 432 விண்ணப்பங்கள் மட்டுமே பெறப்பட்டன. என்றாலும், வீட்டுவசதித் திட்டத்திற்குத் தேவையான நிலம் கிடைக்கப்பெறவில்லை என்பதால், இந்நகரத்தில் இத்திட்டத்தை மேற்கொள்ள இயலவில்லை. தற்பொழுது நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் நிலம் வாங்கி திட்டத்தைச் செயல்படுத்த வீட்டுவசதி வாரியம் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் நிலம் கிடைக்கவில்லையென்று கூறியிருக்கிறார்கள். அங்கே அதிகாரிகளை அழைத்துச் சென்று 4, 5 முறை காண்பித்தபோது, இந்தந்த இடங்களெல்லாம் போதும் என்று அந்த அதிகாரிகள் கூறி இருக்கின்ற காரணத்தால், உடனடியாக நிலத்தை வாங்கிக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்ற சூழ்நிலையில், விரைவாக இந்தத் திட்டத்தை அமல்படுத்திக் கொடுப்பார்களா என்பதை மீண்டும் வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன்.

[1998 மே 25

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் நிலத்தை வாங்குவதற்கான கூட்டத்தை ஏற்பாடு செய்து, விலை நிர்ணயம் செய்தவுடன், நிலம் வாங்கப்பட்டு பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 598, டாக்டர் காஞ்சனா கமலநாதன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**598--**

**கால்நடை மருந்தகம் ஏற்படுத்துதல்**

***7990-டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கிருஷ்ணகிரி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், இடவனஹள்ளி கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இது குறித்து செயற்குறிப்பு ஏதுமில்லை.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் என்னை வியப்பில் ஆழ்த்துகிறது. கிருஷ்ணகிரி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், தொட்டதிம்மனஹள்ளி பஞ்சாயத்து, அந்தப் பஞ்சாயத்திலே இடம் பெறுகின்ற கிராமம்தான் இந்த இடவனஹள்ளி கிராமம் என்பது. 1997-98 ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்தப் பஞ்சாயத்து எடுக்கப்பட்டிருக்கிறது. வளர்ச்சிப்பணிகள் அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் 10-4-1998 ஆம் தேதியன்று அந்தப் பகுதிக்கு வந்து, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அங்கே நடைபெறுகின்ற பணிகளைப் பார்வையிட்டார்கள்.....



1998 மே 25]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** பல மாதங்களுக்கு முன்பே அந்தக் கிராமத்திற்கு கால்நடை மருந்தகம் ஒன்று தேவை என்று பலமுறை கடிதங்கள் கொடுக்கப்பட்டன. அப்படியிருந்தும், துறையிலிருந்து இல்லை என்று பதில் வந்ததால்தான், நான் வியப்பில் ஆழ்த்துகிறது என்று கூறினேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருசில மாதங்களுக்குள்ளாக கால்நடை மருந்தகம் ஒன்றை, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அந்தக் கிராமத்தில் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியத்தில் கெலமங்கலம் மற்றும் இராயக்கோட்டை ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்களும், உல்லுக்குறுக்கி, குண்டுமாரன்ஹள்ளி, சந்தனபள்ளி, கெண்டகனபள்ளி, விங்கனம்பட்டி, கும்பானூர் ஆகிய இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும் இயங்கி வருகின்றன. இடவனஹள்ளி கிராமத்திலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கால்நடைகளின் எண்ணிக்கை 2460 மட்டுமே இருக்கின்றது. இக்கால்நாடைகளுக்கு இடவனஹள்ளி கிராமத்திலிருந்து 6 கி.மீ. தொலைவிலுள்ள இராயக்கோட்டை கால் நடை மருந்தகத்திலும், 5 கி.மீ. தொலைவிலுள்ள உல்லுக்குறுக்கி மற்றும் விங்கனப்பட்டி ஆகிய கிளை நிலையங்களிலும் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. எனவே, கிருஷ்ணகிரி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், இடவனஹள்ளி கிராமத்தில் தற்போது கால்நடை மருந்தகம் தொடங்க செயற்குறிப்பு ஏதுமில்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கைக்கு இணங்க, எதிர்காலத்தில் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 599, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

[1998 மே 25

**599--**

**கால்நடைக் கிளை நிலையம் தொடங்குதல்**

***10902--திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, புதுப்பையில் கால்நடைக் கிளை நிலையம் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, புதுப்பையில் கால்நடை கிளை நிலையம் தொடங்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான வெள்ளக்கோவில் ஒன்றியம் புதுப்பை என்கின்ற ஊர் ஒரு ஊராட்சி மன்றத்தினுடைய தலைநகர். அது மட்டுமல்லாமல், இந்தப் பகுதியில் வெள்ளக்கோவில் பேரூராட்சியினுடைய தென் பகுதியையும், வேலப்பநாயக்கன்வலசு, கருப்பன்வலசு ஆகிய பகுதிகளையும் மையமாகக் கொண்ட புதுப்பையில் இதுவரை கால்நடைக் கிளை நிலையம் அமையாதது உள்ளபடியே வருத்தத்தினைத் தரக்கூடிய செய்தியாக இருக்கிறது. ஆகவே இந்த ஆண்டிலே அங்கே கால்நடைக் கிளை நிலையத்தை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, வெள்ளக்கோவில் ஒன்றியம், கம்பளிப்பட்டியில் இருக்கின்ற கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பார்களே அதுபோல, இரண்டு திட்டங்களையும் இந்த ஆண்டிலே பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



1998 மே 25]

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெள்ளக்கோவில் தொகுதியில், வெள்ளக்கோவில் ஒன்றியம், புதுப்பையில் 1-6-1997 முதல் நடமாடும் கால்நடை மருந்தகம் தொடங்கப்பட்டு, வாரத்திற்கு மூன்று நாட்கள் என்ற அளவில், வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியத்தினுடைய கால்நடை விரிவாக்க அலுவலர்களால் பார்வையிடப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், புதுப்பை கிராமத்தில் 153 மாட்டினமும், 232 ஆட்டினமும் தான் உள்ளன. அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கால்நடை இனங்கள் குறைவாகத்தான் உள்ளன. புதுப்பையில் நடமாடும் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகின்றதால், அங்கே கால்நடைக் கிளை நிலையம் தற்போது தொடங்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 600, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**600--**

**அனாதைக் குழந்தைகளுக்கு காப்பகங்கள்**

***6357--திரு. என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அனாதைக் குழந்தைகளுக்கு மாவட்டந்தோறும் காப்பகங்கள் ஏற்படுத்தி, கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவை செய்து தர அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மூலம் மாவட்டந்தோறும் செயல்பட்டுவரும் 25 அரசு குழந்தைகள் காப்பகங்களில் 5 வயது முதல் 18 வயது வரை உள்ள ஆதரவற்ற குழந்தைகள் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கு ஐந்தாம் வகுப்பு வரை காப்பகத்திலும், ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு

[1998 மே 25

வரை வெளிப் பள்ளிகளிலும் கல்வி கற்பிக்கப்படுகிறது. மாணவிகளுக்குத் தையல் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. இதற்கான செலவினம் முழுவதையும் அரசே ஏற்கின்றது. மாணவர்களைப் பொறுத்தமட்டில் அரசு குழந்தைகள் காப்பகங்களில் 10 வயது வரை மட்டுமே தங்கிப் படிக்க இயலும். 10 வயது முடிவடைந்த மாணவர்கள் மேற்படிப்புப் படிக்க தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வரும் இல்லங்களில் சேர்ப்பிக்கப்படுகின்றனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என்.ஆர். அழகராஜா**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 25 காப்பகங்கள் இருக்கின்ற இந்த நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பவள விழா ஆண்டிலே மீதி இருக்கின்ற மாவட்டங்களிலேயும் இதுபோன்ற காப்பகங்களை ஆரம்பிக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும், குறிப்பாக தேனி மாவட்டத்திலே இந்தக் காப்பகத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் வினாவாக வைக்கிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவாரூர், தேனி, கரூர், பெரம்பலூர், நாமக்கல், திருவள்ளூர், விழுப்புரம் ஆகிய 7 மாவட்டங்களைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களில் அரசு குழந்தைகள் காப்பகங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு காப்பகத்திலேயும் 250 மாணவ, மாணவிகள் தங்கிப் படிக்க அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டிருக்கின்றன. புதிய மாவட்டங்களில் அரசு குழந்தைகள் காப்பகம் வேண்டும் என்றும், குறிப்பாக தேனி மாவட்டத்தில் வேண்டுமென்றும் கேட்டிருக்கின்றார்கள். தேவை ஏற்படும் எனில் இந்த மாவட்டங்களிலே காப்பகங்கள் அமைப்பதற்கு இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு**: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை, உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



1998 மே 25]

## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) சென்னை மாநகரக் காவற்படை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 1998 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவற்படை (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவற்படை (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1998 மே 25

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

“1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 3. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) **கோரிக்கை எண் 2 - மாநில ஆயத் தீர்வைத் துறை**--தொடர்ச்சி
(ஆ) **கோரிக்கை எண் 15 - காவல் துறை**--தொடர்ச்சி
(இ) **கோரிக்கை எண் 16 - தீயணைப்புப் பணிகள்**--தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீது விவாதம்-தொடர்ச்சி. டாக்டர் க. கிருஷ்ணசாமி. சரியாக பத்து நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்ள வேண்டும்.



1998 மே 25]

முற்பகல் 10-20

*டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்திலே புதிய தமிழகத்தினுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே இல்லாவிட்டாலும்கூட, பவள விழா காணுகின்ற முதல்வர் அவர்கள் பல்லாண்டுக் காலம் வாழ்க என்று புதிய தமிழகத்தின் சார்பாக வாழ்த்தி, நான் இந்த நேரத்திலே காவல் துறையின்மீது என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு, தூத்துக்குடி மாவட்டம், மேலப்பூவாணி கிராமத்தைச் சேர்ந்த கணேசன் என்பவர், சாதாரண ஒரு வழக்கிற்காகக் காவல் துறையினரால் மணியாச்சி காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் கைது செய்யப்பட்டு, அடித்து சித்திரவதை செய்யப்பட்டு, புளியம்பட்டி காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அதற்குப்பின்பு அடுத்த நாள், அதாவது 18-5-1998 ஆம் தேதியன்று கோவில்பட்டி கிளை நீதிமன்றத்திலே ஆஜர் செய்யப்பட்டு, கோவில்பட்டி கிளைச் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டார். கடந்த 20 ஆம் தேதியன்று, மணியாச்சி காவல் நிலையத்திலும், புளியம்பட்டி காவல் நிலையத்திலும் வைத்து, காவல் துறையினரால் சித்ரவதை செய்யப்பட்டதன் காரணமாக, அவர் மரணமடைந்திருக்கிறார். கடந்த பல ஆண்டுகளாக, சாதாரண விசாரணைகளுக்கெல்லாம் அழைத்துச் செல்லப்படக்கூடிய இவரைப் போன்றவர்கள், சித்ரவதையின் காரணமாக மரணமடைவது வாடிக்கையாக இருந்து கொண்டிருக்கிறது. இதுபோன்ற மனிதாபிமானமற்ற செயல்களை....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர். கிருஷ்ணசாமி அவர்கள் குறிப்பிடுகின்ற கணேசன் என்பவர் கைது செய்யப்பட்டு, பிறகு நீதிமன்றத்திலே ஒப்படைக்கப்பட்டு அவர் சிறைச்சாலைக்குச் சென்றதற்குப்பிறகு, உடல்நிலை சரியில்லை என்று மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டபோது, மருத்துவமனையிலேதான் அவர் உயிரிழந்தார் என்ற தகவல் அரசுக்குக் கிடைத்தது. ஆனால், காவல் துறையினரால்

துன்புறுத்தப்பட்டு, அவர் இறந்துவிட்டதாகச் செய்தி பரப்பப்பட்டு அங்கே இருக்கின்ற மக்கள் மறியல் செய்ய ஆரம்பித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் வந்தால்தான் நாங்கள் போவோம் என்றுகூட அவர்கள் தெரிவித்தார்கள். இந்தச் செய்தி கிடைத்ததும், காவல் துறையினர் மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்களோடு தொடர்புகொள்ள முயற்சித்தனர். அவர் தங்கியிருந்த ஹோட்டலிலேயும் அவர் கிடைக்கவில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதிலே ஈடுபட்டு, சமாதானப்படுத்த வேண்டுமென்று அரசு முயற்சித்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 17-5-1998 அன்று மாலை 3-00 மணிக்கு மேலப்பூவாணியிலே அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். மாலை 3-00 மணிக்கு ஆடு மேய்த்துக் கொண்டிருந்தபோது அவர் கைது செய்யப்பட்டு, காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றார். அவர் 18 ஆம் தேதி கோவில்பட்டி கிளைச் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார். 20 ஆம் தேதி மாலை 5-00 மணிக்குத்தான் மரணமடைந்திருக்கிறார். அவர் காவல் நிலையத்தில் துன்புறுத்தப்பட்டதன் காரணமாகத்தான் மரணம் அடைந்திருக்கிறார் என்பது என்னுடைய குற்றச்சாட்டு இதுதான் யதார்த்தமானது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். 17 ஆம் தேதி அன்றே அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்திருந்தால், அன்றே அவர் காவல் துறையின் சார்பாக மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். நாம் ஆட்சிக்கு வருகிறோம் என்றால், அது மக்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காக. காவல் துறை என்றும் நம்மால் உருவாக்கப்பட்டது கிடையாது, காவல் துறை செய்யக்கூடிய தவறுகளையெல்லாம் நாம் ஆதரிப்பதற்கு. ஒரு ஜனநாயக நாட்டில், ஒரு ஆட்சியைத் தூக்கி எறிந்துவிட்டு இன்னொரு ஆட்சி வருகின்றது என்றால், இந்த நாட்டிலே சாதாரண மக்களுக்குச் சுதந்திரம் வேண்டும்; சமத்துவம் வேண்டும்; சகோதரத்துவம் வேண்டும் என்பதற்காகத்தான். அதேபோலத்தான் ஜனநாயக உரிமைகள் பாதிக்கப்படக்கூடாது என்பதுதான் என்னுடைய வாதம். அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, ஒரு சாதாரண, மிக மிகச் சாதாரண வழக்குகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டவர், பொதுமக்கள்



முன்னாலேயே அடிக்கப்பட்டிருக்கிறார். "எங்கள் முன்னாலேயே இப்படி அடிக்கின்றீர்களே, காவல் நிலையத்திற்குச் சென்றால் எப்படி அடிப்பீர்களோ" என்று மக்கள் தடுத்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் ஆயுதப் போலீஸ் படை வந்து, அவரைக் கைது செய்து புளியம்பட்டிக்கு அழைத்துச் சென்று அங்கே சித்ரவரை செய்திருக்கிறார்கள். இதற்கு நீதி வேண்டும். அவரை அடித்து சித்ரவதை செய்த காவல் நிலைய அதிகாரி எஸ்.ஐ., ஆறுமுகத்தின் மீது பிரிவு 302-இன்கீழ் வழக்கு பதிவு செய்து, அவரை சஸ்பெண்ட் செய்ய வேண்டும். இறந்தவருக்கு நட்டஈடு தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-25*

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. கு. மனோகரன் தலைமை)**

அதுபோல, சமீபத்திலே 2 நாட்களுக்கு முன்பு, மத்திய இணை அமைச்சர் மாண்புமிகு திரு. தலித் எழில்மலை அவர்கள் பெரம்பலூர் மாவட்டம், செட்டிக்குளத்திலே ஒரு மிகப் பெரிய கொடுமை நடந்ததைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். இதுசம்பந்தமாக, கடந்த 3 வாரத்திற்கு முன்பே, இந்த அவையில் விவாதிப்பதற்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே நான் ஒரு கவன ஈர்ப்புக் கொடுத்தேன். ஆனால், அது எடுத்துக் கொள்ளப்படவில்லை. அங்கே நடந்தது என்னவென்றால், மாரிக்கண்ணு என்கிற செல்லக்குமாருக்கும், அதே ஊரைச் சேர்ந்த திலகவதி என்பவருக்கும் காதல் ஏற்பட்டது. மாரிக்கண்ணு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர். திலவகதி பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர். மாரிக்கண்ணு சென்னையிலே ஒரு தனியார் கம்பெனியிலே வேலை பார்த்து வந்தார். திலகவதி பெரம்பலூரிலே இருக்கக்கூடிய செட்டிக்குளத்திலேயே இருந்து வந்தார். இதற்கிடையிலே, திலகவதி என்பவருடைய குடும்பத்தில், திலகவதிக்குத் திருமண ஏற்பாடுகள் நடந்தன. திலகவதியிடத்திலே இருந்து ஒரு கடிதம் வந்தது சென்னையிலுள்ள, செல்லக்குமாருக்கு. அந்தப் பெண்ணுக்கு திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பதாகவும், உடனடியாக அவரை அழைத்துச் செல்ல வேண்டுமென்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனுடைய அடிப்படையில், செல்லக்குமார், சென்னையிலே இருந்து அங்கு சென்று, திலகவதியை சென்னைக்கு அழைத்து வந்து, அவர்கள் இருவரும் பதிவுத் திருமணம் செய்து

கொண்டிருக்கிறார்கள். இதற்குப் பழி வாங்கக்கூடியப் படலமாக, அங்கு இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட இளம் பெண்களை, மாணவிகளை, அங்கே தனி அறையில் பூட்டி வைத்து தலைகீழாகத் தொங்கவிட்டு சித்ரவதை செய்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; பட்டப்பகலிலே, மாலை 3 மணிக்கு, ஊரைக்கூட்டி அங்கே இருக்கக்கூடிய ஒரு சாவடியிலே நிறுத்தி, தாழ்த்தப்பட்ட சமுதாய இளம் பெண்களையும், பையன்களையும், பொதுமக்கள் முன்னாலே முத்தமிடுங்கள் என்றெல்லாம் செய்து, சித்ரவதை செய்திருக்கிறார்கள். இதுபோன்ற கொடுமைகள் எல்லாம் நடந்திருக்கின்றன. இவையெல்லாம் சாதாரணமானவை அல்ல. 1989 ஆம் ஆண்டு கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழே தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்களாகும். ஆனால், அவர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டும்கூட, அவ்வாறு பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகளை இதுவரையில் கைது செய்யவில்லை; நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அதேபோல், அங்கே இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்களை, பிற்படுத்தப்பட்ட மக்கள், சமூக பகிஷ்காரம் செய்து, பால் கொடுக்காமல், தண்ணீர் கொடுக்காமல், மளிகைக் கடைகளைத் திறக்காமல் கொடுமை செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுடைய கவனத்திற்கு இதுகுறித்து ஒன்றைக்கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றையதினம், அவர்கள் பேசுகிறபோது, நானும் திரு. வல்லரசு அவர்களும் தென் மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னார்கள். நான், திரு. வல்லரசு அவர்களை மட்டுமல்ல; திரு. சுப்பராயன் அவர்களையும் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் வரவேண்டும். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், இன்னும் சமூக பகிஷ்காரத்திற்கு ஆளாகக்கூடிய அளவிலே இருந்து கொண்டிருக்கிறார்கள்.

உடுமலைப்பேட்டை அருகில் இருக்கக்கூடிய ரெட்டியார்பட்டியில், பிணக்குழி--சவக்குழி--தோண்டுவதற்கு மறுத்த காரணத்தினால்,



அங்கேயும் அதேபோல் சமூக பகிஷ்காரத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். கொஞ்சம் இருங்கள்.

வல்லக்குண்டாபுரம், செமிப்பட்டி கிராமத்திலே, இரட்டைத் தம்ளர் முறையை எடுத்ததன் காரணத்திற்காக, அருந்ததிய சமுதாயத்தினரைக் கடந்த பத்து மாத காலமாக சமூக பகிஷ்காரம் செய்து, அவர்கள் அந்தக் கிராமத்திலே வேலை செய்ய முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல், திருப்பூருக்கு அருகில் இருக்கக்கூடிய சோமனூர் பகுதியில், வேலம்பாளையம் உட்பட 10 அல்லது 15 கிராமங்களிலே, இன்றும்கூட தறிகளிலே வேலை கொடுக்காமல் அருந்ததிய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் பல அல்லல்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்றால், அவர்களுக்கு வைத்த இரட்டைத் தம்ளர் முறையை எதிர்த்த ஒரே காரணத்தினால்தான். நாமெல்லாம் ஒன்றுபட வேண்டும், நாம் எல்லாம் சகோதரத்துவமாக வாழ வேண்டும் என்ற அந்த நோக்கத்தில்தான் நான் இந்தக் கருத்தையெல்லாம் சொல்கிறேன். ஏதோ இந்த நாட்டிலே, ஒரு சில இடங்களிலே மட்டும் இப்படி நடப்பதாக நினைத்துக்கொள்ளக்கூடாது. தமிழகத்தினுடைய எல்லா மாவட்டங்களிலும் இதுபோன்ற கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்ற நிலையைத்தான் நான் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தீண்டாமைக் கொடுமைகள் இன்னும் தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றன. ஆனால், இந்தத் தீண்டாமைக் கொடுமைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது அவற்றைப் போக்குவதற்கு உருப்படியான நடவடிக்கைகள் காவல் துறையின் மூலமாக எடுக்கப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ, கிருஷ்ணசாமி ஒருவருக்கு மட்டும் உரித்தான நடவடிக்கையாகக் கருதாமல், இந்த மாமன்றத்திலே இருக்கக்கூடிய அத்தனை உறுப்பினர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது; அத்தனைக் கட்சிகளுக்கும் பொறுப்பு இருக்கிறது என்ற அடிப்படையிலே, இந்த ஆண்டின் இறுதிக்குள்ளாகவாவது, தமிழகத்திலே எங்கேயும் தீண்டாமைக் கொடுமை இல்லை என்ற ஒரு சூழ்நிலை[illegible]ற்காக,

D
Y211,31'N98 N98 ·
24464.

அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும், அத்தனை கட்சிகளும் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் உங்கள் முன்னாலே கோரிக்கையாக வைக்கிறேன்.

அதேபோல், வைரசெட்டிபாளையத்தில், பொங்கல் சமயத்திலே, தண்ணீர் திறந்துவிடாத காரணத்தையொட்டி, நடந்த கலவரத்திலே 216-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மீது வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். புதிய தமிழகத்தினுடைய அந்தப் பகுதிப் பொறுப்பாளர், சதுரகிரி, குண்டர் சட்டத்திலே கைது செய்யப்பட்டிருக்கிறார். இதுபோன்ற நடவடிக்கைகள் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களை மீண்டும், மீண்டும் ஒடுக்கக்கூடிய நடவடிக்கைகளாகத் தோன்றுகிறது.

முற்பகல் 10-30

தூத்துக்குடியில் ஆழ்வார்கற்குளத்தில் கடந்த 6 மாத காலமாக கலவரங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 15 பேருக்கு மேற்பட்டவர்கள் அங்கே கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவைகள் எல்லாம் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்படவில்லை என்பது வேதனைக்குரிய விஷயம். ஐந்து கோடி ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புள்ள வாழைகள் நாசமாக்கப்பட்டிருக்கின்றன. 500-க்கும் மேற்பட்ட ஆடு, மாடுகள் திருடு போயிருக்கின்றன. அதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 13-5-1998 அன்று கூமாப்பட்டியைச் சேர்ந்த ராஜு என்பவர் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார். ஆனால், அவர் காணவில்லை என்று வழக்கு பதிவு செய்யப்பட்டு சி.பி.சி.ஐ.டி.-யிலே அந்த வழக்கைக் கொடுத்திருந்தாலும்கூட, இன்றுவரை அந்த வழக்கு என்னவாயிற்று என்ற தகவல் கிடையாது. (மணியடிக்கப்பெற்றது)

அதுபோல, கயத்தாறிலே 1997 ஜனவரி 7 ஆம் தேதியன்று நான் செல்கின்றபோது பஞ்சாயத்து அலுவலகத்தை மூடிவைத்தார்கள் என்பதற்காக சாதாரண மறியலில் நாங்கள் ஈடுபட்டோம். நான் ஒரு வழக்குக் கொடுத்தேன். அந்த வழக்கு, பதிவு செய்யப்படவில்லை. ஆனால், சாதாரணமாக ஒரு சாலையிலே ½ மணி நேரம் உட்கார்ந்ததற்கு என்னோடு சேர்த்து 80 பேர்மீது வழக்கு போடப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகின்றேன். இதுபோன்ற வழக்குகள் தென் மாவட்டங்களில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட



சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்மீது, சமுதாய நீதிக்காகப் போராடக்கூடியவர்கள்மீது பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுக்காலத்தில் கலவரத்தில் இறந்தவர்களுடைய பிள்ளைகளுக்கு அரசு வேலை கொடுக்க வேண்டும் என்று இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுபோல, கொடியங்குளம் சம்பவத்திற்கு சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று வற்புறுத்தி சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. ஆனால், கடந்த இரண்டு ஆண்டு காலமாக அந்த வழக்கு தேக்க நிலையில் இருக்கிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை. இதுபோன்ற சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இடைக்கால நிவாரணம் கொடுக்கப்படுகிறது. ஆனால் கொடியங்குளம் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இடைக்கால நிவாணம் கேட்டு அது இன்றுவரையில் வழங்கப்படவில்லை. எனவே, அதை உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

1989 ஆம் ஆண்டு கொடுமைத் தடுப்புச் சட்டத்தைச் சரியாக அமல்படுத்துவதன் மூலம் எப்படி கொலை, கொள்ளை, கற்பழிப்பு வழக்குகளில் எல்லாம் முறையாக தண்டனை வழங்கப்பட்டு, அதன் மூலமாக இதுபோன்ற சம்பவங்கள் தடுக்கப்படும் என்று நினைக்கிறோமோ, அதுபோல, தீண்டாமைக் குற்றத்தைத் தடுப்பதன் மூலமாக சமுதாயத்தில் ஒரு சமூக ஒற்றுமையை உருவாக்க முடியும் என்ற கருத்தை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காவல் துறையில் ஸ்டேஷன் ஆபீஸர் என்று அழைக்கப்படக்கூடிய எஸ்.ஐ., இன்ஸ்பெக்டர் அளவில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு போதிய இட ஒதுக்கீடு இல்லாமல் இருப்பது வேதனைக்குரிய விஷயம். அது முறையாகக் கொடுக்கப்பட வேண்டும். காவல் துறையில், தாழ்த்தப்பட்டவர்களாக, பிற்படுத்தப்பட்டவர்களாக, அல்லது முற்படுத்தப்பட்டவர்களாக

இருந்தாலும்கூட அடிமட்டக் காவலர்களுக்கு உரிய மரியாதை இல்லை. ஐ.பி.எஸ். ஆபீஸர்கள் மட்டும் Paragons of Virtue என்ற அளவிலே நடந்து கொண்டிருக்கிறார்கள். சாதாரணக் காவலர்களைத் தண்டனைக்குள்ளாக்குகிறார்கள். ஆனால் கோடிக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கக்கூடிய ஐ.பி.எஸ். அதிகாரிகள் தண்டிக்கப்படுவதில்லை, கண்டிக்கப்படுவதில்லை. சென்னையிலேகூட விதிமுறைகளை மீறி கோடிக்கணக்கான ரூபாய் சம்பாதித்திருக்கக்கூடிய அதிகாரிகள் எல்லாம் --ஐ.பி.எஸ். அதிகாரிகள், டிஃபன்ஸ் காலனியில் நான்கு மாடி, ஐந்து மாடி வீடுகள் கட்டக்கூடிய அதிகாரிகள் எல்லாம்-- இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கிய நேரத்திற்கு மேலே பேசிவிட்டீர்கள், உட்காருங்கள். திரு. அப்துல் லத்தீப்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் விஷயத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, விரைவில் சொல்லி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் டி.எம்.பி. மெக்கவாய் பள்ளி மாணவிகள் கற்பழிக்கப்பட்டார்கள் என்ற செய்தியை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். அதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே ஒட்டப்பிடாரம் மக்களுடைய எதிர்பார்ப்பிற்கிணங்க ஒரு தனி போலீஸ் படையை நிறுவி, மாணவிகளைக் கற்பழித்த பள்ளி நிர்வாகியை கைது செய்ய வேண்டும். அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய லீக்கின் சார்பாக ஒருசில கருத்துகளை இந்த மானியத்தின்மீது சொல்ல வாய்ப்பளித்தமைக்கு



நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலேயே இருக்கக்கூடிய உள்துறை அமைச்சர்களில் நீண்ட காலமாக இந்தத் துறையை நிர்வகித்து வருகிற டாக்டர் கலைஞரைவிட இவ்வளவு காலம் தொடர்ந்து இந்தத் துறையை நிர்வகித்தவர்கள் மத்தியிலும் இல்லை, எந்த மாநிலத்திலும் இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அளவுக்கு இந்தத் துறையை மிகச் செம்மையாக நிர்வகித்து வருகிற டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு மீண்டும் இந்தத் துறையின் தொடர்பான மானியத்தைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அவர்கள் தன்னுடைய பணியைத் தொடங்கிய அந்தக்காலம், அப்போதிருந்த சூழ்நிலை, நாட்டில் இப்போது பெரிதும் மாறியிருக்கிறது என்பதை நம் அனைவரையும் விட மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் மிக நன்றாக அறிவார்கள்.

*முற்பகல் 10-35*

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே மிகப் பொருத்தமான ஒரு குறட்பாவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். அந்தக் குறட்பாவிலே, வீரம், மான உணர்ச்சி, முன்னோர் சென்ற வழி நடத்தல், தலைவரின் நம்பிக்கையைப் பெறுதல், இவை நான்கும் படை காக்கும் பண்புகள் ஆகும் என்பதை வள்ளுவர் பெருந்தகை அழகாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார். அது அவர் வாழ்ந்த காலத்திற்கு மட்டுமல்ல, எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய பண்புகள் என்பதை இந்தநேரத்தில் நான் நினைவுகூர விரும்புகிறேன். குறிப்பாக காவல் துறையிலே பணியாற்றக்கூடியவர்கள், முன்னோர் சென்ற வழி நடத்தல் என்பதைப் பொறுத்தவரையில் அதை மிகவும் கண்டிப்பாகவும், குறிப்பாகவும் கடைப்பிடித்து அதன்படி அவர்கள் நடக்கக்கூடிய ஒரு நல்ல பண்பு படைத்தவர்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாடு போலீஸ், உலகத்திலேயே ஒரு சிறந்த இடத்தைப் பெற்று, சிறப்புக்குரிய துறை என்ற ஒரு பெயரை நாடெங்கிலும் பெற்றிருந்த காலம் ஒன்று இருந்தது. இதற்கு முன்பு போலீஸ் துறையிலே பணியாற்றிய அதிகாரிகள், போலீஸ்காரர்கள் ஆகியோரிடத்திலே எவ்வளவு தூய்மை இருந்ததோ, பொறுப்புணர்வு இருந்ததோ, கடமை உணர்வு இருந்ததோ, அவ்வளவு கடமை உணர்வும், பொறுப்புணர்வும், தூய்மையும் இந்தக் காலத்தில்

இருக்கிறதா என்பதை மற்றவர்கள் எடுத்துச் சொல்வதைவிட துறையிலே இருப்பவர்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமானால் வேறு துறைக்குச் செல்ல வேண்டியது இல்லை. போலீஸ் துறையிலே தங்களுக்கு முன்பு இருந்தவர்கள் எப்படி செயல்பட்டார்கள், அவர்களுக்கு உலகத்திலே மிகச் சிறப்பான இடம் கிடைத்ததே அதற்கு என்ன காரணம் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய ஒரு கடமையையாவது குறைந்தபட்சம் போலீஸ் துறையிலே இருப்பவர்கள் நிறைவேற்ற வேண்டும். அவைகளை ஒப்பிட்டுப் பார்த்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக்கூடிய ஒரு கட்டாய நிலைக்கு இன்றைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். எனவே, அந்தக் கட்டாயத்தின் அடிப்படையிலே நான் இந்தத் துறையிலே பணியாற்றக்கூடியவர்களைக் கேட்டுக்கொள்வேன், காவல் துறையை நிர்வகித்த இந்தத் துறையினுடைய தலைவர், இன்றைக்கும் தலைவராக இருக்கக்கூடிய டாக்டர் கலைஞர் அவர்கள் பல ஆண்டுக்காலமாக இந்தத் துறையை நிர்வகிப்பதற்காக எவ்வளவு பொறுப்புடன் செயல்படுகிறார்களோ, அதே அளவுக்கு இத்துறையிலே பணியாற்றக்கூடியவர்கள் அந்தத் தலைவருக்கு உரிய பண்பாட்டை அறிந்து, தெரிந்து அதன்படி நடக்கிறார்களா என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் அவர்களை மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, போலீஸ் துறையிலே அதிக பொறுப்புணர்வு வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக ஒழுக்கம் வேண்டும். ஒரு குற்றத்தை செய்தவனைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்கு, அவனைப் பிடிக்கக்கூடியவர்கள், காராகிருகத்தில் அடைக்கக்கூடியவர்கள் எவ்வளவு பொறுப்புள்ளவர்களாக இருக்க வேண்டும்? நான் ஒரு குற்றத்தைச் செய்தால் இன்னொருவரைப் பார்த்து நீ குற்றம் செய்கிறாய் என்று தண்டிப்பதற்கு என்ன யோக்கியதை இருக்க முடியும்? எனவே போலீஸ் துறையிலே பணியாற்றக்கூடியவர்கள், குற்றம் செய்வதை அறவே தடுக்க வேண்டும் என்ற சூளுரையோடு, எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் குற்றத்திலிருந்து விலகி நிற்க வேண்டும். அப்படி விலகி நின்றால்தான் மற்றவர்கள் குற்றம் செய்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி அதற்காக அவர்களைச் சட்டத்தின் சன்னிதானத்திலே நிற்கவைத்து, காராகிருகத்திலே அடைக்கக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு உரிமையும், தகுதியும் இருக்கும். அவ்வாறு இல்லாமல் குற்றம் செய்பவர்களே, குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிப்பது என்பது வேடிக்கையாகத்தான் இருக்கும்.



இந்த நேரத்தில் நான் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காவல் துறையிலே பயிற்சிக் காலம் என்று ஒன்று இருக்கிறது. Police Training அதில் அவர்களுக்கு என்ன பயிற்சி கொடுக்கிறோம்? பல்வேறு தரத்திலே காவல் துறையிலே வேலை செய்கிறார்கள். அதில் பெரும்பாலோர் Constables என்று சொல்லக்கூடிய காவலர்கள் ஆவர். இன்றைக்கு காவல் துறையிலே இருப்பவர்களுடைய மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 90 ஆயிரம் பேர்கள் என்ற அளவில் எல்லா மட்டத்திலும் இருக்கிறார்கள். அதிலே போலீஸ்காரர்கள் 80 ஆயிரம் பேர்கள் இருப்பார்கள். அதாவது Constables என்று சொல்லக்கூடியவர்கள் மட்டும் 80 ஆயிரம் பேர்கள் இருப்பார்கள். எனவே, அதிக ஒழுக்கம் யாரிடத்திலே இருக்க வேண்டுமென்றால், மேல் மட்டத்தில் இருக்கின்ற டி.ஜி.பி.-யிடம் நான் அதை எதிர்பார்க்கவில்லை. அவரிடத்திலே அது இருக்கிறது. ஆனால் மக்களிடத்தில் நேரிடையான தொடர்பு வைத்திருக்கக்கூடிய எல்லாத் தரப்பு மக்களோடும் தொடர்பு வைத்திருக்கக்கூடிய, தெரு வீதிகளுக்குச் சென்று குற்றங்களைக் கண்டுபிடித்து ஒழுக்கத்தை நிலைநாட்டுவதற்கு முழு நேரமும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கக் கூடிய காவலர்கள் ஒழுக்கத்தோடு இருந்தால்தான் இந்தத் துறை செம்மையாகச் செயல்படும், ஒழுக்கத்தோடு செயல்படும். அப்படி இல்லாமல் மேலிடத்திலே மட்டும் ஒழுக்கம் இருந்தால் எதுவும் நடக்காது. எனவே அதற்கான பயிற்சியை முறையாகத் தர வேண்டும். எந்த அளவிற்கு இந்தப் பயிற்சிப் பள்ளிகள், பயிற்சிக் கல்லூரிகள் செயல்படுகின்றன, அதனுடைய பாடத் திட்டங்கள் என்ன, எந்தெந்த அளவிலே அவர்களுக்கு பயிற்சி கொடுக்கிறார்கள் என்பதை நாம் இன்றைக்கு மீண்டும் சிந்தனை செய்து பார்க்க வேண்டும்.

*முற்பகல் 10-40*

1971-லே எம்.எஸ். கோரே என்பவருடைய தலைமையில் இந்தப் போலீஸ் பயிற்சி நிலையங்கள் குறித்தும், பாடத் திட்டங்கள் குறித்தும், எந்தெந்த வகையான பயிற்சி கொடுக்க வேண்டும் என்பது குறித்தும் இவைகள் எல்லாம் எப்படி மாற்றப்படலாம் என்பது குறித்தும் ஒரு நீண்ட ஆய்வு செய்யப்பட்டு, கோரே அவர்களின் கமிட்டியின்

சார்பாக பரிந்துரைகளையெல்லாம் எல்லா அரசுக்கும் வழங்கி இருக்கிறார்கள். அது எந்த அளவிற்கு 1971-லிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை நான் அறிய விரும்புகிறேன். நான் 1971-ஐ குறிப்பாகச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1971-லேயும் இந்தத் துறையை நிர்வகித்துக்கொண்டிருந்தார்கள். இன்றைக்கும் இந்தத் துறையை நிர்வகித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, இதை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அந்தப் பரிந்துரைகளையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறோமா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல் இப்போது போலீஸ் துறையில் பணியாற்றக்கூடியவர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கிட வேண்டுமென்ற சூழ்நிலைகள் எல்லாம் நாட்டிலே நடந்து கொண்டிருக்கின்றன. கடந்த காலத்திலே இருந்த சூழ்நிலைகள் வேறு, இப்போது இருக்கின்ற சூழ்நிலைகள் வேறு. இப்போது எல்லாவற்றிற்கும் மக்கள் தெருவீதிகளுக்கு வந்துவிடுகிறார்கள். உலா வருகிறார்கள். எதற்காக உலா வரவேண்டும் என்பது வரையறுக்கப்பட்ட ஒரு நிலையாக இல்லை. எதற்கு வேண்டுமானாலும் மக்கள் இந்த ஜனநாயக நாட்டிலே தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்திடவும், கோரிக்கைகளை வைத்திடவும் உலா வருகின்றார்கள். அப்படி உலா வரும்போது பல தொந்தரவுகள் பல்வேறு வகையிலே ஏற்பட்டுவிடுகின்றன. எனவே, இவைகள் எல்லாம் குறித்து போலீஸ்காரர்கள் மக்களிடத்திலே எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கான பக்குவமும் அதற்கு வேண்டிய பயிற்சியும் காவலர்களுக்கு வேண்டும். குறிப்பாக காக்கி உடையை உடுத்திக்கொண்டால், அந்த உடையை உடுத்திய உடனேயே அவன் முழுக்க முழுக்க போலீஸ்காரனாகவே மாறிவிட வேண்டும். அவன் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவனாக இருக்கலாம், ஜாதி சமய சார்புடையவனாக இருக்கலாம், பல்வேறு உணர்வுகள் தனிப்பட்ட முறையிலே அவனுக்கு இருக்கலாம். ஆனால் காக்கி உடை அணிந்தவுடன் பொதுநிலையில் நின்று அவன் ஒரு மனிதன், சட்டத்தை நிலைநாட்டக்கூடிய பொறுப்புடையவன் என்ற உணர்வோடு அவன் செயல்பட வேண்டும். ஆனால் இன்றைக்கு பல்வேறு நிகழ்வுகளில் நாம் பார்க்கிறோம், கட்சி உணர்வும் வேலை செய்கிறது, ஜாதீய உணர்வும் வேலை செய்கிறது. மேலும் தான் இந்த மதத்துக்காரன் என்று அவன் நினைக்கிறான். அவன் ஒரு



முஸ்லீம் போலீசாக இருந்தால், தான் முஸ்லீம் என்று நினைக்கக்கூடாது. ஒரு ஹிந்துவாக இருந்தால் அதுபற்றியும் அவன் நினைக்கக்கூடாது. மேலும் ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவன் என்றால் அந்த உணர்வும் அவனுக்கு வரக்கூடாது. ஒரு கட்சியைச் சேர்ந்தவன் என்றால் அந்தக் கட்சி உணர்வும் அவனுக்குக் கூடாது. ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை அப்படியில்லை. எனவே, தயவுசெய்து இதுகுறித்து நாம் ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டும். போலீஸ் துறையில் ஜாதீய உணர்வு புகுந்து கொண்டிருக்கின்றது, மத உணர்வு புகுந்து கொண்டிருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் கட்சி உணர்வும் புகுந்துவிட்டிருக்கின்றது. எனவே, யார் காக்கி உடை அணிந்தாலும், அவன் முஸ்லீமாக இருந்தாலும், இந்துவாக இருந்தாலும் தன்னை இனம் காட்டிக்கொள்ளாமல் இருக்க வேண்டும்.

1981-ல் ஐரிஷ் நாட்டிலே ஒரு இனக் கலவரம் நடந்தது. அந்த இனக்கலவரத்தில் போலீஸ்காரர்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதனை விசாரணை செய்வதற்காக அன்றைய அரசு இங்கிலாந்திலே ஸ்டார்மென் கமிஷன் என்ற ஒரு கமிஷனை நியமித்தது. அந்தக் கமிஷனும் சிலவற்றைப் பரிந்துரைத்தது. அதாவது அந்தச் சமயத்தில் அங்கு பணியாற்றியவர்களில் யாரெல்லாம் ஐரிஷ்காரன் என்றோ, பிரிடிஷ்காரன் என்றோ, கிறிஸ்டியன் என்றோ ஆங்லிக்கன் என்றோ பார்த்து செயல்பட்டார்களோ, they must be immediately dismissed என்று கமிஷன் பரிந்துரை செய்தது. ஏனென்றால் இந்த உணர்வு உடையவனுக்கு போலீஸ் துறையில் வேலையில்லை என்றும் அப்பேர்பட்டவனுக்கு அங்கே இடம் தரக்கூடாது என்றும் பரிந்துரை செய்து அந்த அளவிற்கு அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். நாம் இங்கு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறோம் என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தமாதிரி செயல்படக்கூடியவர்கள் முஸ்லீமாக இருந்தால் அவர்களுக்கு நாம் சிபாரிசுக்குப் போகக்கூடாது. ஒரு இந்துவாக இருந்து தவறு செய்தாலும் சிபாரிசுக்குப் போகக்கூடாது. அவன் என்னுடைய ஜாதிக்காரன் என்று சிபாரிசுக்குப் போகக்கூடாது. இன்றைக்கு நாட்டிலே இத்தகைய அயோக்யத் தனங்கள், ஒழுங்கீனங்கள் எல்லாம் வந்ததற்குக் காரணம் அவனவன் அவனவனுடைய ஆள் என்று நினைத்துக்கொண்டு பரிந்துரை செய்கிறானே, அதனால்தான், அடிப்படையாக இந்தக் காவல் துறையிலே மிகப்பெரிய தீமை, வியாதி ஏற்பட்டிருக்கிறது. அந்த

வியாதியைத் தீர்த்தால்தான் போலீஸ் துறை என்பது இருக்கும். இல்லாவிட்டால், அந்தத் துறை இல்லாமலேயே போய்விடக்கூடிய நிலை ஏற்பட்டு விடும்.

*முற்பகல் 10-45*

Vora Commission என்ன பரிந்துரை செய்தது? இன்றைக்கு, Nexus among Politicians, Police and Criminals. நாட்டிலே உள்ள எல்லா கிரிமினல்களும் போலீஸ்காரர்களோடு தொடர்பு வைத்திருக்கிறார்கள். ஒரு understanding இருக்கிறது. Sometimes, Politicians also come forward to support them. They all join together. There is nexus among these three diabolical sections of the society. அதை நாம் 'Explore' பண்ண வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. என்ன 'Explore' பண்ணியிருக்கிறோம்?

இன்றைக்கு இருக்கிற நிலைமை என்னவென்றால், நேற்றைக்கு முன்தினம் நான் ஆரணிக்குப் போயிருந்தேன். அப்போது அங்கே உள்ளவர்கள் என்னிடத்திலே என்ன சொன்னார்கள் என்றால், அங்கேயிருக்கிற இஸ்லாமிய இளைஞர்கள், மற்றவர்கள் எல்லாம் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தால், என்னுடைய கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தால், அங்கே இருக்கிற இன்ஸ்பெக்டர், யாரோ கோபால் என்ற பெயருடையவர் என்று சொன்னார்கள். அவர், 'நீங்கள் கூட்டம் போட்டீர்கள் என்று சொன்னால், அல்-உம்மா, ஜிகாத் இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் என்று குற்றம்சாட்டி உங்களை உள்ளே தள்ளி விடுவேன்' என்று சொன்னதாகச் சொன்னார்கள். இது, எதற்குப் பயன்படுகிறது என்று பாருங்கள். அல்-உம்மா, ஜிகாத் என்று குற்றம்சாட்டி, உள்ளே தள்ளிவிடுவேன் என்று அவர் சொல்லுகிறார் என்றால், நிலைமை எப்படி இருக்கிறது என்று பாருங்கள். நான்கூட, அங்கே பேசினேன். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இருந்தார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. தயாளன் இருந்தார். என்னுடைய அருமை அண்ணன் செல்வராசு இருந்தார். ஊரிலே, இப்படிப்பட்ட ஒரு நிலைமையை போலீஸ்காரர்கள் உருவாக்கினார்கள் என்றால், நல்ல வேலைக்கு என்று ஒரு பொறுப்பைக் கொடுத்தால், அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, சமுதாயத்தில் கலகம் விளைவிக்க, மாச்சரியத்தை ஏற்படுத்த, முயற்சி செய்கிறார்கள் என்றால், அதுவும் அவர்கள் காக்கி உடை அணிந்தே செய்கிறார்கள் என்று சொன்னால்,



இதில் நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது).*

இப்போது இருக்கிற போலீஸ்காரர்கள் எண்ணிக்கை போதாது. நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். போலீஸ்காரர்களை நான் விமர்சனம் செய்கிறேன். ஆனால், அவர்கள் வேண்டாம் என்று என்னால் சொல்ல முடியுமா? வேண்டாம் என்று சொல்ல முடியாது. போலீஸ்காரர்களுக்கு ஒரு உதாரணம் சொல்வார்கள். சூரிய மண்டலத்தில், நடுவிலே சூரியன் இருக்கிறது. சூரியனுக்குச் சுற்றுப்புறம் கிரகங்கள் சுற்றுகின்றன. அந்தக் கிரகங்கள் எல்லாம் அதனுடைய தன்மையோடு இருக்க வேண்டுமென்றால் அவைகளுக்கு உள்ள அந்த வளாகத்திலே இருந்து கொஞ்சம்கூட அவைகள் நகரக்கூடாது. சூரியனுக்குப் பக்கம் நகர்ந்தால் சூரியன் சுட்டெரித்து விடும். வேறு பக்கம் நகர்ந்தால், அதனுடைய சூடு இல்லாமல், அதன் தன்மையை இழந்து விடும். அதைப்போலத்தான் போலீஸ்காரர்களையும் நாம் வைத்துக்கொள்ள வேண்டும்.

போலீஸ்காரர்கள் தேவை. குளிர் காய்பவனுக்கு எப்படி நெருப்புத் தேவையோ, அதுபோல. ஆனால், நெருப்பு, குளிருக்கு நன்றாக இருக்கிறது என்று, அதன்மேல் கை வைத்தால் அவ்வளவுதான், நெருப்பு சுட்டுவிடும். கொஞ்சம் விலகி விட்டாலும், அதன் பயன் இல்லாமல் போய்விடும். போலீஸ்காரர்கள் தேவை. அவர்களுடைய உற்சாகம் குறையக்கூடாது. அதேநேரத்தில் அவர்கள் மதிக்கப்பட வேண்டும். யார், நல்ல போலீஸ்காரர்களோ, அவர்கள் மரியாதைக்குரியவர்கள். ஏனென்றால், அவர்கள் நாட்டுக்குப் பாதுகாப்புக் கொடுக்கக்கூடியவர்கள்.

இப்போது, வேதனை என்ன தெரியுமா? கள்ளச் சாராயம் விற்பனை நடத்துகின்ற அந்தக் கேந்திரங்கள் எல்லாம் அவர்களால் நடத்தப்படுகின்றன. சென்னையை எடுத்துக்கொண்டாலும் சரி, அல்லது வெளியூரை எடுத்துக்கொண்டாலும் சரி, பெயருக்குத்தான் எவனோ கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுகிறான். ஆனால், அதை விற்பவர்கள் இவர்கள்தான். ஏலம் எடுக்கும்போது, ஆட்களை செட்-அப் செய்பவர்கள் எல்லாம் இவர்கள்தான். யார், யாரோ ஏலம் எடுக்கிறார்கள். ஆங்காங்கே எத்தனையோ கொலைகள்

நடைபெற்றன. மது உள்ளே சென்றாலே மதியை மயக்கி விடும். அது எல்லோருக்கும் தெரியும். ஆனால், மது விற்பனைக்கு ஏலத்தைத் தொடங்கினாலே, மதியை மயக்கிவிடுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை நீடிக்குமானால், அது வேதனைக்குரியது.

போலீஸ் பயிற்சி, சப்-இன்ஸ்பெக்டர் பயிற்சிக்கு கடந்த ஆண்டு 350 பேர் தேர்வு செய்யப்பட்டார்கள். ஆனால், அந்த 350 பேர்களிலே ஒரே ஒரு முஸ்லீம் மட்டும்தான் இடம் பெற்றிருக்கிறார். ஒரே ஒரு முஸ்லீம், அந்த 350 பேர்களிலே என்றால், இது என்ன அநியாயம்? இந்த நாடு, எங்களுடைய நாடு இல்லையா? ஒரு சிலர்தான் அனுபவிக்க வேண்டுமா? அப்படி என்று சொன்னால், என்னுடைய உள்ளத்தில் கொதிப்பு ஏற்படாதா? இந்தக் கொதிப்பை ஏற்படுத்துவது யார் என்பதை முடிவு செய்ய வேண்டும். எனவே, எங்களுக்கு உரிய விகிதாச்சாரத்தின்படி, எங்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும். அதனால்தான் 5 'சதவீதமாவது கொடுங்கள். அதற்குப் பிறகு தீர்மானித்துக் கொள்ளலாம் என்ற ஒரு கோரிக்கையை நான் வைத்தேன். தயவுசெய்து இனிமேலாவது நீதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

என்னுடைய பகுதிகள், வாணியம்பாடி, காட்பாடி, குடியாத்தம் இந்தப் பகுதிகள் எல்லாம் ஆந்திராவையொட்டி அமைந்துள்ளன. எனவே, ஒரு தனி டி.எஸ்.பி. அலுவலகத்தை குறிப்பாக காட்பாடியில் அமைக்க, ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தயவு செய்து அதை விரைவில் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கே.வி. குப்பம், பணமடஞ்சி, லத்தேரி, காட்பாடி, காந்திநகர், விருகம்பட்டு, திருவலம் ஆகிய 7 ஊர்களில் போலீஸ் நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே, இதைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காட்பாடி ஓர் இரயில்வே ஜங்ஷன். இரயில்வே ஜங்ஷனுக்கு வேண்டிய சௌகரியங்களை செய்து கொடுக்க வேண்டும். ஆந்திர மாநில எல்லையை ஒட்டி இருக்கின்ற காரணத்தால், அதற்கு வேண்டிய போலீஸ் மற்றும் சௌகரியங்களைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கடந்த ஆண்டு, வாணியம்பாடி, ஆலங்காயத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து தீயணைப்பு நிலையம் ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்தார்கள். தீயணைப்பு நிலையமும் வந்திருக்கிறது. நாங்களும் போய்த் திறந்து வைத்தோம். 13 தீயணைப்பு நிலைய Constables மற்றவர்கள் இருக்கிறார்கள். ஆனால் கட்டடம் இல்லை, எஞ்ஜின் இல்லை. தீயணைப்பு நிலையத்திற்கு எது இருக்க வேண்டுமோ, அது இன்னும் வரவில்லை. இன்று வரையில் இல்லை. எஞ்ஜின் இல்லை, கட்டடம் இல்லை. 13 பேர் ஆலங்காயம் ஜவ்வாது மலையில் உட்கார்ந்து நன்றாக ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏதாவது தீ ஏற்பட்டால் அங்கே போவதற்கு வாய்ப்பில்லை. எனவே, அதை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மிகுந்த அன்போடு கேட்டுக்கொண்டு நேரத்தின் அருமை கருதி, என்னுடைய பேச்சை சுருக்கிக்கொண்டு, இத்துடன் முடிக்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதிநிலை அறிக்கையில் இன்று காவல் துறை மானியக் கோரிக்கைமீது சிலபல கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக, போலீஸ் துறை இன்று பாராட்டக்கூடிய அளவிலே, கடந்த தேர்தலுக்குப் பிறகு பல அரிய காரியங்களை எல்லாம் செய்து இருக்கின்றன என்பதை நாம் மனப்பூர்வமாகச் சொல்லித்தான் ஆக வேண்டும். குறிப்பாக மதுரை மாநகரில், ஒரு பேராசிரியரை சிலர் கொலை செய்தார்கள்; அந்தக் கொலையைக் கண்டுபிடிக்க முடியாது என்று மதுரை நகரமே பேசிக்கொண்டிருந்தது. அதை எப்படியோ துப்புத்துலக்கி, அந்தப் பேராசிரியரைக் கொலை செய்தவர்களையெல்லாம் பிடித்தப் பெருமை நம்முடைய போலீசுக்கு உண்டு என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், போலீஸ்காரர்களுக்குத் தேவையான பல வசதிகளை செய்து கொடுக்க வேண்டியது நம்முடைய கடமை. உதாரணமாக ஒரு பொருளை வாங்குகிறோம் என்று சொன்னால், ஒரு Chair வாங்குகிறோம், ஒரு நாற்காலி வாங்குகிறோம் என்று சொன்னால், அந்த நாற்காலி சரியாக இல்லாவிட்டால், அதைத் தயார் செய்தவர்

இடத்தில், இந்த நாற்காலியில் உட்கார முடியவில்லை என்று நாம் கேட்கிறபோது, அவர் உளி சரியாக இல்லை, மரம் சரியாக இல்லை என்று சொன்னால் நாம் அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம். அதுபோல, இந்த நாட்டில் சட்டம்-ஒழுங்கு சரியில்லை என்று சொன்னால், அந்தச் சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டியவர்கள் போலீஸ்காரர்கள்.

போலீஸ்காரர்களுக்கு நாம் செய்ய வேண்டிய அத்தியாவசியமான செயல்களைச் செய்ய வேண்டியது நம்முடைய அரசினுடைய கடமை. உதாரணமாக இன்றைக்குப் போலீஸ்காரர்களுக்கு வீடு என்பது ஒரு மிகப் பெரிய பிரச்சினை. நம்முடைய அருமைத் தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, போலீஸ்காரர்களுக்கு வீடு என்ற திட்டத்தை 1956 ஆம் ஆண்டு கொண்டு வந்தார்கள். கிட்டத்தட்ட 80 சதவிகித போலீஸ்காரர்களுக்கு, போலீஸ் அதிகாரிகளுக்கு வீடு கிடைக்க வேண்டுமென்ற திட்டத்தோடு, அவர் அந்தத் திட்டத்தைத் தொடங்கினார்கள். கிட்டத்தட்ட, அவருடைய ஆட்சிக் காலத்தில் 60 சதவிகிதம் பேருக்கு வீடு கிடைத்தது. அதற்குப்பிறகு வந்த அரசுகள் அதைத் தொடர்ந்து செய்யாமல் போனதால், இன்றைக்கு 40 சதவிகிதம் போலீஸ்காரர்களுக்கு மட்டும்தான் வீடு கிடைத்திருக்கிறது என்கின்ற விவரத்தை நான் சிலரிடமிருந்து தெரிந்துகொண்டிருக்கிறேன். ஆகவே, கிட்டத்தட்ட 80 சதவிகிதம் அளவுக்காவது--கீழ் நிலையிலே இருக்கின்ற போலீஸ் அதிகாரிகளிலிருந்து, மேல் நிலையிலே இருக்கின்ற இன்ஸ்பெக்டர், டி.எஸ்.பி. அளவுக்கு--வீடுகள் கொடுக்க வேண்டியது நம்முடைய கடமை. இந்த ஆண்டில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பவள விழா ஆண்டு என்கிற முறையில், அவர்களுக்கு ஒரு திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ரா. சேதுநாதன் தலைமை)**

அடுத்து, போலீஸ்காரர்கள் மிகவும் பாதிக்கப்பட்ட ஓர் இடம் சேவை. அதேபோல சென்னை, மதுரை, திருச்சி போன்ற பெரிய நகரங்களில் போலீஸ்காரர்களுக்கு ஒரு காலனி ஏற்படுத்த வேண்டும். 500 வீடுகள், 1000 வீடுகள் உள்ள காலனிகள் ஏற்படுத்தி, அங்கே அவர்களுடைய குழந்தைகளுக்கு நல்ல பள்ளிக்கூடங்களை, சிறப்பான பள்ளிக்கூடங்களை, ரெசிடென்ஷியல் ஸ்கூல்ஸ் என்று சொல்லுகின்ற பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி, அவர்களுடைய குழந்தைகளுக்கு



படிப்பு வசதியை செய்து கொடுக்க வேண்டும். மருத்துவமனை ஏற்படுத்த வேண்டும். இதுபோன்ற நல்ல காரியங்களைச் செய்கின்ற ஒரு நல்ல செயலை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

போலீஸ் அதிகாரிகளைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட கீழ் நிலையில் இருக்கின்ற, போலீஸ்காரர்கள், ஹெட்கான்ஸ்டபிள், சப்-இன்ஸ்பெக்டர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் எல்லாம் ஒரு நாளைக்கு 20 மணி நேரத்திற்குக் குறையாமல் பணியிலே இருக்கக்கூடியவர்கள். அவர்களுடைய குழந்தைகளின் படிப்பைப் பற்றி கவலை கொள்ள முடியாத ஒரு சூழ்நிலையில் இருப்பவர்கள். ஆகவே, அவர்களுக்கு இந்த வசதிகள் எல்லாம் செய்து கொடுக்க வேண்டியது நமது அரசினுடைய கடமை.

இன்னொன்று, நம்முடைய போலீஸ்காரர்கள் மத்தியில் ஒரு பெரிய குறைபாடு இருக்கிறது. இன்று புரமோஷன் விஷயத்தில் மிக மந்தமான ஒரு சூழ்நிலையை அரசு கடைப்பிடிக்கிறது என்று மிகுந்த வேதனையோடு அவர்கள் சொல்கிறார்கள். அதற்கு நாம் செய்ய வேண்டியது, கான்ஸ்டபிளாக 10 ஆண்டுக்காலம் இருந்துவிட்டால், அவர்கள் ஹெட் கான்ஸ்டபிளாக கட்டாயமாகப் பதவி உயர்வு பெற்றுவிட வேண்டும்; அதேபோல, சப் இன்ஸ்பெக்டராக 10 ஆண்டுக்காலம் இருந்து விட்டால் அவரைக் கட்டாயமாக இன்ஸ்பெக்டராக ஆக்கிவிட வேண்டும். அதேபோல, 10 ஆண்டுக் காலம் இன்ஸ்பெக்டராக இருப்பவர்களைக் கட்டாயமாக டி.எஸ்.பி. யாக ஆக்கிவிட வேண்டும். இந்தமாதிரி கடைப்பிடித்தால்தான் அவர்களுடைய மனவேதனை தீரும். இந்த முறையைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் நம்முடைய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

சீருடையைப் பொறுத்தவரையில் இன்று அவர்களுக்கு 3 அல்லது 4 சீருடைகள்தான் கொடுக்கப்படுகின்றன என்று சொல்லுகிறார்கள். குறைந்தபட்சம் 6 சீருடைகளாவது அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் நிலையங்களைப் பொறுத்தவரை, அவை மிக்க தூய்மையாக வெள்ளையடித்து ஆண்டுதோறும் சுத்தமாக இருக்க வேண்டும்.

கூடுமானவரை கம்ப்யூட்டர் முறையை நாம் பயன்படுத்த வேண்டும். பேப்பரின் தேவை இல்லாத போலீஸ் ஸ்டேஷன்கள் என்கின்ற ஒரு பெருமையை நம்முடைய அரசு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது கம்ப்யூட்டர் வந்துவிட்டால் பேப்பரே வேண்டியது இல்லை; பேப்பர் வேண்டிய அவசியமே இல்லாமல் போய்விடும்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அதோடு அவர்களுக்கு நவீன ஆயுதங்கள் கொடுக்க வேண்டும். இன்று நாட்டில் இருக்கின்ற தீய சக்திகள் எல்லாம் மிகச் சிறந்த பயிற்சியைப் பெற்று இருக்கிறார்கள். அவர்களைப் பிடிப்பதற்கு போலீஸ்காரர்களுக்கு அதைவிட மிகச் சிறந்த பயிற்சி கொடுக்க வேண்டியது நம்முடைய கடமை ஆகும். ஆகவே, மாவட்டந்தோறும் எல்லாத் துறைகளிலும் இருக்கின்ற போலீஸ்காரர்களுக்கெல்லாம் பயிற்சி கொடுக்கின்ற அளவிற்கு மாவட்டப் போலீஸ் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும். அந்தப் போலீஸ் பயிற்சி நிலையங்களில் புதிதாக நாம் அதிகாரிகளைப் போடாவிட்டாலும்கூட, ஓய்வுபெற்ற போலீஸ் அதிகாரிகள், நீதிபதிகள் போன்றவர்களை எல்லாம் அழைத்து வந்து, பேராசிரியர்களை எல்லாம் அழைத்து வந்து, அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம், அவர்களுக்கு மனிதநேயம், தீவிரவாதிகளைப் பிடிக்கின்ற சக்தி, இன்று நாட்டில் நடைபெறுகின்ற அன்றாட விஷயங்கள் போன்றவைகளுக்கு எல்லாம் ஈடுகொடுக்க முடியும். அந்த வகையில் பயிற்சி தருகின்ற அளவிற்கு ஒரு நல்ல முழுமையான பயிற்சியை கொடுக்கின்ற பயிற்சி நிலையங்களை மாவட்டந்தோறும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய கிராமங்களில் ஒரு பழக்கம் உண்டு. அதாவது, திங்கட்கிழமை என்று சொல்லமாட்டார்கள்; இன்று சந்தைக்கிழமை என்று சொல்லுவார்கள். திங்கட்கிழமை வந்துவிட்டால் சந்தைக்குப் போக வேண்டும் என்ற உணர்வு எல்லா கிராம மக்களுக்கும் உண்டு. அதேபோல கிராம மக்களுக்கு இன்றைக்கு போலீஸ்கிழமை என்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இன்றைக்கு போலீஸ்காரர்கள் நம்முடைய ஊருக்கு வருவார்கள் என்று மக்கள் எண்ணும் நிலை இருக்க வேண்டும் என்றால் 7 கிராமங்களுக்கு ஒரு போலீஸ் ஸ்டேஷன் கண்டிப்பாக இருந்தாக வேண்டும். ஒவ்வொரு



கிழமையும் சப் இன்ஸ்பெக்டரோ, ஏட்டோ, போலீஸ்காரரோ அந்தக் கிராமங்களுக்குச் செல்ல வேண்டும். இன்றைக்கு போலீஸ்காரர்கள் வருவார்கள் என்கின்ற உணர்வு கிராமங்களில் இருந்தால், பல பிரச்சினைகள் தீர்ந்துவிடும். அதேமாதிரி, ஒரு டி.எஸ்.பி.-க்கு 7 போலீஸ் ஸ்டேஷன்களுக்கு மேல் இருக்கக்கூடாது. டி.எஸ்.பி.-யும் வாரந்தோறும் ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்ல வேண்டும். இன்றைக்கு டி.எஸ்.பி. நம்முடைய போலீஸ் ஸ்டேஷனுக்கு வருவார் என்கின்ற உணர்வு அந்தப் போலீஸ் ஸ்டேஷனில் இருக்க வேண்டும். ஆகவே அந்த முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். இதற்கு அதிகமாகக்கூட போலீஸ் தேவையில்லை என்று நான் சில போலீஸ் அதிகாரிகளைக் கேட்ட நேரத்தில் சொன்னார்கள். ஆகவே இருக்கிறவர்களை வைத்து, இருக்கிற சூழ்நிலைகளை ஒழுங்காகச் செய்துவிட முடியும் என்ற ஒரு கருத்தையும் சொன்னார்கள். ஆகவே, கிராமங்கள்தோறும் ஒரு வாரத்திற்கு ஒரு முறையாவது போலீசார் சுற்றி வருகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குகிற வகையில், ஏழு கிராமங்களுக்கு ஒரு போலீஸ் ஸ்டேஷன், ஏழு போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஒரு டி.எஸ்.பி. அலுவலகம் என்ற முறையை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-00*

பிறகு, நம்முடைய போலீஸ்காரர்களுக்கு ரிவார்டு கொடுக்கும்போது 25 ரூபாய், 50 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். இப்போது எல்லாம் கள்ளச்சாராயத்தைப் பிடிக்கப் போகின்ற போலீஸ்காரர்களுக்கு அதுபோன்ற இடங்களில் 1,000 ரூபாய், 2,000 ரூபாய் என்று தொகையைத் தூக்கிப் போடத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே 2,000 ரூபாயை வாங்குவார்களா, நீங்கள் கொடுக்கிற 25 ரூபாயை வாங்குவார்களா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, குறைந்தபட்சம் அந்த ரிவார்டு கொடுப்பது என்பதை 200 ரூபாய், 400 ரூபாய் அல்லது 500 ரூபாய் என்கின்ற அளவில் ஒரு முறையைக் கொண்டுவர வேண்டும். ரூ. 25, ரூ. 50 என்கின்ற முறையை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தலைமைக் காவலர்கள், காவலர்கள் பதவி உயர்வைப் பற்றி நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். போலீஸ்காரர்கள் மத்தியில் ஒரு சங்கம் வைக்கவேண்டுமென்று கருதுகிறார்கள். அந்தச்

சங்கத்தினால் எந்தப் பயனும் கிடையாது என்பது அவர்களுக்குத் தெரியாது. சங்கம் வைத்து வீணாக அவர்களும் தொல்லைப்படுவார்கள். அரசும் தொல்லைப்படும். ஆகவே நான் ஓர் ஆலோசனையை அரசுக்கும் போலீஸ் அதிகாரிகளுக்கும் சொல்ல விரும்புகிறேன். Staff Council என்று மத்திய அரசில் இருப்பதாகச் சொல்கிறார்கள். போலீஸ் உயர் அதிகாரிகள், நிதித் துறைச் செயலாளர், ஓய்வு பெற்ற நீதிபதி, பல்வேறுபட்ட காவல்துறை பிரதிநிதிகள் ஆகியவர்களைக் கொண்டது Staff Council. அவர்களுடைய பணிப் பிரச்சினைகளை, அவர்களுடைய பதவி உயர்வு போன்ற பிரச்சினைகளை எல்லாம் அதிலே வைத்துப் பேசிவிட்டால் அவர்களுடைய பிரச்சினை எல்லாம் தீர்ந்துவிடும். ஆகவே, Staff Council என்ற ஒன்றை அரசு அமைத்து போலீஸ்காரர்களுடைய பிரச்சினைகளை அதிலே பேசித் தீர்க்கும் ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் துறையில் தங்களது உயிரைப் பணயம் வைத்து வெடி குண்டுகளை எல்லாம் பிடித்த மாவீரர்கள் இருக்கிறார்கள். உதாரணமாக, கொடுங்கையூரில் கிருஷ்ணமூர்த்தி என்ற இன்ஸ்பெக்டர் மற்றும் சிலர், கோவையில் சந்திரசேகரன், முரளி போன்றவர்களுக்கு எல்லாம் பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்று நான் ஏற்கெனவே இங்கே கேட்ட நேரத்தில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதை அனுதாபத்தோடு கவனிப்பதாகச் சொன்னார்கள். இதுவரை பதவி உயர்வு கொடுக்கவில்லை என்று அவர்கள் எல்லாம் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு இந்த அவையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உறுதி கூறுவார்கள் என்று நம்புகிறேன்.

சென்ற ஆண்டு சென்னையில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. சென்னை சைனா பஜாரில் 12½ லட்சம் ரூபாயை ரவி என்பவர் டிராவல்ஸ் பார்க் என்ற கடைக்கு எடுத்துச் சென்றிருந்த நேரத்தில் சில ரௌடிகள் அவரை வழிமறித்து அந்தப் பணத்தைப் பிடுங்க முயற்சித்தார்கள். அந்த நேரத்தில் மோகன், ஜெகதீசன் என்ற இரண்டு வாலிபர்கள்--அந்தக் கடையில் வேலை பார்த்தவர்கள்--அந்த ரௌடிகளை அடித்து நொறுக்கி, அந்தப் பணத்தை மீட்டார்கள். அந்த நேரத்தில் அந்த ரௌடிகள் அந்த இருவரையும் சுட்டுவிட்டார்கள். தெய்வாதீனமாக அந்த இரண்டு பேரும் பிழைத்துக் கொண்டார்கள். அவர்களை நான் அப்பல்லோ



மருத்துவமனையில் சென்று பார்த்தேன். அப்போது இருந்த காவல் துறை ஆணையாளர் அவர்களிடம் இந்த விவரத்தை நான் சொன்ன நேரத்தில், அவர்கள் மிக அருமையாகச் சொன்னார்கள். இந்த இரண்டு இளைஞர்களும் போலீஸ் துறையில் இருக்க வேண்டிய மிக நல்ல இளைஞர்கள். அவர்களுக்கு நான் பாராட்டுத் தருவதோடு பரிசும் வழங்க இருக்கிறேன் என்று பெருமையோடு சொன்னார்கள். இதுவரை அந்தப் பரிசு அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அதை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Crime branch-ஐப் பற்றி கொஞ்சம் அதிகமாகச் சொல்ல வேண்டும். Crime branch என்பது இன்று நம்முடைய தமிழக போலீஸ் துறையில் யார் யார் செல்வாக்கு இல்லாத போலீஸ் அதிகாரிகளோ, யார் யார் மிக தவறு செய்யக்கூடிய போலீஸ் அதிகாரிகளோ அவர்களில் பலரை Crime branch-ல் போடுவதாக ஒரு குற்றச்சாட்டு இருந்து கொண்டிருக்கிறது. இவர்கள் எப்படி குற்றங்களைக் கண்டுபிடிப்பார்கள்? ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நான் சொல்கிற வேண்டுகோள், இந்த விஜிலென்ஸ் டிபார்ட்மென்ட்டுக்கு Special Pay என்று கொடுப்பதைப் போல, Crime branch அதிகாரிகளாக வருபவர்களுக்கும் Special Pay கொடுத்தால், நல்ல அதிகாரிகள் அதற்கு வருவார்கள். இப்போது அதற்கு யாரும் போக விரும்புவது கிடையாது. தேவையில்லாத ஆட்களை எல்லாம் அங்கே போட்டு வைத்து இருப்பதால் நாட்டில் ஏராளமான குற்றங்கள் கண்டுபிடிக்க முடியாமல் இருந்து கொண்டிருக்கின்றன. நேற்றுகூட 'இந்து' பத்திரிகையிலே பார்த்தேன். நம்முடைய சென்னையில், அமைந்தகரையில் 3, 4 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த 5 கொலைகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவே இல்லை என்றெல்லாம் எழுதி இருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம், Crime branch-ல் இருக்கிற அதிகாரிகளுக்கு உற்சாகம் கிடையாது. அதோடு, எங்கேயாவது பந்தோபஸ்து போட வேண்டும் என்றாலும் இந்த கிரைம் பிராஞ்ச் அதிகாரிகளைத்தான் அனுப்புகிறார்களாம். ஏதோ வேலையில்லாதவர்கள் மாதிரி நினைத்துக்கொண்டு அவர்களையே போகச் சொல்லுகிறார்களாம். கவனிப்பாரற்ற ஒரு பிரிவாக அது இருப்பதை மாற்றி சிறந்தத் துறையாக அதை மாற்றுவதற்கு அவர்களுக்கு Special Pay கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

நம்முடைய பெண் காவலர்கள் மிகுந்த வேதனையோடு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களோடு நான் கடந்த முறை பேசினேன். அவர்களுக்கு டிரெஸ் எல்லாம் நன்றாக இல்லை. அவற்றைக் கொஞ்சம் ஒழுங்குபடுத்த வேண்டுமென்று கேட்டேன். அதற்கு முதலமைச்சர் அவர்கள், 'அவர்களை அலங்காரப்படுத்துவோம்' என்று அழகான வார்த்தைகளில் சொன்னார்கள். அதையெல்லாம் அவர்கள் ஞாபகப்படுத்திக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். எங்களுக்கு வேறு ஒன்றும் வேண்டாம். சட்டையை இன் பண்ணாமல் Push coat model-ல் அணியும் ஆடை கொடுக்க உத்தரவிடுங்கள் என்று முதலமைச்சரிடம் சொல்லுங்கள் என்று எழுதியிருக்கிறார்கள். அதாவது, இப்போதெல்லாம் என்.சி.சி. மாதிரி டிரெஸ் பண்ணச் சொல்லுகிறார்களாம். இது எங்களுக்குப் பெரிய தொல்லையாகவும், துன்பமாகவும் இருக்கிறது. ஆகவே, Push coat model-ல், சட்டையை இன் பண்ணாமல் அணியும் ஆடை கொடுக்க உத்தரவிட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

பெண் காவலர்களை, அந்தந்த மாவட்டங்களில் ஆயுத சேம நலப் படைப் பிரிவில், ஏ.ஆர். பிரிவில் பணிபுரிய அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இப்போதெல்லாம் ஆண்களோடு சேர்த்து பல இடங்களுக்கு அனுப்புகிறார்களாம். அதனால் பல கற்பழிப்புகள், பல துன்பங்களெல்லாம் நாங்கள் அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம் என்று விரிவாக முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதிவிட்டு எனக்கு ஒரு நகல் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து அந்தப் பெண் போலீஸ்காரர்களுடைய மன நிலையைப் புரிந்து, அவர்களை அழைத்து வைத்தாவது பேசி அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலே இன்றைக்கு காலையிலே ஒருவர் எனக்கு Phone பண்ணினார். அதாவது, பாலசுப்பிரமணியம் என்ற ஓய்வு பெற்ற ஓர் அதிகாரி. அவர் முகவரி எண் 16, இந்திராணி அம்மாள் தெரு, சலிவன் கார்டன், மயிலாப்பூர். காலையிலே 6 மணிக்கு வாக்கிங் போய்க்கொண்டிருந்தாராம். அப்போது ஓர் ஆட்டோ ரிக்ஷாவில் 5 பேர் வந்து, அவரைப் பிடித்து ஆட்டோ ரிக்ஷாவுக்குள்ளே ஏற்றி, கொஞ்சம் தள்ளிக் கொண்டு போய் நிறுத்தி, அவர் கையிலேயிருந்த இரண்டேயிரண்டு மோதிரங்களை பிடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். 'இவ்வளவுதான் வைத்திருக்கிறாயா? வெறும் பயலாக இருக்கிறாயே' என்று சொல்லி இரண்டு மோதிரங்களையும் பிடுங்கிக் கொண்டதோடு, இரண்டு அடியும் அடித்திருக்கிறார்கள். அப்போது அவர், நான் ரொம்ப தூரம் போக வேண்டுமே ஐயா என்று சொல்லியிருக்கிறார். உடனே, சரி, இந்தா வைத்துக்கொள் என்று ஒருத்தன் 10 ரூபாய் கொடுத்திருக்கிறான். இது போதாதே என்று அவர் சொல்லியிருக்கிறார். அப்போது, இன்னொருத்தன் 10 ரூபாய் கொடுத்திருக்கிறான். பிறகு, அவர் வந்து மயிலாப்பூர் காவல் நிலையத்திலே புகார் பண்ணியிருக்கிறார். எனவே, ஆட்டோ ரிக்ஷாக்களையெல்லாம் ஒழுங்குபடுத்த வேண்டியது நம்முடைய கடமை. 35,000 ஆட்டோ ரிக்ஷாக்கள் சென்னையிலே ஓடுகின்றன. அதிலே 8,000-க்கும் மேற்பட்ட ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு பெர்மிட்டே கிடையாது. அதுமட்டுமல்லாமல், ஆட்டோ ரிக்ஷாக்களிலே மற்ற நகரங்களிலேயெல்லாம், அவசர போலீசுக்கான 100 என்கிற எண், போக்குவரத்துப் போலீசாருக்கான 103 என்கிற எண், டிரைவருடைய போட்டோ, அவருடைய பெர்மிட் போட்டோ இவைகளையெல்லாம் ஒட்டியிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய ஊரிலே இதெல்லாம் பல ஆட்டோக்களிலே இல்லை என்கின்ற ஒரு குறைபாடு இருக்கிறது. ஆகவே, இந்த ஆட்டோக்களை சரி செய்ய வேண்டியது அவசியம். பல இடங்களில் இதுபோன்று நடந்து வருகின்றன. ஆண்களுக்கே இந்த கதி என்றால், பெண்களுக்கு எவ்வளவு துயர் இருக்கும் என்பதை நீங்கள். பார்க்க வேண்டும். கூடுதல் காசு கேட்கிற இடங்களிலே, ஏன் இப்படி காசு கேட்கிறாய் என்று சொன்னால், யார் லஞ்சம் வாங்காமல் இருக்கிறார்கள், எங்களை மட்டும் கேட்கிறீர்களே, என்று திருப்பிக் கேட்கிற தைரியம் இந்த ஆட்டோ ரிக்ஷாக்காரர்களுக்கு வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



திண்டுக்கல் நகரத்தில் துரைராஜ் என்கின்ற ஒருவருடைய மகன வரதராஜ் என்கின்ற கல்லூரி மாணவர், கடந்த 22-4-1998 அன்று ஒரு கிணற்றில் பிணமாகக் கிடந்து, அதை எடுத்திருக்கிறார்கள். அது வந்து தற்கொலைதான் என்று போலீசார் சொல்கிறார்கள். ஆனால், அவருடைய தந்தையார், இது தற்கொலை இல்லை, கொடுக்கல் வாங்கல் தகராறிலே என்னுடைய மகனைக் கொலை

செய்துவிட்டார்கள். இன்னின்னார்தான் கொலை செய்தவர்கள் என்று புகார் கொடுத்திருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் அந்தப் புகாரை எடுக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். இல்லை, இல்லை, தற்கொலைதான் என்று சொல்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன சொல்கிறார்கள் என்றால் அந்த ரௌடிகள், இவரைக் கொலை செய்த ரௌடிகள் போலீசையே மிரட்டுகிறார்கள் என்று. அந்த அளவிற்கு திண்டுக்கல்லில் மிகக் கொடுமை நடந்து கொண்டிருக்கிறது என்று எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார் அந்த துரைராஜ் என்பவர்.

முற்பகல் 11-10

பிறகு, நம்முடைய பெரம்பலூர் மாவட்டத்தில் தீவிரவாதக் குழுக்கள் சர்வசாதாரணமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். 60 தீவிரவாதிகள் இதுவரை கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். இன்னும் ஏராளமான தீவிரவாதிகள் அங்கே நடமாடிக் கொண்டிருப்பதாகவும், அவர்களையெல்லாம் கைது செய்ய வேண்டும் என்றும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் எழுதிக் கொடுத்திருக்கிறார். அரியலூர் தொகுதி, வெங்கலூரில் ஒரு காவல் நிலையமும் வாலாண்குடி, கைக்காப்பட்டியில் ஒரு காவல் நிலையமும் வேண்டுமென்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. அமரமூர்த்தி கேட்டிருக்கிறார்கள். அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு சட்டமன்ற உறுப்பினர், நம்முடைய மணிவர்மா அவர்கள் தச்சம்பட்டியில் ஒரு புதிய காவல் நிலையமும், தாணிப்பாடியில் ஒரு புதிய தீயணைப்பு நிலையமும் கேட்டிருக்கிறார். அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று. ஏற்கெனவே உதவி ஆய்வாளர் பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டு பயிற்சியில் சேர்ந்தவர்களில், 1,024 பேர் மட்டும் உதவி ஆய்வாளர்களாக பதவியில் நிரப்பப்பட்டிருக்கிறார்கள். இன்னும் [illegible]8 பேர் தேர்வு செய்து மூன்று ஆண்டுகளாகியும் காத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் உடனடியாகப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பு கொடுத்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், இறுதியாக எதிர்கட்சித் தலைவர் அவர்களும் பல அரிய கருத்துரைகளை இங்கே வழங்கி இருக்கின்றார்கள். வழக்கம்போல் நான் நீண்ட நேரம் இவற்றுக்கெல்லாம் விளக்கம் அளிக்க முடியாத நிலையில், உடல் நலிவோடு இந்த மாமன்றத்தில் நின்று கொண்டிருக்கின்றேன். கடந்த இரண்டு நாட்களாகக் கடும் காய்ச்சல். பேசவே முடியாத அளவிற்குக் குரல் நிலை. இருந்தாலும் பதில் உரையை ஒத்தி வைக்கக்கூடாது என்கின்ற முனைப்போடு மருத்துவர்கள் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியின் காரணமாக பதில் உரைக்கு என்னைத் தயார்படுத்திக் கொண்டு, இயன்ற வரையில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துகளுக்கு விளக்கம் அளிக்க விரும்புகின்றேன்.

இந்த மானியக் கோரிக்கை புத்தகத்தில் உள்ள சில குறிப்புகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் செல்லக்குமார் அவர்களும், திருநாவுக்கரசு அவர்களும், குமாரதாஸ் அவர்களும் ஒன்றைச் சுட்டிக்காட்டினார்கள். அகில இந்திய சராசரி, ஒரு இலட்சம் மக்களுக்கு 134 காவலர்கள் என்று இருக்கும்போது, தமிழ்நாட்டில் 127 காவலர்கள்தான் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அதுகூட நாங்களே கொடுத்த குறிப்புத்தான். அதை மறைக்க வேண்டுமென்று கருதாத காரணத்தால் அந்தக் குறிப்பை கொள்கை விளக்கப் புத்தகத்திலேயே வெளியிட்டு இருக்கின்றோம். ஒருவேளை கொடுக்காவிட்டாலும் நீங்களே எப்படியும் கண்டுபிடித்துப் பேசினாலும் பேசுவீர்கள். இருந்தாலும் ஒன்றை நினைவுபடுத்திக்கொள்ள விரும்புகின்றேன். ஆந்திர மாநிலத்திலே ஒரு இலட்சம் மக்களுக்கு சராசரி காவலர்கள் 101 பேர்தான். கர்நாடகத்திலே 118 பேர்தான். கேரளாவிலே 124 பேர்தான். பீகாரில் 84 பேர்தான், மத்தியப் பிரதேசத்தில் 124 பேர்தான். ஒரிசாவில் 99 பேர்தான். உத்திரப்பிரதேசத்தில் 103 பேர்தான். மேற்கு வங்கத்தில் 108 பேர்தான். ராஜஸ்தானில் 119 பேர்தான். இந்தக் கணக்கை எல்லாம் காட்டி, இதற்கு மேல் உயர்த்த முடியாது என்று நான் சொல்ல மாட்டேன். மேலும் உயர்த்த வேண்டும். இங்கே 127 என்று இருப்பது போதாது.

மேலும் உயர்த்த வேண்டும் என்பதற்காகத்தான், இந்த ஆண்டுகூட 10 ஆயிரம் பேர் காவல் துறையிலே சேர்க்கப்பட இருக்கின்றார்கள் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான தேர்வுகள் நடைபெற்று முடிந்திருக்கின்றன என்பதையும் நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

முற்பகல் 11-15

நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 7 கிராமங்களுக்கு ஒரு காவல் நிலையம் என்ற வகையில் அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டு, அது ரொம்ப சுலபம்தான் என்று சொன்னார்கள். எனக்கு வந்த ஆசையில், அவரைக் கொஞ்ச நேரம் உள்துறை அமைச்சராக உட்கார வைத்து அதைச் செய்து காட்டுங்கள் பார்க்கலாம் எனக் கேட்க வேண்டும் என்றுகூட ஓர் எண்ணம் ஏற்பட்டது. இப்போது கிட்டத்தட்ட தமிழகத்திலே 1300 காவல் நிலையங்கள் இருக்கின்றன, புறக்காவல் நிலையம், மகளிர் காவல் நிலையம் எல்லாவற்றையும் சேர்த்து. கிராமங்கள் என்று எடுத்துக் கொண்டால், வெறும் பஞ்சாயத்துக் கிராமங்கள் அல்லாமல் கிராமங்கள் என்ற நிலையிலே உள்ளவைகள் 58 ஆயிரம் கிராமங்கள் இருக்கின்றன. இந்த 58 ஆயிரம் கிராமங்களுக்கும், 7 கிராமங்களுக்கு ஒரு காவல் நிலையம் என்றால், 8300-க்கும் மேற்பட்ட காவல் நிலையங்கள் தேவை. இது இப்போது இருப்பதைவிட 6 அல்லது 7 மடங்கு அதிகம் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதெல்லாம் பெரும் மலைப்பைத்தான் நமக்கு உண்டாக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது.

இன்னொன்று, கடந்த காலத்திற்கும், இந்தக் காலத்திற்கும் உள்ள சில வேறுபாடுகளை திரு. திருநாவுக்கரசு, திரு. செல்லக்குமார் ஆகியோர் எல்லாம் இங்கே சுட்டிக்காட்டினார்கள். கொலைகள் என்ற அந்தக் குறிப்பில் 1995 ஆம் ஆண்டு 93 கொலைகளில் கண்டுபிடிக்கப்பட்டவை 54 ஆக இருக்க, 1997 ஆம் ஆண்டில் 99 கொலைகளில், கண்டுபிடிக்கப்பட்டது 48 தானா என்று கேட்டு, 50 சதவீதத்தைவிட இது குறைவு என்று இங்கே குறிப்பிட்டு, ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை என்றெல்லாம் அடுக்கு மொழியிலே திரு. செல்லக்குமார் இங்கே எடுத்துக் காட்டினார். ஆனால், நான் பதில்களாக அல்ல, ஒரு விளக்கத்திற்காகச் சொல்ல விரும்புகின்றேன். இதை எப்படிப் பார்க்க வேண்டும் என்றால், 1995 ஆம் ஆண்டில்



உள்ள அந்தக் குறிப்பையும் நாம் பார்க்க வேண்டும். சென்ற ஆண்டு, 1996-97ஆம் ஆண்டு, தரப்பட்ட அந்தப் புத்தகத்தையும் பார்த்தால், 1995 ஆம் ஆண்டிலே கொலைகள் 93, கண்டுபிடிக்கப்பட்டது 40 என்றுதான் இருக்கிறது. அந்த 40 இப்போது 54 ஆகியிருக்கிறது. காரணம், அதற்கு மேல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலத்தான் இப்போது 48 ஆக இருப்பது, இந்த ஆண்டிலே மேலும் அதிகமாகும் என்ற விளக்கத்தை அவருக்கும், அதைப்போலவே பேசிய மற்றவர்களுக்கும் நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். 40, 54 ஆக ஆகியிருக்கிறது. இப்பொழுது 54 என்று சொல்லப்படுவது, 1995-ல் 40 ஆகத்தான் இருந்தது; கண்டுபிடிக்கப்பட்டவைகள். அது இப்போது 54 ஆக ஆகியிருக்கிறது. அதைப்போல் 48 என்று இருப்பது இந்த ஆண்டில் மேலும் அதிகமாகும் என்பதையும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பெரிய திருட்டுக்கள் 17,349 என்று இருந்தது, இப்போது 18,511 என்று உயர்ந்துவிட்டது என்று திரு. செல்லக்குமார் இங்கே குறைபட்டுக் கொண்டார். இதை வரிசைப்படி பார்த்தால், 1962 ஆம் ஆண்டு 20,252 ஆக இருந்தது; 1963-ல் 19,622 ஆக இருந்தது; 1964-ல், 20,880 ஆக இருந்தது; 1965-ல் 20,007 ஆக இருந்தது; 1966-ல் 22,612 ஆக இருந்தது. இப்போது 18,511 ஆக இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. நான் சொன்ன இந்த ஆண்டுகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்ற ஆண்டுகள் அல்ல என்பதையும் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும்.

இன்னொன்று. துப்பாக்கிச் சூட்டைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டு திரு. குமாரதாஸ் அவர்கள் வெகுவாக தன்னுடைய கண்டனத்தைத் தெரிவித்தார். 1997-லே 63 துப்பாக்கிப் பிரயோகமா என்று கேட்டார். துப்பாக்கிப் பிரயோகம் திடீரென்று 63 ஆக ஆகிவிடவில்லை. இப்போது குறைந்திருக்கின்றது. 1997-லே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதற்கான காரணம் எல்லோரும் அறிந்த ஒன்றுதான். மதக் கலவரம், ஜாதிக் கலவரம் இவைகளெல்லாம் வெகுவாக மூண்டெழுந்து, அப்போது ஏற்பட்ட கலவரங்களை அடக்குகின்ற சூழ்நிலையிலே துப்பாக்கிப் பிரயோகங்கள் தவிர்க்க முடியாமல் ஆகிவிட்டன.

முற்பகல் 11-20

*1991ஆம் ஆண்டு 33 துப்பாக்கிப் பிரயோகம்; 1992-ல் 67 துப்பாக்கிப் பிரயோகம்; 1993-ல் 63; 1994-ல் 23; 1995-ல் 32; 1996-ல் 24; 1997-ல் 63; 1998-ல் இந்த மாதம் வரையில் 5.*

அதைப்போலவே காவல் நிலைய மரணங்கள் என்று எடுத்துக்கொண்டாலும்-'லாக்-அப்' சாவு-அது வெகுவாகக் குறைந்து கொண்டே வந்திருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 1995-ல் 19-ஆக இருந்த காவல் நிலைய மரண எண்ணிக்கை 1996, 1997-ல் முறையே 13, 16 என்ற அளவிலே குறைந்தது. 1998ஆம் ஆண்டில் இதுவரையில் அப்படி காவல் நிலையத்திலே-போலீஸ் லாக்-அப்பில் ஒரு நிகழ்வுகூட ஏற்படவில்லை என்ற நிலையிலே (மேசையைத் தட்டும் ஒலி) என்னிடத்திலே இந்தப் பட்டியல் தரப்பட்ட வரையிலே இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

சில குறைபாடுகளுக்கும் அல்லது குற்றச்சாட்டுகளுக்கும் நான் பதில் அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன். அந்தக் குற்றச்சாட்டுகள் சொல்லப்படும்பொழுது பிரயோகிக்கப்பட்ட வார்த்தைகளுக்குள் எல்லாம் நான் செல்ல விரும்பவில்லை. திரு. செல்லக்குமார் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன் என்று சொன்னார். பகடைக் காயாகக் காவலர்களை நான் பயன்படுத்துவதாகச் சொன்னார். நான் அவைகளுக்கு எல்லாம் பதிலுக்கு பதில் அளித்து ஒரு நல்லுறவைக் கெடுத்துக் கொள்ள விரும்பவில்லை. இருந்தாலும் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்காவிட்டால், அதற்குப் பதிலே இல்லை போலும் என்று ஆகிவிடும் என்பதற்காக அதிலே சில விளக்கங்களை நான் அளிக்க விரும்புகின்றேன்.

தீயணைப்புத் துறையைப் பற்றிக் குறிப்பிட்டார். அதிலே ஒருவர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டார். தீயணைப்புத் துறையிலே கருவிகள் வாங்கியதில் ரூ. 2 கோடிக்கு அரசுக்கு இழப்பு ஏற்பட்ட வழக்கையொட்டி மாநில குற்றப் புலனாய்வுத் துறை விசாரணை செய்து வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கில் ஹரிஹரன், வீரராகவன் ஆகிய இரண்டு அதிகாரிகள் கைது செய்யப்பட்டார்கள். இந்த வழக்கு விசாரணையின்போது தீயணைப்புத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் தாமாகவே முன்வந்து நீதிமன்றத்திலே பிரிவு 164 சி.ஆர்.பி.சி.-ன் கீழ் வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். இந்த வாக்குமூலத்தை ஆராய்ந்து அவர்களைக் குற்றவாளியாகக் கருத வேண்டாம் என்றும், சாட்சியாக ஏற்றுக்கொள்ளலாம் என்றும் மாநில குற்றப் புலனாய்வுத் துறை முடிவு செய்து, அரசுக்கு அறிக்கை அனுப்பியது. இதை அவரே அன்றைக்குச் சொன்னார். வழக்கு மேல் விசாரணையிலே இருக்கிறது. ஆகையால் தீயணைப்புத் துறையைச் சார்ந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கவில்லை. புலன் விசாரணையின்போது குற்றவாளியா, இல்லையா என்பதை உறுதி செய்துகொண்ட பின்புதான் நடவடிக்கை எடுக்க முடியும். மேலும் அந்த அதிகாரியின்மீது **Floating pumps** வாங்கிய விவகாரத்திலே மேலும் விஜிலென்ஸ் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இப்படிப்பட்ட விசாரணைகள் நடைபெறும்பொழுது அவர்களுடைய பதவி உயர்வைத் தடுத்திடத் தேவையில்லை என்ற ஒரு கொள்கை முடிவுவை இந்த அரசு எடுத்திருக்கிறது. ஏனென்றால் விஜிலென்ஸ் விசாரணை என்று போட்டு, அந்தக் காரணத்தைக் கொண்டே அவர்களுடைய பதவி உயர்வைத் தடுத்துவிடக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், அது அவர்களை மிகவும் பாதிக்கும் என்பதற்காக, விஜிலென்ஸ் விசாரணை என்பதற்காக பதவி உயர்வு தடுக்கப்படத் தேவையில்லை என்ற ஒரு நிலையை எடுத்திருப்பதால்தான் இந்தச் சூழ்நிலையே தவிர. வேறு அல்ல.



**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட அதிகாரிமீது விஜிலென்ஸ் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. விசாரணைக்கு உட்பட்டிருக்கின்ற ஓர் அதிகாரி அந்தத் துறையினுடைய தலைமைப் பொறுப்பை வகித்துக் கொண்டிருப்பார் என்று சொன்னால், அந்த விசாரணையிலே எப்படி உண்மை வெளிவர முடியும் என்பதுதான் என்னுடைய வாதம். எனவேதான் நான் கேட்டேன். அந்த அதிகாரியின் மீது, நீதிமன்றத்திலே வழக்கு தொடர வேண்டாம் என்று சொல்லவில்லை. தமிழக அரசின்கீழ் பணியாற்றுகின்ற குற்றப் புலனாய்வுத் துறைதான் அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம், அவர் அப்ரூவர்-ஆக மாறிவிட்டார் என்று சொல்லியிருக்கிறது. அதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அதைத்தான் நான் மீண்டும் சொல்கிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரும் சொன்னேன். அந்த . அதிகாரியும்

அந்தத் துறையினுடைய தலைவராக இருந்து, அந்த விஜிலென்ஸ் அவர்மீது விசாரணை நடத்தும் என்று சொன்னால், சாட்சியங்களை அவர் கலைத்துவிட மாட்டாரா என்பதை முதலமைச்சர் புரிந்துகொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால் இதற்கு முன்னால் நடவடிக்கை எடுக்கப்பட்ட இரண்டு அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு முதலமைச்சர் சொன்ன காரணமும் அதுதான். அவர்கள் பணியிலே தொடருவார்கள் என்று சொன்னால், சாட்சியங்களை அவர்கள் கலைத்துவிடுவார்கள் என்று நீதிமன்றத்திலே இந்த அரசின் மூலமாக வாதிடப்பட்டிருக்கிறது. எனவேதான் நான் சொல்கிறேன். விசாரணை நடைபெற்று உண்மை வெளிவருகின்ற வரை எப்படி அந்த அதிகாரி அந்தத் துறையினுடைய தலைவராக நீடிக்க முடியும் என்பதை இந்த மன்றத்திற்கு முதலமைச்சர் விளக்க வேண்டும்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, அவர் அந்த இலாகாவில் தலைவராக இருக்கிறார் என்ற காரணத்தினால், சாட்சியங்களைக் கலைத்துவிடுவார் என்று சொல்வதற்கில்லை. ஏன் என்றால், அவர்களே சேர்ந்துதான் முதலிலே சாட்சியங்களாக ஆகி, சாட்சியம் அளித்திருக்கின்றார்கள். அதனால் அவர்கள் மீது, 'இவர்களை குற்றவாளிகளாகக் கருத வேண்டாம், சாட்சியாக ஏற்றுக்கொள்ளலாம்' என்று குற்றப் புலனாய்வுத் துறையே முடிவு செய்து, அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பி உள்ளது. Vigilance enquiry என்பது யார் மீது வேண்டுமானாலும் போட்டுவிடலாம். யார்மீது வேண்டுமானாலும் விஜிலென்ஸ் விசாரணைக்காக உள்ள ஒரு குற்றச்சாட்டை யாரும் ஒரு மொட்டைக் கடுதாசி மூலமாகக்கூட உருவாக்கிவிடலாம். அதற்காக யாரையும் பழிவாங்கிவிடக் கூடாது என்பதற்காகத்தான் அரசு இந்த நிலையை எடுத்திருக்கிறது என்பதை முதலிலேயே நான் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த அடிப்படையிலேதான் இந்த விளக்கத்தை நான் தந்திருக்கின்றேன்.

மற்றொன்று, விபத்து ஏற்பட்டதாக Insurance பணத்தை ஏமாற்றிப் பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை என்பது போன்ற ஒரு குற்றச்சாட்டை திரு. செல்லக்குமார் குறிப்பிட்டார். இது 1987, 1988 ஆம் ஆண்டு வாக்கில் நடைபெற்ற



ஒன்று. சென்னை காவல் போக்குவரத்து புலன் விசாரணைப் பிரிவில் Traffic Investigation Wing விபத்து நடக்காமலேயே நடந்ததாக, காப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டார்கள். இதுகுறித்து, பாலச்சந்திரன், கோட்டி சுப்பிரமணியன், ஜானகிராமன், தேவசகாயம், ராமசாமி, கன்னியப்பன், இராமய்யன் ஆகிய 7 பேர் மீதும் ஊழல் தடுப்புப் பிரிவும், C.B.I. விசாரணையும்--1993லேயே C.B.I. விசாரணை-மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த C.B.I. விசாரணையின் காரணமாக உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டு, அதன் பிறகு அவர் நிர்வாகத் தீர்ப்பாயத்தின் உத்தரவுப்படி படிகளைப் பெறுகிறார். அவர் சஸ்பென்டு செய்யப்பட்டார். தீர்ப்பாயத்திலே, அவர் முறையீடு செய்து கொண்டு தீர்ப்பாயத்தினுடைய உத்தரவுப்படி பணியிலே இருந்து வருகிறார். உதவி ஆய்வாளர்கள் ஜானகிராமன், தேவசகாயம், தலைமைக் காவலர் ராமசாமி இவர்கள் --Retiring age-- ஓய்வுபெறும் வயதை அடைந்துவிட்ட காரணத்தினால், அதற்குள்ளாகப் பணிநீக்கம் செய்ய வேண்டும் என்பதற்காக அவர்கள் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சம்பவம் ஏதும் இப்போது நடைபெற்ற சம்பவம் அல்ல. இன்னொன்று, C.B.I. அறிக்கை அனுப்பினால், அதன்மீதுதான் மாநில காவல் துறை நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர அறிக்கை அனுப்பாமல் இருக்கும்போது அதில் எந்த நடவடிக்கையும் எடுக்க இயலாது. இதுவரையிலே C.B.I. அவர்களைப்பற்றி எந்த அறிக்கையும் அனுப்பவில்லை என்பதை C.B.I. விசாரணையிலே அதிக அக்கறை உள்ள நண்பர்களுக்கு எல்லாம் நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்று, சேலம் கோர்ட் நிகழ்வினைப்பற்றி திரு. செல்லக்குமார் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அதிலே விரிவாகச் செல்ல விரும்பவில்லை. விரிவஞ்சி விடுக்கின்றேன் என்றால் அந்த வழக்கு ஏன் ஏற்பட்டது என்பதைப்பற்றியெல்லாம் நான் விளக்கமாகப் பேச விரும்பவில்லை. அமைச்சர் ஒருவர் மீது ஒரு குற்றச்சாட்டு, பயங்கரமான குற்றச்சாட்டு. பல விளக்கங்கள் அளிக்கப்பட்ட பிறகும் திரு. செல்லக்குமார் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டை திரும்பத் திரும்பச் சொன்னார். அது, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2 கோடி ரூபாயைக் கையாடல் செய்துவிட்டார் என்பதாகும். அப்படி ஒரு திட்டமே அங்கு நிறைவேற்றப்படவில்லை. 2 கோடி ரூபாயைக் கையாடல் செய்யவும் இல்லை என்று

வேளாண்மைத் துறை அமைச்சர் பல விளக்கங்கள் அளித்த பிறகும், நான் நிரூபிக்கத் தயார் என்று திரும்பத் திரும்ப செல்லக்குமார் அவர்கள் குறிப்பிட்ட காரணத்தினாலே வேளாண்மைத் துறை அமைச்சர் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, வழக்கு போட நேரிட்டது. அந்த வழக்கு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த வழக்கிற்குச் சென்றபோது, ஊர்வலமாகச் சென்று, ஊர்வலமாகச் சென்ற நிலையிலே வளாகத்திற்குள்ளே தகராறு ஏற்பட்டு--அந்தக் தகராறு நடைபெற்று இருக்கக்கூடாது என்பதிலே எனக்கு இருவிதமான கருத்தே கிடையாது-- எந்தப் பக்கத்திலே இருந்து தகராறுக்கான சூழ்நிலை ஏற்பட்டு இருந்தாலும் அது வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது என்பதை நான் அப்பொழுதே சொல்லியிருக்கின்றேன். எனவே, இவைகள் எல்லாம் எந்த அடிப்படையிலே எந்த மன உணர்வுகளின் காரணமாக ஏற்பட்டவை என்பதை எண்ணிப்பார்த்தால், அந்த உணர்வுகளிலிருந்து நம்மை மீட்டுக் கொள்வோமேயானால், இத்தகைய சூழ்நிலைகள் எல்லாம் ஏற்படாது என்பதை மாத்திரம் நான் மிகுந்த பணிவன்போடு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-30*

கொடுங்கையூர்பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் சொன்னார்கள். திரு. செல்லக்குமாரும் சொன்னார்; அநேகமாக, பேசிய அத்தனை பேரும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். திரு. சுப்பராயன் உட்பட அத்தனை பேரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். திரு. சுப்பராயன் அவர்கள்கூட ஒரு விபத்திலேயிருந்து ஒரு குழந்தையைக் காப்பாற்றிய காசிபாண்டியனைபற்றிக்கூடக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். காசிபாண்டியனுக்குக்கூட ஏதோ ஓரளவுக்கு சிறு தொகை வெகுமதியாக அளிக்கப்பட்டிருக்கின்றது. அது போதுமானது அல்ல என்ற குறை இருந்தாலும்கூட அது பரிசீலிக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

கொடுங்கையூரிலே வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்ட சம்பவம் கோவை துணை ஆய்வாளர் சந்திரசேகரன் சட்டம் ஒழுங்குப் பணியிலே திறமையாகப் பணி ஆற்றிய தன்மை, இவைகள் மாத்திரம் அல்ல, இவைகளைப் போலவே தீவிரவாதிகளை அடக்குவதிலும், மற்றும் தீவிரவாதிகளைக் கண்டுபிடிப்பதிலும், இதுபோன்ற



சோதனைகளை, உயிருக்குத் துணிந்து சென்று தங்களுடைய திறமையைக் காட்டிய வகையிலும் தகுதி வாய்ந்தவர்கள் யார் யார் இருக்கின்றார்களோ அவர்களுடைய பெயர்கள் எல்லாம் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டுக்கான அண்ணா பதக்கம் வழங்கும் விழாவிலே அவர்கள் எல்லாம் கௌரவிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

திரு. தாமரைக்கனி வரவில்லை. இருந்தாலும் அவர் சொன்னது ரெக்கார்டில் இருக்கும். ஆகவே பதில் சொல்கின்றேன். போலிக் கையெழுத்திட்டு, போலி ஆவணங்கள் மூலமாகச் சொத்துரிமை கொண்டாடினார்கள் என்று சொல்லி, திராவிட முன்னேற்றக் கழகத்தை அத்தோடு இணைத்து இங்கே பேசினார். ஏ.கே.கே. சுந்தரம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர் என்பது உண்மை. ஆனால் இதிலே சம்பந்தப்பட்டு இருப்பவர் யார் என்றால் அவருடைய தம்பி, மறைந்து விட்ட நடராஜன்; அவர் காங்கிரஸ் கட்சிக்காரர்; காங்கிரஸில் மிகுந்த தீவிரமாகப் பணியாற்றியவர். அவர் மறைந்து விட்டார். அவருடைய மனைவிக்கும், அவருடைய வளர்ப்பு மகளுக்கும் தகராறு. ஒரு உயில் தகராறு. அந்த உயிலிலே கையெழுத்திட்டு இருப்பது நடராஜன் தான் என்பது மகளுடைய வாதம். என் கணவர் கையெழுத்திடவில்லை என்பது அவருடைய துணைவியாரின் வாதம். இந்த வாதங்கள் இரண்டு கோர்ட்டுகளிலே நடந்து, சென்னை உயர்நீதிமன்றம் வரையிலே வந்து கடைசியாக திருவில்லிபுத்தூர் முதன்மை நீதிமன்றம் நடுவரிடம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலே நீதிபதி ஆவண நிபுணர்களின் கருத்தை ஏற்க இயலாது என்றும், இந்த ஆவணங்களை மீண்டும் பரிசோதனை செய்ய வேறு மாநில தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்புமாறும் 11-5-1998-ல் உத்தரவிட்டுள்ளார். இது முழுக்க முழுக்க சிவில் வழக்கு. இதிலே ஏதாவது முடிவு வந்து யாராவது குற்றம் சாட்டப்பட்டு, இன்னார் இதிலே தவறு செய்திருக்கிறார்கள் என்று வந்தால் அதற்குப் பிறகுதான் இது கிரிமினல் வழக்காக மாறி, போலீசார் நடவடிக்கை எடுக்க முடியும். அதற்கிடையிலே இதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அமைச்சர்களையும் சேர்த்துப் பேசியது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. பேசிய பிறகு அவர் பேசிய குறிப்பை என்னிடத்திலே கொடுத்தார். அதைப் படித்துப் பார்த்தேன். படித்துப் பார்த்தபோது எனக்கு ஒரு உண்மை விளங்கியது. முழு

பேச்சையும் அதிலே எழுதி வைத்திருக்கிறார். அதைப் பார்த்தால், அந்தப் பேச்சில் ஏ.கே.கே. சுந்தரம் என்று வருகிறது; நடராஜன் என்று வருகிறது; அந்தப் பெண் பெயர் வருகிறது; மனைவி பெயர் எல்லாம் வருகிறது. அதிலே அடுத்து அவர் பேச இருப்பது, யார் யார் மீதோ நடவடிக்கை எடுக்கிறீர்கள் என்று சொல்ல வந்தவர் முன்னாள் அமைச்சர்களை எல்லாம் கைது செய்தீர்கள்; முன்னாள் வாரியத் தலைவர்களை எல்லாம் கைது செய்தீர்கள் என்று சொல்ல வந்தவர், அதைப் படிப்பதற்குப் பதிலாக அமைச்சர்களுக்கு எல்லாம் இதிலே சம்பந்தம் இருக்கிறது என்று சொல்லிவிட்டார் என்று நான் கருதுகிறேன். ஏன் என்றால் அந்தப் பேச்சில் திடீர் என்று அமைச்சர்கள் பெயர் வருகிறது; ஆகவே, திரு. தாமரைக்கனி இதைத் தவறுதலாக படித்து இருப்பார் என்று கருதுகிறேன். இதிலே எந்த அமைச்சருக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்பதையும், இது ஒரு சிவில் விவகாரம், இதிலே இந்த அரசுக்கு எந்த சம்பந்தமும் கிடையாது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய திரு. ஐ. கணேசன் அவர்கள் திண்டிவனத்திலே டாக்டர் ராமதாஸ் மருத்துவமனை தாக்கப்பட்டதுபற்றி சொல்லி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னார். விசாரிக்கப்பட்டது. அந்த மருத்துவமனையினுடைய மேலாளர் திருநாவுக்கரசு, அவர் கொடுத்த புகார்மீது திண்டிவனம் காவல் நிலையத்தில் குற்ற எண் 122/88-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இ.பி.கோ. பிரிவு 147, 148, 448, 427, 323-இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு 5 குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த வழக்கு தீவிர புலன் விசாரணையிலே உள்ளது.

முற்பகல் 11-35

திரு. ஐ. கணேசன் இன்னொரு குற்றச்சாட்டைச் சொன்னார். சேலத்திலே மதுபானக் கடைகளை ஏலம் விட்டதில் தவறுகள் நடந்ததாகக் குறிப்பிட்டார். சேலத்திலே மொத்தம் 161 கடைகள் ஏலத்திற்குக் கொண்டு வரப்பட்டன. அவற்றினுடைய மொத்த குறுமத் தொகை-குறுமத் தொகை என்றால் upset price- ரூ. 8.04 கோடியாகும். ஆனால், இந்த upset price-க்கு மாறாக ஏலத்திலே கிடைத்த மொத்தத் தொகை ரூபாய் 17 கோடி - ரூ. 17.03 கோடி கிடைத்தது. இது குறுமத் தொகையைவிட-குறுமத் தொகை என்பது ரொம்பத் தூய தமிழ். அதை Upset Price எனலாம்--அந்த



Upset price-க்கு மேலே கிடைத்தது எவ்வளவு என்றால் 112 சதவிகிதம் அதிகம் கிடைத்திருக்கிறது. அதைத்தான் நம்முடைய திரு. ஐ. கணேசன் குறையாகச் சொன்னார்.

குறுமத் தொகை என்பது சென்ற 3 ஆண்டுகளில் கிடைத்த உரிமத் தொகையின் அடிப்படையிலேதான் நிர்ணயிக்கப்படுகிறது. மிக அதிக அளவிலே இருந்தது. ஆனால் அதைவிட மிகக் கூடுதலாக, சேலம் மாவட்டத்தில் ஏலத்தில் தொகை கிடைத்திருப்பது மேலே தரப்பட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து தெரியும் என்றே நான் நம்புகின்றேன். அரசினுடைய அறிவுரைகளின்படி சென்ற ஆண்டு கிடைத்த உரிமைத் தொகைகளைவிட குறைவாகக் கிடைத்திருந்தாலோ அல்லது கடையின் விற்பனையிலே 10 சதவிகிதத்திற்குக் குறைவாகக் கிடைத்திருந்தாலோ, அந்தக் கடைகளை மறு ஏலத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்பது அரசின் கொள்கை. அந்த அடிப்படையில் அந்த மாவட்டத்தில் 23 கடைகள் மறு ஏலத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இந்த 23 கடைகளுடைய குறுமத் தொகை 87 இலட்சம் ரூபாய். அதற்கு மாறாக ரூ. 1.31 கோடி முதலில் கிடைத்தது. முதல் ஏலத்தில் அந்தக் கடைகளின் வாயிலாகக் கிடைத்த தொகை ரூ. 1.31 கோடி. மறுபடியும் ஏலம் விட்டதிலே கிடைத்த தொகை ரூ. 1.81 கோடி என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனவே, எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் கடைகள் மறு ஏலத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அரசாங்கத்தினுடைய இந்தச் சீரிய கொள்கையால், அன்றைக்கு திருநாவுக்கரசு சொன்னார்கள். தனக்கு நன்றிகூற வேண்டுமென்று. அவருக்கு நன்றி கூற வேண்டுமென்றால், ரூ. 750 கோடி வந்திருக்க வேண்டுமென்று திரு. கணேசன் சொன்னார். நம்முடைய ஞானசேகரன் 'நானாக இருந்தால் ரூ. 1,000 கோடி இந்த ஏலத்திலே சம்பாதித்திருப்பேன்' என்று சொன்னார். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** அரசுக்கு என்று சொன்னேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதுதான். ரூ. 1,000 கோடி அல்ல, ரூ. 2,000 கோடி அல்ல. அது ரூ. 250 கோடியாக இருந்ததை ரூ. 500 கோடியாகக் கொண்டு வந்தார்கள் என்பதற்காக ஒரு பாராட்டு கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் ரூ. 750 கோடி என்கிறார்; இவர் ரூ. 1,000 கோடி என்கிறார். யார் யார், எப்படி எப்படி ஏலம் எடுத்தார்கள். என்று தெரியும். நமக்குள்ளே

பேசக்கூடாது அதெல்லாம். யார் யார் கூட்டணி எங்கெங்கே நடந்தது? அரசியலிலே மாத்திரமா இருக்கிறது கூட்டணி? (மேசையைத் தட்டும் ஒலி)

சேலம் ஜில்லாவிலே ஒரு ஏலக் கடையிலே இந்தக் கூட்டணியிலே வந்த பணத்தை வைத்து ஒருவர் பொதுக் குழுவே நடத்தினார். பொதுக் குழுவிற்குச் செலவே அவர்தான் பண்ணினார் என்று கேள்விப்பட்டேன். விவரங்களிலே நுழைய நான் விரும்பவில்லை. அது எல்லோருக்கும் தெரியும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலமைச்சர் பேசி முடித்து விடட்டும்; அப்புறம் கேளுங்கள். இப்போது உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நம்முடைய நண்பர் குமாரதாஸ் அவர்கள் மதுவிலக்கிலே 3 இலட்சம் வழக்குகள் போடப்பட்டிருப்பதை ரொம்ப ஆச்சரியமாகக் குறிப்பிட்டு, 3 இலட்சம் வழக்குகளா, கள்ளச் சாராயம் அந்த அளவுக்குப் பெருகி விட்டதா என்று அங்கலாய்த்துக் கொண்டார். அவருடைய அங்கலாய்ப்பிலே நியாயம் இருக்கிறது. ஆனால், என்னைப் பொறுத்தவரையில் அது போதாது, இன்னும் அதிகமாகப் போடப்பட்டிருக்க வேண்டும். இங்கே நம்முடைய லத்திப் அவர்களெல்லாம் பேசியதைப் பார்க்கும்பொழுது 3 இலட்சம் வழக்குகள் அல்லது 3 இலட்சம் பேர் கைது செய்யப்பட்டார்கள் என்பதெல்லாம் குறைவுதான், இன்னும் அதிகமாக இதிலே கவனம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அதைப்பற்றி பிறகு வருகிறேன்.

அவருக்கு நான் சொல்கிற விளக்கம், இப்பொழுது 6¼ கோடி மக்கள் தமிழ் நாட்டிலே இருக்கிறார்கள் 3½ கோடி மக்கள் இருந்த காலத்திலே-'1956'லே 1 இலட்சத்து 35 ஆயிரம் வழக்குகள், 1957-லே 1 இலட்சத்து 29 ஆயிரம் வழக்குகள். 1958-இலே 1 இலட்சத்து 10 ஆயிரம் வழக்குகள். 1966-லே 1 இலட்சத்து 89 ஆயிரத்து 548 வழக்குகள், 3 கோடி பேருக்கு 1 இலட்சத்து 89 ஆயிரம் வழக்குகள் என்றால் 6 கோடி பேருக்கு 3 இலட்சம் வழக்குகள் வருவது ஒன்றும் ஆச்சரியமில்லை. இன்னும் நிறைய வழக்குகள் வர வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. இன்னும் நிறைய வழக்குகள் வர வேண்டும். (குறுக்கீடு) நான் இன்றைக்கு இப்படித்தான் பேச முடியும். என்னால் வேகமாகப் பேச முடியாது. உடல்நிலையைக் கருத்திலிட்டு நான் துண்டு துண்டாகத்தான் பேசுவேன். மன்னித்துக்கொள்ள வேண்டும்.



முற்பகல் 11-40

கோவை குண்டு வெடிப்புபற்றி ஏன் முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கவில்லை என்று திரு. ஞானசேகரன் கேட்டார். திரு. குமாரதாஸ் கேட்டார். இன்னும் சிலபேர் இங்கே கேட்டார்கள். அதற்குப் பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பாராட்டிய நம்முடைய செல்லக்குமார்கூட யாருக்கோ பயந்துகொண்டு எடுக்கப்பட்டது மாதிரி சொன்னார். அவர் பேசுவதிலேயுள்ள நயம் எனக்குத்தான் புரியும். பலபேருக்குப் புரியாமல்கூட இருந்திருக்கலாம். ஏதோ பா.ஜ.க. ஆட்சி வந்தவுடன் பயந்து கொண்டு நடவடிக்கை எடுத்தது மாதிரி, அவ்வாறு தொணிக்கிற மாதிரி சொன்னார். நான் யாருக்கும் பயப்படுவதில்லை. நான் நியாயத்திற்கு மாத்திரம்தான் பயப்படுவேன். வேறு யாருக்கும் பயப்படமாட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) எமர்ஜென்சிக்கே பயப்படாத ஆளாயிற்றே நான். (மேசையைத் தட்டும் ஒலி) எமர்ஜென்சியின்போது என் மகன், மருமகன், பக்கத்திலே உட்கார்ந்திருக்கிற வீராசாமி, வீரபாண்டி ஆறுமுகம், மணி, துரைமுருகன், இங்கு உட்கார்ந்திருக்கிறார்களே இதிலே பாதி பேர் ஜெயிலில் இருந்தார்கள், எமர்ஜென்சியில் மிசா கைதியாக. அப்பொழுதே பயப்படவில்லையே! ஆளே அனுப்பியிருந்தார்களே டெல்லியிலிருந்து. அங்கேயிருந்து கவர்னரே கேட்டாரே! இந்தத் தீர்மானத்தை மாத்திரம் வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள். எமர்ஜென்ஸியை எதிர்த்து நீங்கள் போட்டிருக்கிற தீர்மானத்தை மாத்திரம் வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள். கேரளாவில் கொடுத்ததுமாதிரி ஒரு வருடம் ஆட்சி நீட்டித்துக் கொடுக்கிறோம் என்று கேட்பதற்கு டில்லியிலிருந்து ஒரு மந்திரி வந்தார். நான் அண்ணாவினுடைய தம்பி, நான் எழுதிய தீர்மானத்தை திருப்பி எழுதமாட்டேன் என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) தீர்மானத்தை வாபஸ் வாங்கியிருந்தால் இன்னும் ஒரு வருடம் ஆட்சியில் அப்பொழுது இருந்திருப்போம். 400, 500 பேர் ஜெயிலுக்குப் போயிருக்க வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் அவ்வளவு அவதிப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. எங்களுடைய வீடு, ஆபீசில் எல்லாம் 'ரெய்டு' எல்லாம் நடந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வளவும் நடந்தது. நடந்து போனதற்குப் பிறகு இனி நடக்காமல் இருப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்தான் அவை. முன்கூட்டியே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் நான் திருப்பிக் கேட்கமுடியாதா?

உளவுத் துறை Cipher, Zero, எதற்கும் லாயக்கில்லை, என்றெல்லாம் திரு. ஞானசேகரன் இங்கே சொன்னார். அவர் இப்படித் திட்டுவதைப்பற்றி நான் வருத்தப்படமாட்டேன். ஏனென்றால் திட்டத் திட்ட உளவுத் துறை நன்றாக இருக்குமென்பதற்காக தம்பி சொல்லியிருப்பார். இந்த கவர்ன்மெண்டில் இருக்கின்ற உளவுத் துறையைக் குறை கூற வேண்டும் என்பதற்காகச் சொன்னதாக நான் கருதமாட்டேன். 'Utter failure' என்று சொன்னார். அது success ஆக நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் 'Utter failure' என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருப்பார் என்று நான் கருதுகிறேனேயல்லாமல் வேறல்ல. ஆனால் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த உளவுத் துறை, உலக உத்தமர், தேசப் பிதா, இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்த மகாத்மா காந்தி கொல்லப்படப் போகிறார் என்பதைச் சொல்லாத உளவுத் துறை 'Utter failure'-ரா இல்லையா? எண்ணிப் பார்க்க வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அன்னை என்று நம்மால் பாராட்டப்பட்ட, இந்தியாவினுடைய அன்னை என்று நம்மால் இன்றைக்கும் பாராட்டப்படுகின்ற இந்திரா காந்தியை அவர்களுடைய வீட்டுத் தோட்டத்திலேயே அவர்களுடைய பாதுகாவலர்கள் சுட்டுக்கொல்லப் போகிறார்கள் என்பதை உளவுத் துறை கண்டுபிடிக்க முடியவில்லையே! *(மேசையைத் தட்டும் ஒலி)*

13 தடவை வந்துவிட்டுப் போனார் ராஜிவ் காந்தி, நான் முதலமைச்சராக இருந்தபோது தமிழ்நாட்டிற்கு. ஒரு துரும்பு அவர் மேல் படாமல் பாதுகாத்து அவரை டெல்லிக்கு அனுப்பி வைத்தோம். ஆனால், கடைசியாக இங்கே வந்தபோது, கவர்னர் ஆட்சியிலே வந்தபோது, தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டு 3 மாதங்கள் கழித்து கவர்னர் ஆட்சியில் ராஜிவ் காந்தி வந்தார். இவ்வளவு பாதுகாப்பு இருந்தும்கூட அவர் கொல்லப்பட்டு ஒரு மூட்டையாகக் கட்டப்பட்டு அவருடைய உடல் டெல்லிக்கு அனுப்பப்பட்டது. மூப்பனாரும் மற்ற சில பேரும்தான் இருந்து அனுப்பி வைத்தார்கள், அன்றைக்கு அவர்களும்கூடப் போனார்கள். ஏன் முன்கூட்டியே உளவுத் துறை இதைச் சொல்லவில்லை? எங்கே போனது உளவுத் துறை? பிறகுதான் விசாரிக்கிறோம் என்ன பண்ணியது உளவுத் துறை என்று. பிறகுதான் கமிஷன் போடுகிறோம். அதுமாதிரி எதுவும் மின்னல் வேகத்தில் நடந்துவிடும்போது, ஏன் முன்கூட்டியே செய்யவில்லை, எங்கே போனது உளவுத் துறை என்று கேட்பதெல்லாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதற்காகச்



செய்யப்படுகிற, உஷார்படுத்துகின்ற காரியங்களாக இருக்கலாமே தவிர, அதையே ஒரு குற்றச்சாட்டாக வைத்துக்கொண்டு அதையே பேசிக் கொண்டிருப்பது நியாயமில்லை என்பதற்காக இதைச் சொல்கிறேன். உளவுத் துறை சில நேரங்களில் நல்ல முறையிலே செயல்படுகின்றது. சில நேரங்களில் அவர்களையும் மீறி சில காரியங்கள் நடைபெற்று விடுகின்றன. எங்களுக்கு வந்த செய்திகளை வைத்துக்கொண்டுதான் அத்வானியைக் காப்பாற்ற முடிந்தது. நான் முதலிலே சொல்லும்போதுகூட அத்வானிக்கு மனித வெடிகுண்டு வரவில்லையென்ற செய்திதான் கோவையிலிருந்து வந்தது. பிறகு மெல்ல மெல்ல அந்தச் செய்திகள் புலன் விசாரணைக்காக விடப்பட்ட பிறகு, தனிப் பிரிவு அமைக்கப்பட்ட பிறகு, அத்வானியைக் கொல்வதற்காக மனித குண்டுகளுடன் சிலபேர் வர முயன்றதாகவும், அவர்கள் அந்தக் கூட்டத்திற்குச் செல்ல முடியாமலேயே போலீஸ் பாதுகாப்பு இருந்ததாகவும் சொல்கிறார்கள். அந்தச் செய்தி வந்தது. அதைத்தான் white paper-ல் இங்கே நான் வைத்தேன். அதையும் நீங்கள் தெளிவாகத் தெரிந்து வைத்துக்கொண்டிருப்பீர்கள். திரு. அத்வானியை ஏன் காப்பாற்றினோம்? சில நேரங்களில், உளவுத் துறையானாலும் போலீஸ் ஆனாலும் சரியாகச் செயல்படும்போது பெரிய தலைவர்களைக் காப்பாற்றிவிட முடிகிறது. மிகப் பெரும் தலைவர்களான உத்தமர் காந்தி, திருமதி இந்திரா காந்தி, திரு. ராஜிவ் காந்தி இவர்களையெல்லாம் காப்பாற்ற முடியாமலே போய்விட்டது. இவைகளையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கத் தவறிவிடக் கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கின்றேன்.

*முற்பகல் 11–45*

முன்கூட்டியே புலன் விசாரணையிலே தகவல் வந்தது. உளவுத் துறையினுடைய தகவல் வந்தது. அதை வைத்து நாங்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாகத்தான், பிப்ரவரி 1 ஆம் தேதி முதல் 13 ஆம் தேதி முடிய தமிழ்நாடு முழுவதும் உள்ள போலீஸ் இலாகா மாவட்ட ரீதியாக, ஆங்காங்கு பணியாற்றியதன் காரணமாகத்தான் மாநிலம் முழுவதும் 49 வழக்குகள்; 81 பேர் கைது; நாட்டு வெடிகுண்டுகள் 2,000 கைப்பற்றப்பட்டன. ஜெலட்டின் குச்சிகள் 586 கைப்பற்றப்பட்டன; டெட்டனேட்டர்கள் 1,595, உரிமம் இல்லாத துப்பாக்கிகள் 8, ரிவால்வர் 2 என்று கைப்பற்றப்பட்டன. ஆனால், அங்கே மாத்திரம், கோவையிலே மாத்திரம் திரு. அத்வானியைக் காப்பாற்றுவதிலே காட்டிய அக்கறை, அவர்களுக்குச் சரியான

தகவல் அங்குள்ள உள்ளூர் போலீஸ்காரர்களால் தரப்படாததால் ஏற்பட்ட தொய்வு, இவைகளின் காரணமாக போலீஸ் கமிஷனர் நடவடிக்கை எடுக்கத் தவறியது, அதற்காகத்தான் இந்த அரசு அவரிடம் இன்றைக்கு விளக்கம் கேட்டு கடும் நடவடிக்கைக்கான குற்றச்சாட்டை அவர்மீது சுமத்தியிருக்கின்றது. இவ்வளவுக்கும் பிறகு, இதிலே குறைபட்டுக்கொள்ள என்ன இருக்கிறது என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். C.B.I., C.B.I. என்று இதற்குக்கூட C.B.I. விசாரணை வைக்க வேண்டும் எனறு நம்முடைய ஞானசேகரன் இங்கே வலியுறுத்தினார். எங்கெங்கேயோ ஆரம்பித்து, போயஸ் கார்டனிலே ஆரம்பித்து, C.B.I. விசாரணை இந்த வழக்குக்கு வைக்க வேண்டும் என்பது திரு. ஞானசேகரன் வரையிலும் வந்தாயிற்று.

நான் ஒரு உண்மையை உங்களுக்குச் சொல்கிறேன். திரு. அத்வானி கோவைக்கு வந்து இவ்வளவு நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன என்ற செய்தி எனக்கு எப்போது கிடைத்தது என்றால்-- தலைவர் மூப்பனாரும் நானும், மாணிக்கம் அவர்களும் மற்றும் தோழமைக் கட்சிகளினுடைய தலைவர்களும், நம்முடைய அப்துல் லத்தீப் அவர்களும், எல்லோரும் சென்னையிலே அன்றைக்கு, 14 ஆம் தேதியன்று, சிந்தாதிரிப்பேட்டையில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தினுடைய இறுதிக் கூட்டத்திலே, வேண்டுகோள் கூட்டத்திலே பேசிவிட்டு, நான் காரிலே ஏறுகிறேன். அப்போது, மாறன், வீராசாமி ஆகிய இவர்கள் எல்லாம் நான் காரிலே ஏறுவதுவரையிலே என்னிடத்திலே சொல்லாத செய்தியை, காரிலே ஏறி உட்கார்ந்ததுமே சொன்னார்கள், இப்படி, கோயம்புத்தூரிலே குண்டு வெடித்துவிட்டது என்று. நான் நேராக வீட்டுக்குச் செல்லவில்லை. கோட்டைக்குத்தான் வந்தேன். வந்தவுடனே தலைவர் மூப்பனார் அவர்களுக்குப் போன் செய்தேன்; மாணிக்கம் அவர்களுக்குப் போன் செய்தேன்; சங்கரய்யா அவர்களுக்குப் போன் செய்தேன்; ஜனதா தளத்திலே வடிவேலு அவர்களுக்குப் போன் செய்தேன். மற்றவர்கள் கிடைக்கவில்லை. திரு. அப்துல் லத்தீப் அவர்கள் ஊரிலே இல்லை, அன்றைக்கு உடனடியாகப் புறப்பட்டு எங்கேயோ போய்விட்டார். சமது அவர்களுக்குக்கூட போன் செய்தேன். இப்படி எல்லோருக்கும் போன் செய்தேன். மூப்பனார் அவர்கள் உடனடியாக இங்கே வந்தார். மாணிக்கம் அவர்களும் வந்தார்கள். (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். நல்லக்கண்ணு அவர்களும் இங்கே வந்தார்கள். வந்தவுடனே, அவர்களிடத்திலே நிலைமைகளைப்பற்றிச் சொன்னேன்.



சாயங்காலம் 5.00 அல்லது 6.00 மணிக்கு வந்தவர்கள் இரவு 9.00 மணி வரை என்னோடுதான் கோட்டையிலே முதலமைச்சர் அறையிலேதான் இருந்து, நாங்கள் விவாதித்தோம். என்னிடத்திலே இருந்த குறிப்பைக்கூட அவர்களிடத்திலே எடுத்துக்காட்டினேன். இன்னின்ன இயக்கங்களைத் தடை செய்ய வேண்டும் என்று ஏற்கெனவே பரிந்துரை வந்தது, கொஞ்சம் பொறுத்திருந்து பார்க்கலாம் என்பதற்காக, அப்பொழுதே, கையெழுத்து போட்டிருக்கிற ஃபைல், இதோ இருக்கிறது என்று அந்த ஃபைலைக்கூட காட்டினேன். பிறகு அவர்களிடத்திலே கலந்துபேசித்தான் இரவு 8 மணி அளவிற்கு அந்த இரண்டு இயக்கங்களும் தடை செய்யப்பட்டன. உடனடியாக அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள். இதற்கெல்லாம் ஒரு உள்நோக்கம் யாரும் கற்பிக்கக்கூடாது. ஏதோ வேண்டுமென்றே அலட்சியப்படுத்திவிட்டோம் என்று யாரும் கருதக்கூடாது. அரசாங்கமே இதைச் செய்திருக்கலாம் என்று எண்ணக்கூடாது. அரசாங்கம் என்ன செய்ய முடியும்? வருகிற செய்தியை அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரிவிக்க முடியும். அப்படித்தான் தெரிவித்திருக்கிறோம்.

முற்பகல் 11-50

இங்கேகூட ஒரு பழைய நிகழ்ச்சி; இந்த அவையிலே நடந்தது;. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பேசுகிறார். "பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய பிரச்சினைகளை சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையிலே எழுப்பும்போது, காவல் துறையிடமிருந்துதான், நான் விவரங்களைப் பெற்று இந்த அவைக்குத் தர முடியும். தனிப்பட்ட முறையில் நான் 'ஷெர்லாக் ஹோம்ஸ்' பாணியிலே போய் புலனாய்வு செய்ய முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)" எல்லோரும் மேசையைத் தட்டினார்கள். "நானே ஒற்றர் மாதிரி போய், அல்லது ஒரு பெரிய துப்பறியும் நிபுணர் மாதிரி, 'ஷெர்லாக் ஹோம்ஸ்' பாணியில் நானே நேரடியாகப் போய் செய்ய முடியாது. போலீஸ்காரர்கள்தான் செய்யவேண்டுமென்று" சொல்லிவிட்டு, இன்றைக்கு என் மேலே குறை கூறிக் கொண்டிருக்கின்ற ஜெயலலிதா, இதே அவையிலே பேசி இதிலே அச்சிடப்பட்டு, நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கிறது. இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் என்னவென்றால், ஒழுங்காக யார் யாரோடு கலந்து பேசி, எந்தெந்தத் தலைவர்களோடு ஆலோசித்துச் செய்ய வேண்டுமோ, அப்படித்தான் ஆலோசித்து

எல்லா காரியங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. அதை விடுத்து, C.B.I. C.B.I. , என்றால், C.B.I. யில் வழக்குகள் நீண்ட நாட்கள் ஆகின்றன. C.B.I.-யை நான் குறை சொல்லமாட்டேன். ஆனாலும் இதே C.B.I. விசாரணை கேட்டு, மேலவளவு நிகழ்ச்சிக்கு தேவர் பேரவை எனக்குக் கோரிக்கை வைத்தது. அந்தக் கோரிக்கையை வைத்து நான் நம்முடைய எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்களிடம்-- அவர்கள் அப்பொழுது அதற்கு பொறுப்பு ஏற்றிருந்த அமைச்சர் அவர்களிடம் கேட்டு எழுதினேன். இல்லை என்றுதான் பதில் வந்தது. 'இப்பொழுது C.B.I. தர இயலாது, போலீஸ்காரர்களே விசாரிக்கிறார்கள். அதுவே போதும்' என்று பதில் வந்தது. மதுரை லீலாவதி, கம்யூனிஸ்டு கட்சியினுடைய கவுன்சிலர் கொலையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தார் சம்பந்தப்பட்டிருந்தாலும்கூட, அவர்கள் மீது குற்றச்சாட்டு இருந்தபோதும்கூட, எந்தவிதமான பாரபட்சமும் காட்டாமல், அன்று கைது செய்யப்பட்டவர்கள் எத்தனையோ பேர் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் ஜாமீனில் வந்திருக்கிறார்கள் என்பதும் எங்களுக்கும் தெரியும். --10, 11 மாதங்கள் ஆகின்றன; இன்னும் யாரும் ஜாமீனில்கூட வரவில்லை. அவர்களுக்காக C.B.I. விசாரணை வேண்டுமென்று கேட்டார்கள். நம்முடைய அரசாங்கத்தை நம்பியோ, நம்பாமலோ C.B.I. விசாரணை வேண்டுமென்று கேட்டார்கள். சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று பரிந்துரை செய்து எழுதினேன். அதற்கும் 'இப்பொழுது ஒழுங்காகத்தானே போலீஸ்காரர்கள் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள், C.B.I. அனுப்ப இயலாது' என்ற ரீதியில் எனக்குக் கடிதம் எழுதிவிட்டார்கள்.

அடுத்து, இரயில் குண்டு வெடிப்பு அண்மையில் நடைபெற்றது. பிப்ரவரி மாதத்தில் நடைபெற்றது. அப்பொழுதும் C.B.I. விசாரணை வேண்டுமென்று இரயில்வே துறைக்கும், மத்திய அரசுக்கும் எழுதினேன். C.B.I. அனுப்ப இயலாது என்று எழுதி விட்டார்கள். இந்தச் சூழ்நிலையில்தான் C.B.I. இல்லாமலேயே இப்பொழுது நடைபெறுகின்ற கோவை குண்டு வெடிப்பு தொடர்பான அந்த விசாரணைகளில் நல்ல முன்னேற்றம் இருக்கின்றது. தீவிரவாதிகளுடைய தலைவர்களெல்லாம் பிடிபடுகின்றார்கள். பிடிக்கப்படவே முடியாது என்று எண்ணப்பட ஏர்வாடி காசிம் கூட இரண்டு நாட்களுக்கு முன்பு கைது செய்யப்பட்ட அந்தச் செய்தியையும் இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். எனவே, வெகுவேகமாக இந்தப் புலன் விசாரணை முன்னேறிக்



கொண்டிருக்கின்ற காரணத்தால், இதிலே C.B.I. விசாரணை தேவையா என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டிய பொறுப்பு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உண்டு என்பதை நான் எடுத்துக்காட்டி இந்த அளவோடு இதை நிறுத்துகின்றேன்.

இன்னொன்று, போலீசார் சில போராட்டங்களிலே அத்துமீறி தலையிடுகிறார்கள், பாரபட்சமாக நடந்துகொள்கிறார்கள் என்றெல்லாம்கூட இங்கே பேசினார்கள். நம்முடைய கிருஷ்ணசாமி அவர்களும் நான் வரும்போது அதைத்தான் பேசிக்கொண்டிருந்தார். நான் போராட்டங்களைப்பற்றி கிருஷ்ணசாமிக்காகச் சொல்லவில்லை. பொதுவாக இப்படிப்பட்ட போராட்டங்களே, அரசு ஒரு கோரிக்கைக்கு இணங்குகிறது என்று அறிவித்த பிறகும் நடக்கின்றன ஏன் அறிவித்தாய் என்று கேட்டு. அதுதான் வேடிக்கை. இதே அவையில் இவ்வளவு பேர் சாட்சியாக இடைநிலை ஆசிரியர்கள்பற்றி நான் வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். அதிலே ஒரே சங்கடம் என்னவென்றால், அதன்காரணமாக, அமைச்சுப் பணியாளர்கள், இளநிலைப் பொறியாளர்கள், மேற்பார்வையாளர்கள் இந்த 3 பேரும் இந்த Category-ல் உள்ளவர்கள், 2½ இலட்சம் பேர் இருக்கிறார்கள். இந்த 2½ இலட்சம் பேரும் தங்களுக்கும் இதிலே முரண்பாடு ஏற்பட்டுவிட்டது, இடைநிலை ஆசிரியர்களுக்குக் கொடுத்ததுபோல, எங்களுக்கும் கொடுங்கள் என்று கேட்பார்கள்; எனவே, அவர்களைக் கூப்பிட்டு சமாதானப்படுத்தி, ஒரு சமரசம் செய்து அதற்குப் பிறகு அறிவிக்கப்படும் என்று அறிவிக்கப்படும் தேதியைத்தான் சொன்னோம். என்றைக்கு அறிவிக்கப்பட்டாலும் முன் தேதியிட்டுத்தான் கொடுக்கப் போகிறோம், அதாவது 1-1-1996 இருக்கிறதே, அந்த 1-1-1996 தேதியிட்டுத்தான் கொடுக்கப்போகிறோம் என்று சொன்னோம். இவ்வளவு சொல்லி ஆகிவிட்டது. இவ்வளவு சாட்சியோடு சொல்லி ஆகிவிட்டது. சொன்ன பிறகும், முதலமைச்சர் அழைத்துப் பேச வேண்டுமாம். முதலமைச்சர் அழைத்துப் பேசவில்லையா? முதலமைச்சர் அழைத்துப் பேசிய படத்தைக் காட்டவா? படம்கூட என்னிடத்திலே இருக்கிறது. (ஒரு பத்திரிகையில் வந்த படத்தைக் காண்பித்தார்). இந்தப் படத்தில் அவர்களெல்லாம் இருக்கிறார்கள். முரசொலியில் வந்திருக்கிறது. எல்லா பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. இந்தப் படம் வந்திருக்கிறது. வந்து பேசினார்கள்; பேசிவிட்டு, நாங்கள் One man commission--க்குப் போகமாட்டோம் என்றார்கள். ஏன் போகக்கூடாது? அவர் என்னைவிடப் பெரியவர்தான். ஐ.ஏ.எஸ். ஆபீசர்தான்.

ஐ.ஏ.எஸ். ஆபீசராக இருந்தவர்தான். தனிப்பட்ட தகுதி என்று பார்த்தால், அவர் சாதாரண ஆள் இல்லை. One man commission-ல் போய் நிலையை விளக்கிச் சொன்னால் என்ன? நீங்கள் வேண்டுமானால் போகவேண்டாம், அவர்களைக் கூப்பிட்டுப் பேசி முடித்துவிட்டு, அதற்குப் பிறகு ஆசிரியர்கள் பிரச்சினையைத் தீர்க்கப் போகிறோம் என்று சொன்னால், கேட்கமாட்டோம், நாங்கள் போராடித்தான் தீருவோம் என்றால் என்ன அர்த்தம்?

முற்பகல் 11-55

நேற்றைக்குப் போராட்டம். போராடியவர்களெல்லாம் கைது செய்யப்பட்டு-- கைது செய்யப்பட்டார்கள் என்று அர்த்தம் அல்ல, அங்கிருந்து அகற்றப்பட்டு உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். நாளைக்கு மறுபடியும் போராட்டம்; தொடரும் போராட்டம். என்னுடையப் பிறந்த நாள் நேரத்திலே போராட்டம் நடத்துங்கள். என்னுடைய பிறந்த நாள் நினைவாக அவர்கள் போராட்டம் நடத்துவதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அதற்காக, பிறந்த நாளிலே போராட்டம் நடத்தினால், உடனே பணிந்து விடுவேன் என்று நினைத்தால், அதற்கெல்லாம் பணிகிற ஆள் நான் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கோரிக்கையை நிறைவேற்றுவதாகச் சொன்ன பிறகும்கூட, நீ கூப்பிட்டுப் பேசு என்று சொன்னால் என்ன அர்த்தம்? எதற்காக நான் கூப்பிட்டுப் பேச வேண்டும்? கூப்பிட்டுப் பேசக்கூடாது என்று இல்லை. எல்லோரையும் கூப்பிட்டுப் பேசியிருக்கிறேன். எந்தப் பிரிவு, எந்தத் தரப்பாக இருந்தாலும் பேசியிருக்கிறேன். உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள், சமமானவர்கள், சமமற்றவர்கள் என்றெல்லாம் நான் பாகுபாடு பார்த்ததே கிடையாது. இந்த இரண்டு வருட ஆட்சியிலேயும், அல்லது நான் எப்போது ஆட்சியிலே இருந்தாலும் எந்த பிரதிநிதித்துவத்துக்காக, யாரைக் கூப்பிட்டுப் பேசாமல் இருந்திருக்கிறேன்? வியாபாரிகளா அல்லது விவசாயிகளா அல்லது தொழிலாளர்களா, ஒவ்வொரு பிரிவினரோடும் ஒரு மணி நேரம், 2 மணி நேரம், 8 மணி நேரம்கூடப் பேசியிருக்கிறேன். பி & சி விவகாரத்திலே 8 மணி நேரம். இப்போதுதான் பேசியிருக்கிறேன் எனவே பேச மாட்டேன் என்கின்ற மாதிரியும், அதை ஒரு குறையாக வைத்து, போராடுவோம் என்றும் சொன்னால், இதையெல்லாம் இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள்தான் எண்ணிப்



பார்க்க வேண்டும். அவர்களுக்குப் பின்னால் நின்று தூண்டுவிடுகின்றவர்கள்தான் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

எங்கே, எத்தனை மாநிலங்களில் மத்திய அரசுக்குச் சமமாக மாநில அரசு ஊழியர்களுக்கு சம்பளத்தைக் கொடுத்திருக்கிறார்கள்? சொல்லுங்களேன். எத்தனை மாநிலங்களிலே கொடுத்திருக்கிறார்கள்? கொடுக்கப்பட்ட மாநிலங்களிலே, அதே விகிதாசாரத்தை எத்தனை இடங்களில் ஆசிரியர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள்? சொல்லுங்களேன் பார்க்கலாம். அது இல்லாத இடம் எத்தனை என்பதை அன்றைக்கே நான் பட்டியல் போட்டுக் காண்பித்திருக்கிறேன். இப்போதும் சொல்கிறேன், கோரிக்கையை நான் ஏற்றுக் கொண்டாகிவிட்டது கொள்கை ரீதியாக. அதிலே எந்தவிதமான மறுப்பும் இல்லை. ஒரேயொரு பிரச்சினை, அன்றைக்கே சொன்னேன். ஒரு சடங்கு, சம்பிரதாயம். பாக்கி இருக்கிற 3 கேட்டகிரியில் உள்ள பியூப்பிளையும் கூப்பிட்டு, அவர்களையும் அழைத்துப் பேசி, அதற்குப் பிறகு முடிவை அறிவிக்கிறேன் என்று சொன்னால், நீ முடிவு அறிவிக்கிறேன் என்று சொன்னதே தப்பு, நாங்கள் போராடித்தான் தீருவோம்; போராடித்தான் வந்தது என்று சொன்னால்தான் அதிலே எங்களுக்கு 'கிக்' இருக்கும் என்று சொன்னால், அதையெல்லாம் நான் தாங்கிக் கொண்டிருக்க முடியாது. அதைப்பற்றி அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்.

பிறகு நம்முடைய எதிர்கட்சித் தலைவர் சொன்ன பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி இங்கே நான் பேச விரும்புகின்றேன். நேற்றைக்கே இதைப்பற்றியெல்லாம் அதிகாரிகளோடும், துறைச் செயலாளர்களோடும் கலந்து பேசி பல அறிவிப்புக்களை இப்போது செய்ய இருக்கின்றேன்.

காவல் துறையை மேலும் வலுப்பபடுத்தவும், செம்மைப்படுத்தவும், நவீனப்படுத்தவும் வாகனங்கள், இயந்திரங்கள், புதிய காவல் அணிப் பிரிவுகள், கடலோர சோதனைச் சாவடிகள், கணிப்பொறிகள்-- பேசப்பரே கூடாது என்று சொன்னாரே அதற்காகக் கணிப்பொறிகள்--இவைகளுக்காக இந்த இரண்டு ஆண்டுகளிலே 47 கோடி ரூபாய் செலவு பண்ணியிருக்கிறோம். 1998-99 க்கு மேலும் 10 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இஃதன்னியில் மத்திய அரசிடமிருந்து 10 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். தொடர்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறோம்.

காவலர் பயிற்சிக் கழகம். நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் சொன்னார்கள் காவலர்களுக்கு அதிகப் பயிற்சி வேண்டுமென்று. இன்று அவர் காவல் துறையைப்பற்றி தனித் தனியே எதுவும் பேசவில்லை. பொதுவான உபதேசங்கள், நம்முடைய காவல் துறைக்கு, ரொம்ப அருமையான உபதேசத்தினை நம்முடைய லத்தீப் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாடு காவல் துறையின் அனைத்து அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும், புதிதாக சீருடைப் பணிக்கு தேர்வு செய்யப்படுபவர்களுக்கும் உயர்தரப் பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன் ரூபாய் 20 கோடி செலவில் தமிழ்நாடு காவல் பயிற்சிக் கழகம் நிறுவ தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) திரு. லத்தீப் அவர்கள் சொன்ன கருத்து. இக்கழகம், மாவட்ட அளவில் பயிற்சி மையங்களில் நடைபெறும் பயிற்சிகளை ஒருங்கிணைக்கும் உயரிய தலைமைக் கழகமாகவும் செயல்படவுள்ளது. பயிற்சிகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான இந்திய அரசின் மானியத்தையும் இதற்குப் பயன்படுத்திக் கொள்ள அரசு உத்தேசித்துள்ளது. சென்னை வண்டலூர் அருகிலே இக்கழகம் அமைக்கப்பட சுமார் 133 ஏக்கர் நிலத்தை காவல் துறைக்கு மாற்றம் செய்ய ஆணை வழங்கப்பட்டுவிட்டது. அங்கு காவலர் பயிற்சிக் கழகம் நிறுவுதல் தொடர்பாக காவல் துறை தலைமை இயக்குநர் மதிப்பீடுகளைத் தயாரித்து வருகிறார். உரிய உள்கட்டுமான வசதிகளோடு காவலர் பயிற்சிக் கழகம் விரைவில் தொடங்கப்படும்.

நண்பகல் 12-00

அடுத்து காவலர் பயிற்சிப் பள்ளி. காவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுவதற்காக, முதற்கட்டமாக, மூன்று நிரந்தரக் காவல் பயிற்சிப் பள்ளிகள் உருவாக்கப்படவுள்ளன. அதற்காக 1.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்று காவலர் தங்கும் விடுதிகள் கட்டப்படவுள்ளன. தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 25 காவல் நிலையங்களுக்கு, முதற்கட்டமாக, ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டடங்கள் கட்டப்படவுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது தமிழ்நாடு அதிரடிப் படையினர் தலைமையகம் இயங்கும் 'மருதம்' வளாகத்தில் மற்றுமொரு மேல்தளம் இருபது இலட்ச ரூபாய் செலவில் கட்டப்படவுள்ளது. சென்னை, எழும்பூரில் காவல் துறை ஆணையர் அலுவலக வளாகத்தில் உள்ள அலுவலர்களின் உணவுக்கூட இரண்டாவது மாடியில், குளிர் சாதன வசதியோடுகூடிய கூட்ட அரங்கம் ஒன்று 25 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்படவுள்ளது. விருதுநகரில், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு 16 இலட்ச ரூபாய் செலவில் புதிய குடியிருப்பு கட்டப்படும். தடய அறிவியல் துறையில் ஒரு குடிநீர் வழங்கல் திட்டம் ஒரு இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்படும். தடய அறிவியல் துறையில், மானிடவியல், வெடி மருந்துகள், ஆவணங்கள் மற்றும் பத்திரங்கள் ஆகிய பிரிவுகளுக்கு 1.68 இலட்ச ரூபாய் செலவில் சீர்வளி வசதி செய்து தரப்படும். அறிவியல் உதவியாளர் பதவி 2.75 இலட்ச ரூபாய் செலவில் அறிவியல் அலுவலர் பதவியாக நிலை உயர்த்தப்படும். ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் ஒரு டி.எம்.ஈ. அடர்த்திவீத அளவை மீட்டர் வாங்கப்படும். 15 இலட்ச ரூபாய் செலவில் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வுக் கூடத்திற்கு மூன்று டி.எஸ்.டி. ஸ்கேனர் வாங்கப்படும். மேற்கண்ட திட்டங்களுக்காக மொத்தம் 3.67 கோடி ரூபாய் செலவிடப்படும்.



காவல் பயிலரங்கம். மனித உரிமைகள், மனித நேயம் பற்றிய காவல் துறையினுடைய பயிலரங்கம். பொதுமக்களிடையே காவல் துறையின் மதிப்பை உயர்த்தும் வகையில் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் மாநகரக் காவல் ஆணையர்கள் மூலமாக ஒவ்வொரு மாதமும் பொதுமக்கள் மற்றும் காவல் துறையினர் பங்கேற்கும் பயிலரங்கங்களை நடத்தலாம் என அரசு உத்தேசித்துள்ளது. மனித உரிமைகள் மற்றும் மனித நேயம் தொடர்பான விழிப்புணர்வைப் பொதுமக்கள் மற்றும் காவல் துறை மட்டத்தில் ஏற்படுத்த இப்பயிலரங்குகள் உதவும். குறைந்தபட்சம் காலாண்டிற்கு ஒரு முறை இந்தப் பயிலரங்கங்கள் நடத்தப்பட வேண்டுமென முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்குரிய செலவினத்திற்கு அரசு முதல் தவணையாக ரூ. 10 இலட்சம் அளித்துள்ளது.

வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 386 காவல் நிலையங்களில் 79 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட கடந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டது. அந்தக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதைத் தொடர்ந்து இந்த

ஆண்டில் கட்டடம் கட்டத் தேவையான நிலம் உள்ள பின்வரும் 40 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கு ஏற்கெனவே ஒதுக்கீடு செய்துள்ள ஒரு கோடி ரூபாய்க்கு மேல் கூடுதலாக 60 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். அவையாவன:

**காஞ்சிபுரம் மாவட்டம்**

1. கேளம்பாக்கம்
2. மறைமலைநகர்
3. சூணாம்பேடு

**கடலூர் மாவட்டம்**

4. நடுவீரப்பட்டி

**விழுப்புரம் மாவட்டம்**

5. திருவெண்ணெய்நல்லூர்
6. கச்சிராப்பாளையம்

**திருவண்ணாமலை மாவட்டம்**

7. மேலசங்கம்
8. பிரம்மதேசம்
9. வடவனகருப்பட்டி

**வேலூர் மாவட்டம்**

10. கே.வி. குப்பம்
11. வேலூர் குற்றம் (வடக்கு)
12. வேலூர் (வடக்கு) மகளிர்

**ஈரோடு மாவட்டம்**

13. காங்கேயம்
14. தாராபுரம்
15. பவானி



**விருதுநகர் மாவட்டம்**

16. வீரசோழம்

**சிவகங்கை மாவட்டம்**

17. புலன்குறிச்சி
18. ஆரவாயல்
19. தேவகோட்டை

**கரூர் மாவட்டம்**

20. தென்னிலை
21. பழவிடுதை

**தஞ்சாவூர் மாவட்டம்**

22. அதிராமபட்டினம்

**மதுரை மாவட்டம்**

23. அப்பன்திருப்பதி
24. சமயநல்லூர்

**இராமநாதபுரம் மாவட்டம்**

25. இராமநாதபுரம் பஜார்
26. அபிராமம்

**தருமபுரி மாவட்டம்**

27. களவாய்
28. சிங்காரம்பட்டி
29. மகாராஜகனை
30. காவேரிப்பட்டினம்
31. அதியமான் கோட்டை
32. தோப்பூர்
33. பூமிடி
34. எரையூர்

**தூத்துக்குடி மாவட்டம்**

35. நாசரேத்

36. கொப்பம்பட்டி

37. பசுவன்தனை

38. கோவில்பட்டி

39. சூரன்குடி

40. சாயர்புரம்

காவல் துறைக்கான கூடுதல் வாகனங்கள் வாங்க, 1997-98 ஆம் ஆண்டில் 9.02 கோடி ரூபாய் செலவில் 320 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டன.

பிற்பகல் 12-05

காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ், மேலும் 69 வாகனங்கள், 2.34 கோடி ரூபாய் செலவில் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பயனற்றவை என்று கழிவு செய்யப்பட்ட 227 வாகனங்களுக்குப் பதிலாக, 1998-99ல், புதிய வாகனங்கள் வாங்க, 10.35 கோடி ரூபாய் செலவாகும். நிதிநிலை அறிக்கையிலே, ஒதுக்கீடு செய்துள்ள 4 கோடி ரூபாய்க்கு மேலாக கூடுதலாக 6.35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

ரோந்துப் பணிகளை மேம்படுத்த, கூடுதல் வாகனங்கள். கோயம்புத்தூர் காவல் ஆணையகத்திற்கு 10 வாகனங்கள்; கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு 5 வாகனங்கள்; சென்னை ஆணையகத்திற்கு 10 வாகனங்கள்; செங்கல்பட்டு கிழக்கு காவல் மாவட்டத்திற்கு 5 வாகனங்கள்; மதுரை ஆணையகத்திற்கு 3 வாகனங்கள்-- ஆணையகம் என்றால் Commissionerate-மதுரை மாவட்டத்திற்கு 3 வாகனங்கள்; திருநெல்வேலி ஆணையகத்திற்கு 3 வாகனங்கள்; திருநெல்வேலி மாவட்டத்திற்கு 3 வாகனங்கள்; சேலம் ஆணையகத்திற்கு 3 வாகனங்கள்; சேலம் மாவட்டத்திற்கு 3 வாகனங்கள்; திருச்சி ஆணையகத்திற்கு 3 வாகனங்கள்; திருச்சி மாவட்டத்திற்கு 3 வாகனங்கள். ஆக, 54 ரோந்து வாகனங்கள் வாங்க தொடராச் செலவினம், ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய்.



காவல் நிலைய தளவாடச் சாமான்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இதுகுறித்துக் குறிப்பிட்டார்கள். காவல் நிலையங்களுக்கு வரும் பொதுமக்கள் அமர்வதற்கும், காவலர்கள் அமர்ந்து பணியாற்றுவதற்கும், காவல் நிலையங்களில் தற்போது போதுமான அடிப்படை வசதிகள் இல்லை; இவ்வசதிகளை அங்கே ஏற்படுத்துவதற்கும், போதுமான நிதி ஒதுக்கீடு இல்லை என்ற குறை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதைப் பரிசீலித்து, பொதுமக்கள் உட்காருவதற்காக நாற்காலிகள், காவலர்களுக்குத் தேவையான மேசை, நாற்காலிகள், பதிவேடுகளை வைத்துக் கொள்வதற்குத் தேவையான அலமாரி போன்ற பொருள்கள் வாங்க, ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் 20 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமாத்திரமல்லாமல், காவல் நிலையங்களில், இதுவரையில் இல்லாத ஒன்று அவசிய செலவின வசதி. காவல் நிலையங்களில் ஏற்படும் சில்லறைச் செலவினங்களுக்குப் போதுமான பணம் ஒதுக்கப்படவில்லை என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஆண்டுக்கு 5,000 ரூபாய் சில்லறைச் செலவுக்காகப் பணம் ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்காரணமாக அரசுக்கு ஒரு கட்டச் செலவினமாக 69 இலட்ச ரூபாய் ஆகும்.

அதுபோல, ஒவ்வோர் ஆயுதப் படை முகாமிற்கும் ஆண்டொன்றிற்கு 10 ஆயிரம் ரூபாய் சில்லறைச் செலவுக்காக ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

நாகை மாவட்டக் காவல் அலுவலகம். 1971 முதலாகவே, அங்கே இந்த அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. எனவே, நாகை வெளிப்பாளையம் என்ற இடத்திலே அனைத்துக் காவல் அலுவலகங்களும் ஒரே இடத்திலே செயல்பட வசதியாக 62 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடத்தை, நாகை மாவட்டக் காவல் தலைமை அலுவலகத்தைக் கட்ட இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

காவலர்களுடைய நலன் காக்க, நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லை என்று குமாரதாஸ் அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். ஏதோ 4% தான் இருக்கிறது; அதை 6% ஆக்க வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். நாம் அதிலே என்றும் குறை வைக்கவில்லை. நான் முதலிலே சொன்னதெல்லாம், காவல் துறையினை

நவீனப்படுத்துவதற்காகச் சொன்ன செலவுகள். காவலர்களுடைய நலனுக்காக என்று எடுத்துக் கொண்டால், நிறையச் செய்திருக்கிறோம். 1991-92 என எடுத்துக் கொண்டோம் என்றால், 89 இலட்சம் ரூபாய் தான் செலவு செய்திருக்கிறார்கள். காவலர் நலனுக்காக. 1992-93லே, 12.80 கோடி ரூபாய்; 1993-94லே, 16 கோடி ரூபாய்; 1994-95லே 20 கோடி ரூபாய். 1995-96லே, 14½ கோடி ரூபாய். இவையெல்லாம் 5 வருடங்களுக்கான செலவு. கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, 1996-97ல் 52 கோடி ரூபாய்; 1997-98லே, 99 கோடி ரூபாய். 5 வருடங்களிலே, காவலர் நலனுக்காக முன்பிருந்த அரசு செலவழித்தது 65 கோடி ரூபாய். 2 வருடங்களிலே, நாம் செலவழித்தது, 151 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இதைக்கூட, பத்திரிகையிலே செய்தியைப் பார்த்துவிட்டு, அந்த அம்மா அறிக்கை விட்டாலும் விடுவார்; 'இவையெல்லாம் நான் நினைத்தது' என்று. (சிரிப்பு) 'நான் நினைத்ததை, அவர் கொடுத்திருக்கிறார்' என்று சொல்வார். பரவாயில்லை. நினைத்ததற்காகவாவது நன்றி கூறுவோம்.

காவலர்களுக்கான உணவுப் படி. சட்டம்-ஒழுங்கு மற்றும் அவசரகாலப் பணிகளில், காவலர்களை ஈடுபடுத்தும்போதும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளைக் கவனிக்க மற்ற இடங்களுக்கும், மாவட்டங்களுக்கும் அனுப்பும் சமயங்களிலும் காவலர்களுக்கு உணவுப் படி வழங்கப்படுகிறது. 1997 ஆம் ஆண்டில், உணவுப் படி பின்வருமாறு இந்த அரசால் உயர்த்தப்பட்டது: இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு 16 ரூபாயிலிருந்து 25 ரூபாய் என 1997லே உயர்த்தினோம். முதல் நிலைக் காவலர்கள், தலைமைக் காவலர்களுக்கு 20 ரூபாயிலிருந்து 30 ரூபாய். உதவி ஆய்வாளர், ஆய்வாளர்களுக்கு 30 ரூபாயிலிருந்து 45 ரூபாய். தற்போது வழங்கப்படும் உணவுப் படி போதுமானதாக இல்லை எனவும், ஆகவே உயர்த்தித் தர வேண்டுமென்றும் காவலர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு 25 ரூபாயிலிருந்து 35 ரூபாய் எனவும், முதல் நிலைக் காவலர், தலைமைக் காவலர்களுக்கு 30 ரூபாயிலிருந்து 40 ரூபாய் எனவும் உயர்த்தப்படுகிறது.

பிற்பகல் 12-10

காவல் துறையிலே பணியாற்றும் காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை தற்பொழுது 12 கிலோ அரிசி மானிய



விலையிலும், 8 கிலோ அரிசி பொது விநியோக விலையிலும் வழங்கப்படுகிறது. இனிமேல் 20 கிலோ அரிசியும் மானிய விலையிலே காவலர்களுக்கு வழங்கிட வேண்டுமென இவ்வரசு முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை 84,000 ஆகும். இதற்காக ஆண்டொன்றுக்குக் கூடுதலாக 1½ கோடி ரூபாய் செலவாகும்.

சீருடைப் படி. சீருடையைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். அந்த உடை எப்படி இருக்கலாம் என்று நானும் அவர்களும் கலந்து பேசி-மகளிர் காவலர்களுக்கான உடை எப்படி இருக்கலாம் என்று நான், அவர், அக்காள் பொன்னம்மாள் எல்லோரும் உட்கார்ந்து கலந்து பேசி- மூன்று பேர் கொண்ட கமிட்டி இருப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள். முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ஆகிய மூன்று பேரைக் கொண்ட ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டி அந்தச் சீருடையைப் பற்றி முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் மெஜாரிட்டி அவர்கள்தான் இருக்கிறார்கள். (சிரிப்பு)

1996 ஆம் ஆண்டில் இந்த அரசு பொறுப்பேற்றபின் காவலர்கள், தலைமைக் காவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட சீருடைப் படி 25 ரூபாய் என்பதை 30 ரூபாய் என உயர்த்தி வழங்கப்பட்டது. தற்போது, சீருடைப் படி காவல் பணியாளர்களுக்குப் பின்வருமாறு மீண்டும் உயர்த்தி வழங்கப்படவிருக்கிறது: காவல் கண்காணிப்பாளர்கள், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு 40 ரூபாய் என்பது 60 ரூபாய் என்றும், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு 30 ரூபாய் என்பது 50 ரூபாய் என்றும் தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்கள் ஆகியோருக்கு 30 ரூபாய் என்பது 40 ரூபாய் என்றும் உயர்த்தி வழங்கப்படுகிறது. இதன்காரணமாக அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு கோடியே பதினெட்டு இலட்ச ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

காவலர்களுக்கு வழங்கப்படும் சீருடை எப்படி வழங்கப்படுகிறது என்றால் தற்போது சீருடை தைத்து வழங்கப்படுகிறது. சரியாக அளவெடுத்துத் தைக்கப்படாத காரணத்தால் இந்தச் சீருடைகளை மறுபடியும் தைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறதென்றும், இதனால்

அரசு வழங்கும் சீருடையைக் காவலர்கள் சரியாகப் பயன்படுத்த முடிவதில்லை என்றும் குறிப்பிட்டு, தங்களுக்கு சீருடைக்குரிய துணியை வழங்குமாறு கோரி வருகிறார்கள். இக்கோரிக்கையினை ஏற்று காவலர்கள் அவரவர் விருப்பப்படி சீருடைகளைத் தைத்தோ அல்லது துணியாகவோ பெற்றுக்கொள்ளலாம் என அரசு முடிவெடுத்துள்ளது. மாதர் சங்கங்கள்மூலம் தைத்துக்கொள்வதாக இருந்தால் தையல் கூலி ரூபாய் 65 என்றிருப்பது ரூபாய் 75 ஆகவும் உயர்த்தப்படுகிறது.

காவலர் குடியிருப்புகள். அதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார்கள். காவலர் குடியிருப்புகள் மற்றும் காவல் துறைக் கட்டடங்களைச் சிறந்த முறையில் பராமரிப்பதற்கும், பழுதுபார்ப்பதற்கும் ஏதுவாக, இதுவரை பொதுப் பணித் துறையால் செய்யப்பட்டு வந்த இப்பணிகள் 1-4-1998 முதல் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இப்பணிகளுக்காக இந்த ஆண்டு ரூபாய் 5 கோடி செலவிட அரசு உத்தேசித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகை மாவட்ட வாரியாகப் பிரித்துக் கொடுக்கப்படும். மாவட்டங்களிலே உள்ள காவலர் குடியிருப்புகளில் அவசியத் தேவைகளின் அடிப்படையில் இத்தொகை செலவிடப்படும்.

ஏற்கெனவே ஆண்டொன்றுக்கு 1500 வீடுகள் என்ற அளவில் கட்டப்பட்டு வந்தன. சென்ற ஆண்டு முதல் ஆண்டொன்றுக்கு 2500 வீடுகள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு, அந்த கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. அதுபோல, 1998-99ஆம் ஆண்டிலும் மேலும் 2500 வீடுகள் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 5000 வீடுகள் காவலருக்கென இந்த அரசின் முயற்சியால் கட்டப்பட்டு வருகின்றன. இதற்கென 85 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திலேயுள்ள 28,792 காவலர் குடியிருப்புகளில், மின்விசிறி உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை 17,652. மின்விசிறிகள் இல்லாத 11,140 குடியிருப்புகளுக்குக் காவலர் வீட்டு வசதிக் கழகத்தின்மூலம் 1 கோடி ரூபாய் செலவில் இந்த ஆண்டு மின்விசிறிகள் இணைத்துக் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 12-15

அடுத்து, தமிழ்நாடு காவலர் உடல் நல நிதித் திட்டத்தின்கீழ் ஆண்டு மானியம் தற்போது 30 இலட்ச ரூபாய் வழங்கப்படுகிறது. அந்த மானிய உதவி இந்த ஆண்டு 50 இலட்ச ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

காவல் துறையிலே தற்போது தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்களுக்கு நாளொன்றுக்கு ரூ. 20 வீதம் மிகைப் பணிக்கொடை வழங்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு இந்த Extra Time Remuneration 20 ரூபாய் என்பதற்குப் பதிலாக 50 ரூபாய் என உயர்த்தி வழங்கப்படும். இதன் காரணமாக 77,473 காவல் பணியாளர்கள் பயன்பெறுவார்கள். 11 கோடியே 16 இலட்ச ரூபாய் கூடுதல் செலவாகும். அடுத்து Risk Allowance இடர் படி. காவலர்கள் ஆபத்து நிறைந்த சூழ்நிலைகளில் பணிபுரிவதால் அவர்களுக்கு மாதந்தோறும் இடர் படி Risk Allowance வழங்கப்பட்டு வருகிறது. காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை 20 ரூபாய் என்றும், துணைக் கண்காணிப்பாளர், கூடுதல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு 30 ரூபாய் என்றும் இடர் படி இருந்து வருகிறது. இனிமேல் இந்த இடர் படி பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படும்:

காவலர் முதல் ஆய்வாளர் வரை ரூபாய் 50 என்றும், துணைக் கண்காணிப்பாளர் மற்றும் கூடுதல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு ரூ. 60 என்றும் வழங்கப்படும். இதன்மூலம் அரசுக்கு 5.16 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

காவல் துறையிலே பதவி உயர்வு இல்லாமல் தேக்க நிலை ஏற்பட்டு இருப்பதாக பத்திரிகைகள் எல்லாம் எழுதுகின்றன. எல்லாப் பத்திரிகைகளும் எழுதுகின்றன. தெரிந்தோ, தெரியாமலோ அல்லது தெரிந்தும் வேண்டுமென்றோ சில பத்திரிகைகள் எழுதுகின்றன. அதில் ஒரு குறிப்பை மாத்திரம் படித்துக் காட்டுகிறேன். இதிலே Director-General of Police, Additional Director-General of Police எல்லாம் தேவை இல்லை என்று கருதுகிறேன். Additional Superintendent of Police என்று எடுத்துக்கொண்டால் 55 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Deputy Superintendent of Police என்று எடுத்துக்கொண்டால் 130 பதவி உயர்வுகள்

தரப்பட்டிருக்கின்றன. Inspector of Police (Taluk) என்று எடுத்துக்கொண்டால் 255 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Inspector of Police (Armed Reserve) என்று எடுத்துக்கொண்டால் 53 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Sub-Inspector of Police (Taluk) என்று எடுத்துக்கொண்டால் 173 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Sub-Inspector of Police (Armed Reserve) என்று எடுத்துக்கொண்டால் 208 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Head Constable என்று எடுத்துக்கொண்டால் 9000 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Grade-I Police Constable என்று எடுத்துக்கொண்டால் 10106 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Women Head Constable என்று எடுத்துக்கொண்டால் 400 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. மொத்தம் 20,500 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Actual Strength-80322; இதிலே Percentage of Actual Strength benefitted through promotion--25.52%

அதாவது, 25½ சதவிகிதம் பதவி உயர்வு தரப்பட்டிருக்கிறது. மேலும் இவர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பது என்ற அடிப்படையில் 15 ஆண்டுகள் பணி செய்த காவலர்களுக்கு தலைமைக் காவலர் பதவி உயர்வு அளிக்கப்படும் என்று சென்ற ஆண்டு இந்த அரசு அறிவித்ததைத் தொடர்ந்து 9000 காவலர்கள், தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து இப்போது தலைமைக் காவலர்கள் தங்களையும் உதவி ஆய்வாளர்களாக (S.I.) பதவி உயர்வு செய்ய வேண்டுமென்று கோரி வருகின்றார்கள்.

இதனையும் அரசு பரிவுடன் கவனித்து 10 ஆண்டுகள் தலைமைக் காவலர்களாகப் பணி முடித்தவர்களுக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் (Special S.I.) பதவி உயர்வு அளித்து மற்ற உதவி ஆய்வாளர்களுக்கு இணையான சம்பளத்தை இவர்களுக்கும் வழங்கிடலாம் என இந்த அரசு தீர்மானித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலம் இரண்டாம் நிலைக் காவலராகப் (Second Grade) பணியில் சேரும் ஒருவர் 25 ஆண்டுகளில் உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அடுத்து, Ministerial Staff— அமைச்சுப் பணியிடங்கள். காவல் துறை அமைச்சுப் பணியாளர்கள் புதிய பணியிடங்களைத்



தோற்றுவிக்க வேண்டுமென்று பலகாலமாகக் கோரி வருகின்றார்கள். குறிப்பாக புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களிலும், புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட ஆயுதப்படைப் பிரிவிலும் போதுமான அமைச்சுப் பணியாளர்கள் இல்லையெனவும், அவ்விடங்களுக்குப் போதிய பணியிடங்களைத் தோற்றுவிக்க வேண்டுமெனவும் கோரி உள்ளார்கள். அரசு இக்கோரிக்கையை ஏற்று, தேவையான புதிய அமைச்சுப் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும். அதற்கான பிரேரணைகள் காவல் துறைத் தலைவரிடமிருந்து பெற்று ஆணைகள் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

காவல் துறையில் பணிபுரியும் காவலர்கள் தங்களது குறைகளைத் தங்களுடைய மேல் அதிகாரிகளுக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ சரியான முறையில் தெரிவிக்க முடிவதில்லை என்ற குறை அவர்கள் மத்தியிலே நெடுங்காலமாக இருந்து வந்தது. காவல் துறையில் காவலர்களின் குறைகளைக் களைய பல நடைமுறைகள் இருந்தாலும் அவை பலகாலமாக முழுமையாகச் செயல்படவில்லை என்பதால் காவலர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக புதிய அணுகுமுறைத் திட்டம் ஒன்றைப் புகுத்துவதுகுறித்து அரசு பரிசீலித்தது. அதன்படி காவலர்கள் தங்களுடைய குறைகளை சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகள் விரைந்து தீர்த்து வைப்பதற்கும், தக்க செயல்முறை நடவடிக்கைகளை வரையறுத்து அவற்றைத் தவறாது கடைபிடிக்க வேண்டுமென்றும் அனைத்து மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் மாநகரக் காவல் துறை ஆணையர்கள் ஆகியோருக்கு அறிவுரைகள் வழங்கி அரசு சமீபத்திலே ஆணை பிறப்பித்துள்ளது. சென்னை காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திலும், அரசுத் தலைமைச் செயலகத்திலுள்ள உள் துறையிலும், காவலர்களின் குறைகளைக் களைவதற்காக தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-20

மதுவிலக்குபற்றியும் கள்ளச் சாராயம்பற்றியும் நிரம்பப் பேசப்பட்டிருக்கிறது. இந்த மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு முன்பு தனியாகச் செயல்பட்டு வந்தது. இதைக் காவல் துறையிலுள்ள மற்ற பிரிவுகளோடு இணைத்தால் மதுவிலக்கு நல்ல முறையிலே அமலாகும் என்ற கருத்துக்கள் கூறப்பட்டன. அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கலைக்கப்பட்டு

மாவட்ட காவல் துறையோடு இணைக்கப்பட்டது. அதனுடைய செயல்பாடுகள் மிகவும் மந்தமான நிலையில் இருந்தன என்பதற்குப் புள்ளிவிவரங்களே அத்தாட்சி. குமாரதாஸ் குறிப்பிட்டாரே அந்த மூன்று இலட்சம், அதுவே குறைவு என்று நான் சொன்னேன். 1996ஆம் ஆண்டு இந்த மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு இருந்தபோது, 1996ஆம் ஆண்டிலே 5,17,799 வழக்குகள்; ஆனால் அந்தப் பிரிவு எடுக்கப்பட்ட பிறகு 3,05,054 என்று அது குறைந்து விட்டது. கைது செய்யப்பட்டவர்களுடைய எண்ணிக்கையும் அப்படித்தான். 1996-இல் மதுவிலக்குக் குற்றத்திலே கைது செய்யப்பட்டவர்கள் 4,91,141 பேர். இதை அறிவித்த பிறகு 2,96,000 என்று குறைந்து விட்டது. எனவே, கடந்த இரண்டு ஆண்டுகளிலே ஏற்பட்ட தொய்வு நிலையைக் கருத்திலேகொண்டு, கள்ளச் சாராயத்தை ஒழித்து சமுதாயத்தில் ஏற்படும் பொருளாதாரச் சீர்கேட்டைத் தடுக்கும் நோக்கில், கள்ளச் சாராய ஒழிப்பு போன்ற வேலைக்கு சம்பந்தப்பட்ட பணிகளைத் தனித்து திறம்பட கவனிப்பதற்காக முன்பு இருந்ததைப் போலவே ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது-மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு-(மேசையைத் தட்டும் ஒலி) ஓராண்டு காலத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களின் காரணமாக மீண்டும் அந்தப் பிரிவு அமைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விருதுநகரில் 31-3-1998 அன்று, மாவட்ட ஆயுதப்படை காவலர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சுமார் 250 நபர்கள் காவலர்களுடைய சில பணிக்கால கோரிக்கைகளுக்காகத் திடீரென்று சாலை மறியலில் ஈடுபட்டார்கள், கட்டுப்பாடு உள்ள காவல் துறையில் இத்தகைய செயல்கள் ஏற்புடையது அல்ல என்பதால் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த 27 காவலர்கள் விருதுநகரிலிருந்து பணி மாற்றம் செய்யப்பட்டார்கள். அதில் தற்போது 26 காவலர்கள் தங்கள் குடும்பத்தினர் சிலர், வேண்டாத நபர்களின் தூண்டுதலால் இச்செயலில் ஈடுபட்டதாகக் கூறி இந்தச் செயல்களுக்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்பும் கோரி, தங்களுக்கு வழங்கப்பட்ட பணி மாற்றத்தை ரத்து செய்து ஏற்கெனவே பணி செய்த இடத்தில் பணிபுரிய ஆணையிடுமாறு வேண்டிக்கொண்டார்கள். காவலர்களுடைய நலனில் எப்போதும் அக்கறை கொண்ட இந்த அரசு அவர்களுடைய கோரிக்கையை மனிதாபிமான அடிப்படையில் ஏற்று அவர்களுக்கு வழங்கிய பணி மாற்றத்தை ரத்து செய்து



அந்தப் பணி மாற்றத்திற்கு முன்பு எங்கெங்கே பணிபுரிந்தார்களோ அங்கங்கேயே பணிபுரிய ஆணையிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தீயணைப்பு நிலையங்களைப் பலபேர் கேட்டிருக்கிறார்கள். ஒன்றுகூட கொடுக்கப் போவதில்லை. ஏனென்றால், முந்தைய ஆட்சிக் காலத்தில், 5 ஆண்டு காலத்திலே, 29 தீயணைப்பு நிலையங்கள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தி.மு.க. ஆட்சியில் இந்த இரண்டு வருடத்தில் 47 தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இந்த 47 தீயணைப்பு நிலையங்களுக்குத் தேவையான முழு அடிப்படை வசதிகளை உருவாக்குவதில் இந்த அரசு இந்த ஆண்டு கவனம் செலுத்தப் போகிறது. இல்லாவிட்டால், ஒவ்வொருவரும் கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இருப்பீர்கள். தினமும் காவல் துறைக்கு ஒரு கேள்வி, தீயணைப்புத் துறைக்கு ஒரு கேள்வி, புதிய வளாகங்களுக்கு ஒரு கேள்வி என்று. இந்தக் கேள்விகள் எனக்கு வரும். அந்தக் கேள்விகளிலே ஒரு கேள்வியாக எப்போது கட்டடம் கட்டப்படும் என்று கேட்பீர்கள், எப்போது தீயணைப்புத் துறைக்கு வசதிகளைச் செய்து தருவீர்கள் என்று கேட்பீர்கள். அந்தக் குறையைத் தீர்க்க இந்த ஆண்டு பூராவும், 47 தீயணைப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டவைகளில், இவைகளையெல்லாம் செம்மைப்படுத்த அடிப்படை வசதிகளைக் கவனிக்கத்தான் நாங்கள் கருதியிருக்கிறோம்.

புதிய காவல் நிலையங்கள். பாளையம் அமரமூர்த்தி, அரியலூர் அவர்கள் கேட்டார்கள். பெரம்பலூர் மாவட்டத்திலே வெங்கலூரில் ஒன்று உண்டு. அதற்குக் கை தட்டலாம். (மேசையைத் தட்டும் ஒலி) சங்ககிரி முத்து கேட்டது நாமக்கல் மாவட்டத்தில் தேவூர் பேரூராட்சியிலே.

பிற்பகல் 12-25

தூத்துக்குடி பெரியசாமி கேட்டது, தூத்துக்குடியிலே தாளமுத்து நகர்; முல்லைவேந்தன் கேட்டது, மகேந்திரமங்கலம், தருமபுரியிலே; பெருந்துறை பெரியசாமி கேட்டது, ஈரோடு மாவட்டம் காஞ்சிக்கோயில்.

பெரணமல்லூர் பாண்டுரங்கன் அவர்களும், அமைச்சர் பிச்சாண்டி அவர்களும் சேர்ந்து--கேட்டது, திருவண்ணாமலை மாவட்டம், பொன்னூரிலே. உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். அன்றைக்குக் கேள்வி--கேட்டபோது, 'பொன்னூர் பரிசீலிக்கப்படும்' என்று சொன்னேன். அவர் மறுபடியும் கேள்வி கேட்டார். பரிசீலிக்கப்படுவது குற்றம் என்றால் வாபஸ் வாங்கிக் கொள்ளலாம் என்று சொன்னேன். இப்போது கொடுத்தாகிவிட்டது.

பவானி பாலசுப்பிரமணியம் கேட்டது, ஈரோடு மாவட்டம், ஆப்பக்கூடல்; குழந்தை தமிழரசன் கேட்டது, கடலூர் மாவட்டம், விருத்தாசலம் நகரில் போக்குவரத்துக் காவல் நிலையம்;

ஆலங்குடி சுயேட்சை உறுப்பினர் வெங்கடாசலம் கேட்டது, (குறுக்கீடு) அவர் இன்று இல்லையா? அதை மாற்றிக் கொடுத்து விடலாம். (சிரிப்பு) அவர் கேட்டது, கரம்பக்குடியிலே; வாசுகி முருகேசன், கரூர் நகர் போக்குவரத்துக் காவல் நிலையம்; தீரன், ஆண்டிமடம், இரும்புலிகுறிச்சி; அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் கெங்கவள்ளி; முகையூர் ஏ.ஜி. சம்பத் கேட்டது, விழுப்புரம் மாவட்டத்திலே கண்டாச்சிபுரம்; திருமங்கலம் முத்துராமலிங்கம் கேட்டது, மதுரை மாவட்டம் கூடக்கோயில்; ஓசூர் வெங்கடசாமி கேட்டது, தருமபுரி மாவட்டம், உத்தன்னபள்ளி; சோழவந்தான் லா. சந்தானம் கேட்டது, மதுரை மாவட்டம் பாலமேடு பேரூராட்சி;

புறக்காவல் நிலையங்கள் படிப்படியாக நிதி வசதிக்கேற்ப முழுக்காவல் நிலையங்களாக எல்லாப் புறக்காவல் நிலையங்களும் தரம் உயர்த்தப்பட இந்த ஆண்டு முதலே வேலை தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதி உறுப்பினர் மணிவர்மா, தச்சம்பட்டில் காவல் நிலையம் வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டார். அதனால் கொடுக்கப்படுகிறது. இதையே அவர் வழக்கமாக வைத்துக் கொள்ளக்கூடாது என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



***திரு. இரா. தாமரைக்கனி:** என்னுடைய தொகுதியில், மல்லியில் புதிய காவல் நிலையம் வேண்டுமென்று கேட்டேன். எல்லோருக்கும் கொடுத்து விட்டீர்கள். எனக்கு மட்டும் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** 'பகைவனுக்கும் அருள்வாய் நெஞ்சே' என்ற அளவில் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடல் நலிவுற்ற நிலையிலும், ஏறத்தாழ ஒன்றேகால் மணி நேரம் பதில் அளித்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு பதில் தேவையில்லை. காவல் துறை ஊழியர்களுக்குப் பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டது வரவேற்கக்கூடியது. ஆனால், ஊர்க்காவல் படையில் பணிபுரியக்கூடியவர்களுக்கு, அவர்கள் பணியிலே இருக்கிறபோது, ஒரு நாளைக்கு ரூ. 14 வழங்கப்படுகிறது. இரவு நேரத்தில் பணி புரியக்கூடியவர்களுக்கு ரூ. 31 வழங்கப்படுகிறது. இதுசம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதுவும் அறிவிக்கவில்லை. அவர்கள் பணியில் இருக்கிறபோது, குறைந்தபட்சமாக 50 ரூபாயாவது கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்கிறார்கள்.

அதேபோன்று, இரண்டாவதாக, காவல் துறை ஆய்வாளர் பயிற்சியிலே இருக்கக்கூடியவர்களுக்கு, ஒரே படிப்பு, ஒரே பயிற்சி இருந்தும், சட்டம்-ஒழுங்கு, ஆயுதப்படை என்று இரண்டாகப் பிரித்து, அடிப்படைச் சம்பளம் ரூ. 1,500 வழங்குகிறபோது, அதிலே ஒரு பிரிவினருக்கு மட்டும் 1,550 என்று வழங்கக்கூடிய நிலையில், அதிலே உள்ள வித்தியாசத்தை அவர்கள் போக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள். எனவே, இவை இரண்டையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 2--மாநில ஆயத் தீர்வைத் துறை**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 2--மாநில ஆயத் தீர்வைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்ளுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.



**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம் இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 17,01,87,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 12-30

**(ஆ) கோரிக்கை எண் 15--காவல் துறை**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 15--காவல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன் இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். ஆர். சேகரன்.

**திரு. ஆர். ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார், இருக்கையில் இல்லை. திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வி. அய்யலுசாமி.

**திரு. வி. அய்யலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி. அய்யலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"காவல் துறை பற்றிய 15ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 709,29,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



### (இ) கோரிக்கை எண் 16--தீயணைப்புப் பணிகள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 16--தீயணைப்புப் பணிகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ப. கோவிந்தன் இருக்கையில் இல்லை. திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வி. கே. லட்சுமணன் இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார் இருக்கையில் இல்லை. திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. தங்கமணி.



**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர். ஆர். சேகரன்.

**திரு. ஆர். ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 57,46,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26-5-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12-32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

D V21,31 'N98 N98.58.2

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*157.* சென்னை, திருவாளர்கள் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் *1991-92* மற்றும் *1992-93*ஆம் ஆண்டுகளுக்கென்று அக்கழகத்திற்குத் தேவையான சிறுநூல், படிவங்கள் மற்றும் ஏனைய பொருள்களை அச்சிடுவதற்காக, மாநிலத்திற்கு வெளியேயிருந்து வாங்கிய கச்சாப் பொருள்களின் விற்பனை மதிப்புத் தொகைக்குச் செலுத்த வேண்டிய வரித் தொகையைச் செலுத்துவதிலிருந்து விலக்களித்து, வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் *12-02-1998*ஆம் நாளிட்ட *51*ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை [*1959*ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவின் கீழ், பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*158. 1959*ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் *26-2-1998*ஆம் நாளிட்ட *61*ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959*ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*159. 1959*ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் அட்டவணை *1*-ல் திருத்தங்கள் செய்தது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் *7-4-1998*ஆம் நாளிட்ட *107*ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959*ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-

21464.